Registered as Newspaper

# உதயன் சஞ்சீவி

சுடர் : 36 கதிர் : 260 | ஞாயிற்றுக்கிழமை | ஆடி 30 ஆம் நாள் 15 ஓகஸ்ட் 2021 | வள்ளுவர் ஆண்டு 2052

பக்கங்கள்: 16+16 விலை : ரூ.40

செய்தி : 021 493 0000 விளம்பரம்: 021 493 1111

# சுய பயணக்கட்டுப்பாட்டை அனைவரும் பின்பற்றுக

## நாட்டை மீட்பதற்கு தற்போது அதுவே வழி பொதுச்சுகாதார பரிசோதகர்கள் வேண்டுகோள்

கொழும்பு, ஓகஸ்ட் 15

நாடளாவிய ரீதியில் நாளை திங்கட்கிழமை முதல் 7 நாள்கள் பயணக் கட்டுப்பாடுகளை சுயமாகப் பின்பற்றப் பொதுமக்கள் ஒத்துழைக்க வேண்டும்' இவ்வாறு இலங்கை பொதுச்சுகாதாரப் பரிசோதகர்கள் சங்கம் வேண்டுகோள் விடுத்துள்ளது. 15 ➤

## மாகாண எல்லைகளில் முப்படையினர் குவிப்பு

*பயணக்கட்டுப்பாடு இறுக்கம் சோதனைகளும் முன்னெடுப்பு*

கொழும்பு, ஓக. 15

மாகாணங்களுக்கிடையிலான போக்குவரத்துக் கட்டுப்பாடுகள் கடுமையாக்கப்பட்டுள்ள நிலையில், மாகாண எல்லைப் பகுதிகளில் முப்படையினரும் குவிக்கப்பட்டுள்ளனர். அவர்களின் ஒத்துழைப்புடன் பொலிஸாரின் சிறப்புச் சோத 15 ➤

## காணாமற்போன மீனவர் சடலமாக நேற்று மீட்பு!

யாழ்ப்பாணம், ஓக. 15

இரணைதீவில் கடந்த இரு தினங்களுக்கு முன்னர் இடம்பெற்ற படகு விபத்தில் காணாமல்போன மீனவர், மண்டைதீவுக் கடலில் நேற்றுச் சடலமாக மீட்கப்பட்டார். சம்பவம் தொடர்பில் தெரியவருவதாவது:

மன்னாரைச் சேர்ந்த குறித்த நபர் குருநகரிலுள்ள உறவினர் வீட்டில் 15 ➤

## கொவிட் பேரலை உயிரிழப்பு 160

கொழும்பு, ஓக. 15

இலங்கையில் நேற்றுமுன்தினம் மட்டும் 160 பேர் கொரோனாத் தொற்றால் உயிரிழந்தனர். இதுவே நாட்டில் இதுவரை ஒரே நாளில் அதிக கொரோனாக் காவு இடம்பெற்ற நாளாகப் பதிவானது.

சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத் 15 ➤

## கர்ப்பிணிப் பெண்களையே கொவிட் அதிகம் தாக்கும்

*துறைசார் மருத்துவ நிபுணர் தெரிவிப்பு*

யாழ்ப்பாணம், ஓக. 15

மற்றையவர்களைவிட கர்ப்பிணிப் பெண்களையே கொரோனா அதிகம் தாக்கும் என்று மகப்பேறு மற்றும் பெண்ணியல் மருத்துவ நிபுணர் சிறீதரன் தெரிவித்தார். யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் நேற்று இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கையிலேயே 15 ➤





## கொரோனா 3,245

கொழும்பு, ஓக. 15

இலங்கையில் கொரோனா வைரஸ் தொற்றாளர்களின் எண்ணிக்கை நாளாந்தம் எகிறுகின்றது. நேற்று 3 ஆயிரத்து 245 பேர் கொரோனாத் தொற்றுடன் அடையாளம் காணப்பட்டுள்ளனர் என்று சுகாதார 15 ➤

## இணைய ஊடகர் சி.ஐ.டி.யால் கைது

கொழும்பு, ஓக. 15

'லங்கா ஈ நியூஸ்' இணையத்தளத்தின் ஊடகவியலாளர் ஒருவர் குற்றப் புலனாய்வுப் பிரிவினரால் நேற்றுக் கைதுசெய்யப்பட்டுள்ளார். இலங்கையிலுள்ள வெளிநாட்டுத் தூதரகம் ஒன்றின் மீது தாக்குதல் நடத்தப்படவுள்ளது எனப் போலி 15 ➤

## செஞ்சோலைப் படுகொலை நினைவேந்தலுக்குத் தடை!

முல்லைத்தீவு, ஓக. 15

இலங்கை வான்படையின் தாக்குதலில் செஞ்சோலையில் உயிரிழந்த மாணவிகளின் 15ஆம் ஆண்டு நினைவுநாள் நிகழ்வு இராணுவத்தினராலும், பொலிஸாராலும் நேற்றுத் தடுத்து நிறுத்தப்பட்டது. 2006ஆம் ஆண்டு செஞ்சோலை வளாகத்தின் மீது நடத்தப்பட்ட 15 ➤



## 120கிலோ கஞ்சாவுடன் மூவர் நேற்றுக் கைது!

*அவர்களில் ஒருவருக்குக் கொவிட்*

யாழ்ப்பாணம், ஓக. 15

120 கிலோ கஞ்சா, 2 கிலோ 250 கிராம் ஐஸ் போதைப் பொருள்களுடன் சந்தேக நபர்கள் மூவர் நேற்றுக் கைது செய்யப்பட்டுள் 15 ➤

## வடக்கில் கொரோனா 224

யாழ்ப்பாணம், ஓக. 15

வடமாகாணத்தில் நேற்று 224 பேர் கொரோனாத் தொற்றுடன் அடையாளம் காணப்பட்டனர். யாழ்ப்பாணம் போதனா 15 ➤

## இறால் பண்ணைக்கு எதிராக வேலணையில் நேற்றுப் போர்



யாழ்ப்பாணம், ஓக. 15

வேலணை பகுதியில் அமைக்கப்படவுள்ள நவீன இறால் பண்ணைத் திட்டத்துக்கு எதிர்ப்புத் தெரிவித்து நேற்று கவனவீர்ப்புப் போராட்டமொன்று முன்னெடுக்கப்பட்டது. தீவக கடற்றொழில் அமைப்புகள், பொது அமைப்புகள் 15 ➤

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மருத்துவமனைகளிலுள்ள

# கட்டில்களின் எண்ணிக்கையில் 50 வீதம் கொவிட் நோயாளிகளுக்கு

சுகாதார அமைச்சு தெரிவிப்பு

**கொழும்பு, ஓக. 15**

**அனைத்து மருத்துவமனைகளிலும் தற்போது காணப்படும் கட்டில்களின் அளவில் 50 வீதத்தை கொரோனா நோயாளர்களுக்கு சிகிச்சை வழங்க ஒதுக்குவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. சுகாதார அமைச்சரின் தலைமையில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற கூட்டத்தின் போது இந்த தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது என்று சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.**

மருத்துவர்கள், தாதியர்கள் மற்றும் ஏனைய சுகாதார பணியாளர்கள் இயலுமானவரை தனிப்பட்ட ரீதியில் கொரோனா நோயாளர்களை கண்டறிந்து, தகவல்களை உறுதி செய்து, சிகிச்சை வழங்குவதற்கு தேவையான ஆலோசனைகள் வழங்கப்பட்டுள்ளன.

மாவட்ட ரீதியில் ஒரு மத்திய நிலையத்தை ஸ்தாபித்து, அனைத்து கொரோனா நோயாளர்களையும் சோதனைக்குட்படுத்தியதன் பின்னர், தொற்றாளர்களை அனுப்பி வைக்கக்கூடிய சிகிச்சை நிலையங்கள் தொடர்பில் தீர்மானிப்பதற்கான திட்டமொன்றை முன்னெடுப்பது குறித்தும் கலந்துரையாடலின்போது கவனம் செலுத்தப்பட்டுள்ளது. தற்போது கொரோனா நோயாளர்களை மருத்துவமனைகளில் சேர்ப்பதற்கும் அவசர சிகிச்சை பிரிவுகளுக்கு அழைத்து செல்வதற்கும் அம்பியூலன்ஸ் வண்டிகள் போதுமானவையாக இல்லை என்பதால், கொரோனா நோயாளர்களுக்கான சேவைகளை முன்னெடுப்பதற்கு போதுமானளவு அம்புலன்ஸ் வண்டிகளை ஈடுபடுத்துவது குறித்தும் கலந்துரையாடலின்போது யோசனைகள் முன்வைக்கப்பட்டன.

இதேவேளை, மாதாந்த சிகிச்சைகளுக்காக மருத்துவமனைகளுக்கு செல்லும் 60 வயதுக்கு மேற்பட்டோருக்கு அன்டிஜென் பரிசோதனை மேற்கொள்ளவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது. தற்போதைய நிலையில் 60 வயதுக்கு மேற்பட்டோர் அபாய நிலையில் உள்ளமையால் இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது. அதேவேளை, 60 வயதுக்கு மேற்பட்டோருக்கு விரைவாக தடுப்பூசி ஏற்றும் நடவடிக்கையை முன்னெடுப்பதற்கான அனைத்து செயற்பாடுகளையும் நடைமுறைப்படுத்தி வருவதாக சுகாதார அமைச்சு அறிவித்துள்ளது. கலந்துரையாடலில், அமைச்சின் செயலாளர், சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் உள்ளிட்ட உயர்மட்ட அதிகாரிகள் கலந்துகொண்டனர் என்று அமைச்சு அறிவித்துள்ளது.

**கிராமங்களுக்குள் நீடிக்கிறது நடமாட்டம்**

இதேவேளை, மாகாணங்களுக்கு இடையில் போக்குவரத்துக்கு தடை விதிக்கப்பட்டுள்ளபோதிலும், கிராமங்களுக்குள் மக்கள் தேவையற்ற விதத்தில் நடமாடுகின்றனர் என்று இலங்கை பொது சுகாதாரப் பரிசோதகர்கள் சங்கம் தெரிவித்துள்ளது. கிராமங்கள் அல்லது நகரங்களை அண்மித்த பகுதிகளில் பெருமளவான நோயாளர்கள் அடையாளம் காணப்படும்போது இவ்வாறான விடயங்கள் தெரியவருகின்றன என்றும் பொது சுகாதாரப் பரிசோதகர்கள் சங்கத்தின் தலைவர் உபுல் ரோஹன தெரிவித்தார். இதனால் உயிரை பாதுகாப்பதற்கு, தற்போதைய அபாயமான நிலையை கருத்திற்கொண்டு பொறுப்புணர்வுடன் அனைவரும் செயற்பட வேண்டும் என அவர் கோரிக்கை விடுத்தார். (து-இ)






## ரிஷாத்தை விடுவிக்கக்கோரி கிண்ணியாவில் கையெழுத்து

கொழும்பு, ஓக. 15

அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் கட்சியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான ரிஷாத் பதியுதீனை விடுதலை செய்யக் கோரி கிண்ணியாவில் நேற்றுமுன்தினம் ஜும்ஆ தொழுகையின் பின் மக்களிடம் கையெழுத்துப் பெறப்பட்டுள்ளது.

இந்தக் கையெழுத்துப் பெறும் நடவடிக்கை அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் மூதூர் தொகுதிக்கான கொள்கை பரப்புச் செயலாளரும் கிண்ணியா நகர சபை உறுப்பினருமான எம்.எம்.மஹ்தியால் முன்னெடுக்கப்பட்டது.

நாடு முழுவதும் சுமார் ஒரு இலட்சம் கையெழுத்தை மக்களிடமிருந்து பெற்று நாடாளுமன்ற உறுப்பினர் ரிஷாத் பதியுதீனை விடுதலை செய்யுமாறு ஜனாதிபதிக்கு அனுப்பும் நோக்கிலேயே கையெழுத்து வேட்டை ஆரம்பிக்கப்பட்டுள்ளது. (ஒ.22)

## முகக்கவசம் அணியாதோர் உடனடியாகக் கைதாகுவர்

பொலிஸ் பேச்சாளர் எச்சரிக்கை

முகக்கவசம் அணியாதவர்களைக் கைது செய்யும் நடவடிக்கையைப் பொலிஸார் நேற்றிலிருந்து கடுமையாக நடைமுறைப்படுத்த ஆரம்பித்துள்ளனர்.

அதற்கமைய எக்காரணம் கொண்டும் முகக்கவசம் அணியாமல் வீட்டை விட்டு வெளியே வர வேண்டாம் என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் மூத்த பிரதிப் பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண பொதுமக்களைக் கேட்டுக்கொண்டார். இது தொடர்பில் நேற்று ஊடகங்களிடம் அவர் மேலும் தெரிவித்ததாவது:

2020ஆம் ஆண்டு ஒக்ரோபர் 17ஆம் திகதி தனிமைப்படுத்தல் மற்றும் நோய் தடுப்புச் சட்டத்தின் கீழ் வெளியிடப்பட்ட வர்த்தமானி அறிவிப்பின்படி, பொது இடத்தில் முகக்கவசம் அணியாத நபர் தனிமைப்படுத்தப்பட்ட சட்டம் மற்றும் குற்றவியல் சட்டத்தின் கீழ் தண்டிக்கப்படலாம்.

அத்தகைய குற்றத்தைச் செய்யும் ஒருவரைப் பிடியாணை உத்தரவு இல்லாமல் கைதுசெய்ய சட்ட ஏற்பாடுகள் உள்ளன. இந்தச் சட்டத்தின் கீழ் முகக்கவசம் அணியாததாலும், சரியான முறையில் முகக்கவசங்களை அணியாததாலும் கடந்த ஒக்ரோபரில் இருந்து 53 ஆயிரத்துக்கும் அதிகமானோர் கைது செய்யப்பட்டுள்ளனர். இது தொடர்பாக கடுமையான நடவடிக்கை எடுக்கத் தேவையான உத்தரவுகள் பிறப்பிக்கப்பட்டுள்ளன. இதனால், முகக்கவசம் இல்லாதவர்களுக்கும், சரியாக முகக்கவசம் அணியாதவர்களுக்கும் இன்று (நேற்று) முதல் சட்டம் கடுமையாக நடைமுறைப்படுத்தப்படும். என்றார். (ஒ.22)



கிளிநொச்சி உதயநகர் மேற்கில் பெண் தலைமைத்துவ குடும்பம் ஒன்றின் குடிதண்ணீர்த் தேவையை நிறைவு செய்யும் நோக்கில் குழாய்க்கிணறு அமைத்து வழங்கப்பட்டுள்ளது. பெர்ணதேத்தம்மா அறக்கட்டளை மூலம் குறித்த உதவி வழங்கப்பட்டது. (ஜ-13)

# அரசின் கால வீணடிப்புகளால் மாணவர்களின் கல்வி பாதிப்பு

இலங்கை அதிபர்கள் சங்கம் விசனம்

கொழும்பு, ஓக. 15

"சம்பள முரண்பாட்டுக்குத் தீர்வு கோரி அதிபர்கள், ஆசிரியர்கள் தொழிற்சங்கப் போராட்டத்தை ஆரம்பித்து 32 நாள்கள் நிறைவடைந்துள்ளன. எனினும், இதுவரை இந்தப் பிரச்சினைக்குத் தீர்வு இல்லை. அரசின் கால வீணடிப்புகளால் மாணவர்களின் கல்வியே பாதிப்படைந்துள்ளது." இவ்வாறு இலங்கை அதிபர்கள் சங்கத்தின் தலைவர் பராக்கிரம வீரசிங்க தெரிவித்தார்.

கொழும்பில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

"வரலாறு முழுவதும் இவ்வாறான செயற்பாடுகளே முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. அதிபர்கள், ஆசிரியர்களின் சம்பளப் பிரச்சினைக்குப் பல்வேறு யோசனைகள் முன்வைக்கப்படும். அந்த யோசனைகள் காலதாமதப்படுத்தப்படும். தற்போதைய அரசிலும் இவ்வாறான ஒரு போக்கே காணப்படுகின்றது.

சுபோதினி அறிக்கையையே சமர்ப்பித்ததாக அரசுக்குச் சார்பான தொழிற்சங்கம் ஒன்று கூறுகின்றது. அந்தச் சுபோதினி அறிக்கையை எமது சகல தொழிற்சங்கங்களும் ஏற்றுக்கொண்டுள்ளன. எனவே, இதனைச் செயற்படுத்துவதற்காகத் தொடர்ந்து ஆணைக்குழுக்களை அமைத்துக் காலம் தாழ்த்துவதை காலத்தை வீணடிக்கும் செயற்பாடாகவே நாம் கருதுகின்றோம்.

இந்தக் கால வீணடிப்புகளால் மாணவர்களின் கல்வியே பாதிப்படைந்துள்ளது. மாணவர்களின் கல்வியில் அக்கறையிருப்பின் அரசு காலத்தை வீணடிக்காது நாம் அனைவரும் ஏற்றுக்கொண்டுள்ள இந்த அறிக்கையைச் செயற்படுத்த வேண்டும். என்றார். (து-22)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# airtel 4G

## ரீலோட் பிடியிலிருந்து விடுபடுங்கள்



**AIRTEL FREEDOM**

PACKS களுக்கு நீங்களும் மாறுங்கள்

ஒரு Reload | 4G Data (ANY TIME 24h) | Unlimited அழைப்பு நேரம்

| PRICE | VALIDITY | 4G DATA | AIRTEL CALLS | OTHER NETWORK MINUTES | EXCESS USAGE RATE |
|---|---|---|---|---|---|
| Rs. 999 | 30 DAYS | 2GB Per Day (60GB Per Month) | UNLIMITED | 300 | 50 CENTS TAX/MIN |
| Rs. 599 | | 1GB Per Day (30GB Per Month) | | 300 | |
| Rs. 399 | | 500MB Per Day (15GB Per Month) | | 200 | |
| Rs. 199 | | 1GB Per Month | | 100 | |

Work From Home மற்றும் Social Media தளங்களுக்கு செல்லலாம்

இந்த Packs மூலம் எந்தவொரு வலையமைப்பிற்குமான
50 உள்நாட்டு SMS களைப் பெற்றுக்கொள்ளுங்கள்.

மேலதிக விபரங்களுக்கு அழையுங்கள்: **075 5 555555**

**www.airtel.lk**

TRC/AIR/PRO/21/05


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பணிப்பெண் தேவை
நாவலர் வீதியில் உள்ள வீடொன்றில் சமையல் வேலை மற்றும் வீட்டு வேலைகள் செய்வதற்கு பணிப்பெண் தேவை. 074 1366118

## சாரதி தேவை
A - D வாகனப் பத்திரம் உள்ள சாரதி தேவை
பருத்தித்துறை வீதி,
நீர்வேலி சந்தி, நீர்வேலி.
021 223 0235, 077 789 0398

## வேலையாட்கள் தேவை
யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள எமது கட்டட ஒப்பந்த நிறுவனத்திற்கு செங்கல்கட்டு வேலையில் நன்கு அனுபவமுள்ள மேசன் மற்றும் ஒப்பந்த அடிப்படையில் வேலை செய்யக்கூடிய மேசன், கூலியாட்கள், Waiterbase வேலை தெரிந்த பெயின்ரர் (Painter) தேவை.
தொடர்புக்கு: 076 3165 734

## தேவை
யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள எமது கட்டட ஒப்பந்த நிறுவனத்திற்கு நன்கு அனுபவமுள்ள கணிய அளவையாளர் (Quantity Surveyor) தேவை. AUTOCAD தெரிந்தவர்கள் விரும்பதக்கது.
தொடர்புக்கு: 076 3165 734

## பணிப்பெண் தேவை
வீட்டில் தங்கி பிள்ளைகளை பராமரிக்க 23 - 40 வயதுக்கு உட்பட்ட பெண்கள் தேவை. விவரங்களுக்கு தொடர்புகொள்க.
T.P.: 076 923 7686

## பணிப்பெண் தேவை
யாழ்நகரில் உள்ள 4 அங்கத்தவர்கள் கொண்ட குடும்பத்திற்கு தங்கியிருந்து பணி செய்யக்கூடிய வீட்டுப் பணிப்பெண் தேவை. வயதெல்லை - 20 - 50
தொடர்பு: 077 289 0302

## காணி தேவை
யாழ்ப்பாணம், கிளிநொச்சி, வவுனியா முல்லைத்தீவு பிரதேசங்களில் வீட்டுக்காணி, தென்னந்தோட்டம் உட்பட தோட்ட, வயற்காணிகள் விலைக்குத் தேவை.
தொடர்பு : 076 569 5684

## தேவை
### பொதி செய்பவர்
யாழ்நகரில் அமைந்துள்ள தனியார் நிறுவனத்திற்கு பொதி செய்பவர் தேவை. வயதெல்லை 21 - 30 இற்கு இடைப்பட்ட ஆண், பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்.
விளம்பர இல.: J/F 1029
மே / பா உதயன்
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

## பணிப்பெண் தேவை
வட்டுக்கோட்டை கிழக்கில் வயோதிபப் பெண் ஒருவரை தங்கி நின்று பராமரிப்பதற்கு பணிப்பெண் தேவை.
தொடர்பு: 076 277 9166

## Personal Classes
தரம் 2 தொடக்கம் தரம் 5 மாணவர்களுக்கான ஆங்கில வகுப்புக்கள் மற்றும், தரம் 10, 11 மற்றும் A/L மாணவர்களுக்கான ஆங்கில வகுப்புக்களுக்கு தொடர்பு கொள்ளவும்.
தொடர்பு : 077 452 7317

## தேவை
நுணாவில் ஏ 9 வீதியில் புதிதாக ஆரம்பிக்கப்படவுள்ள ஜூஸ் (Juice) கடைக்கு வேலையாட்கள் (ஆண்/ பெண்) தேவை
தொடர்பு : 077 558 9955

## வாடகைக்கு உண்டு
K.K.S. வீதியில் 5 பரப்புடன் கூடிய காணி வாடகைக்கு விடப்படும். (தாவடி)
077 5451 358

## வீடு வாடகைக்கு உண்டு
சுண்டுக்குழியில் சிறிய குடும்பத்திற்கு வீடு அத்துடன் அறைகளும் வாடகைக்கு உண்டு.
0777 242 427 / 0777 412 713

## தேவை
நுணாவில் LOC எரிபொருள் நிலையத்திற்கு எரிபொருள் நிரப்புபவர் தேவை. சாவகச்சேரிக்கு அண்மையில் வசிப்பவருக்கு முன்னுரிமை வழங்கப்படும்.
077 666 8739
kajas2624@gmail.com

## வேலையாட்கள் தேவை
திருநெல்வேலியிலுள்ள வியாபார நிறுவனத்திற்கு பின்வரும் வேலையாட்கள் தேவை.
காசாளர், சிட்டை எழுதுநர், விற்பனையாளர்
தொடர்பு 077 183 6462

## தேவை
சிறிய குடும்பத்திற்கு வீடு வாடகைக்கு தேவை. தென்மராட்சி விரும்பத்தக்கது.
தொடர்பு 070 521 2380

## பணிப்பெண் தேவை
வீட்டில் தங்கியிருந்து வேலைகள் செய்யக்கூடிய பணிப்பெண் தேவை
T.P.: 076 609 8409

## வேலைக்கு ஆள் தேவை
கொக்குவிலில் உள்ள உயர்தர சைவ உணவகத்துக்கு சமையல் உதவியாளர், உணவு பரிமாறுபவர் தேவை. ஆண்/பெண் (இருபாலாரும்) விரும்பத்தக்கது.
076 000 1695, 077 8443 590

## வேலையாள்கள் தேவை
சாவகச்சேரியில் உள்ள பல் பொருள் அங்காடிக்கு (Super Marker) தகுதியான வேலையாள்கள் தேவை.
077 666 8739
kajas2624@gmail.com

## வேலையாட்கள் தேவை
மீசாலை புத்தூர் சந்தியில் இயங்கும் மின் ஒட்டு தொழிலகத்திற்கு (Nimal welding work shop) அனுபவமுள்ளவர்களும் பழக விரும்புபவர்களும் உடனடியாகத் தேவை. தங்கி வேலை செய்வதாயின் வசதிகள் செய்து தரப்படும்.
077 345 6552.

## காணிகள் விற்பனைக்கு உண்டு
எம்மிடம் நீர்வேலி சந்திக்கு அண்மையில் 3 1/2 பரப்பு காணியும் ஒரு பரப்பு விலை ஆறு லட்சம் (600.000) மற்றும் கோப்பாய் இராச வீதியிலும் விற்பனைக்கு உண்டு.
தொடர்பு: 077 193 3490

## மணமகன் தேவை
யாழ் இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த 43 வயது , மகம் நட்சத்திரம் A/L படித்த 4 வருடம் சங்கீதம் கற்ற பெண்ணுக்கு தனியார்துறை அல்லது அரச தொழில் விரும்பத்தக்கது. விவாகரத்து, தாரம் இழந்தவர் விண்ணப்பிக்கலாம்.
071 684 8191 (Whatsapp)
075 476 9477

## மணமகள் தேவை
யாழ் இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த 1988 ஆம் ஆண்டு பிறந்த UK சிற்றிசன் விமான நிலையத்தில் பணி புரியும் நற்குணமுடைய மணமகனுக்கு பொருத்தமான குணமான மணமகளை பெற்றோர் எதிர்பார்க்கின்றனர். புகைப்படம் தொலைபேசி இலக்கத்துடன் கீழ்க் காணும் Gmail முகவரிக்கு இணைத்து வைக்கவும் .
தொடர்பு :
sarannathan@yahoo.com

## சேவை
நீங்கள் அடகுவைத்து மீட்டெடுக்கமுடியாத நகைகளை எமது நிறுவனத்தின் ஊழியர்கள் மூலமாக நீங்கள் அடகு வைத்த நிறுவனத்திற்கு வருகை தந்து மீட்டு எடுத்து அதற்கான பெறுமதிப்பணம் அவ்விடத்திலேயே தரப்படும் நாடளாவிய ரீதியில் சிநேக பூர்வமான சேவை.
AAA Gold Center
076 568 4346

## காணி விற்பனைக்கு
கலட்டி ஒழுங்கை, வட்டு வடக்கு, சித்தங்கேணியில் வளவு பரப்பு 13 குளி 09 விற்பனைக்கு உண்டு.
ஒரு பரப்பு ரூபா 10 லட்சம்
தரகர் தேவையில்லை
தொடர்பு: 0776180644

## சிங்கள ஆசிரியர் தேவை
சிங்களம் எழுத வாசிக்க வீட்டிற்கு வந்து கற்பித்துக் கொடுக்க ஆசிரியர் / ஆசிரியை தேவை.
தகுந்த உயர் குரு தட்சணை வழங்கப்படும்.
தொடர்பு: 0777 960 881

## ஆங்கில, சிங்கள வகுப்புக்கள்
ஆங்கில, சிங்களபேச்சு மற்றும் எழுத்து
என்பன அனுபவம் வாய்ந்த ஆசிரியரால் குறைந்த கட்டணத்தில்
Zoom மூலம் கற்பிக்கப்படும்
070 623 2455


## 29ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

தோற்றம் 13 . 03 . 1944



மறைவு 18 . 07 . 2021

**அமரர் திருமதி நடராசா சிவபாக்கியம்**

கடந்த (18.07.2021) அன்று இறைவனடி சேர்ந்த எமது அன்னையின் பிரிவு அறிந்து ஓடோடி வந்து உதவிகள் புரிந்த உறவினர், அயலவர்கள், நண்பர்கள் மற்றும் தொலைபேசி ஊடாக அனுதாபம் தெரிவித்த அனைவருக்கும் எமது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.
அந்தியேட்டிக் கிரியைகள் 13.08.2021 அன்று கீரிமலை புனித தீர்த்தக் கரையில் இடம்பெற்றன. வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் இன்று (15.08.2021) இல்லத்தில் இடம்பெற்று ஆத்ம சாந்திப் பிரார்த்தனையும் இடம்பெறும் என்பதை அறியத்தருகின்றோம்.

அல்வின் வீதி, காரைநகர். குடும்பத்தினர்.

# வாகரை தீ மிதிப்பு உற்சவத்தில் பங்கெடுத்த 30 பேருக்கு கொவிட்

மட்டக்களப்பு, ஓக. 15
மட்டக்களப்பு வாகரை ஊரியன்கட்டு பேச்சியம்மன் ஆலயத்தில் தீ மிதிப்பு உற்சவ வழிபாட்டில் கலந்துகொண்ட 30 பேருக்குக் கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.
கடந்த சனிக்கிழமையன்று மேற்படி ஆலயத்தில் இறுதி உற்சவமான தீ மிதிப்பு உற்சவம் இடம்பெற்றது. இதில் கலந்துகொண்ட 13 பேருக்கு மேற் கொள்ளப்பட்ட அன்டிஜன் பரிசோதனையில் 3 பேருக்குக் கொவிட் உறுதிப்படுத்தப்பட்டது. இதையடுத்து நேற்று மேலும் 65 பேருக்கு அன்டிஜன் பரிசோதனை செய்யப்பட்டது. அதில் 30 பேர் தொற்றாளர்களாக அடையாளம் காணப்பட்டனர். (ம)

# ஐரோப்பாவை ஆட்டிப்படைக்கும் புதிய திரிபு

கொழும்பு, ஓக. 15
கடந்த ஜனவரி மாதம் கொலம்பியாவில் கண்டறியப்பட்ட வைரஸ் திரிபு ஐரோப்பிய நாடுகளில் பரவி உள்ளது.
பெல்ஜியத்தில் பிரசெல்ஸ் நகர் அருகே முதியோர் காப்பகம் ஒன்றில் கொலம்பிய வைரஸ் தொற்றுக்குள்ளான ஏழு பேர் உயிரிழந்தனர் என்ற தகவலை அந்த நாடு அறிவித்திருக்கிறது. அந்த ஏழு முதியவர்களும் முழுமையாகத் தடுப்பூசி ஏற்றப்பட்டவர்கள்.
கொலம்பியாவில் தோன்றிய இந்த வைரஸ் முதலில் அமெரிக்காவிலும் ஏனைய சில தென்னமெரிக்க நாடுகளிலும் தொற்றி இருந்தது. தற்சமயம் அது ஐரோப்பாவில் பரவத் தொடங்கியுள்ளது.
பிரான்ஸின் வட பிராந்தியத்தில் கொலம்பிய வைரஸ் பரவல் கண்டறியப்பட்டுள்ளது.
இந்தப் பிராந்தியம் ஏற்கனவே டெல்ரா தொற்றுக்களில் முன்னணியில் உள்ளது. பிரான்ஸில் இதுவரை 56 பேருக்குக் கொலம்பியாத் திரிபுத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டிருப்பதாக சுகாதார சேவைகள் பிரிவு அறிவித்துள்ளது. உலகில் சுமார் 36 நாடுகளில் பரவியுள்ள கொலம்பியா திரிபுக்கு உலக சுகாதார நிறுவனம் இன்னமும் முறைப்படி கிரேக்க இலக்கப் பெயரைச் சூட்டவில்லை.
டீ.1.621 என்னும் அறிவியல் குறியீட்டுப் பெயருடன் உள்ளஅந்தவைரஸ் திரிபு தடுப்பூசிகளை எதிர்க்கக் கூடிய வல்லமை கொண்டதாக இருக்கலாம் என்ற அச்சம் உள்ளது. வெவ்வேறு நாடுகளில் அடையாளம் காணப்பட்டமேலும் பல புதிய திரிபுகள் பலநாடுகளுக்கும் பரவியுள்ளன.
டெல்ரா போன்று கொலம்பியா வைரஸும் உலகத் தொற்று நோயாகப் பரவிவிடலாம் என்று அச்சத்துடன் எதிர்பார்க்கப்படுகிறது. (ஒ.இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







# தனிமைப்படுத்தல் நிலையத்துக்கு சுகாதாரப் பொருள்கள் கையளிப்பு

மன்னார்,ஓக.15

மன்னார் தாராபுரம் பகுதியில் அமைக்கப்பட்டுள்ள கொரோனா தனிமைப் படுத்தல் நிலையத்துக்கான ஒரு தொகுதி சுகாதாரப் பொருள்கள் மாவட்டச் செயலகத்திடம் கையளிக்கப்பட்டன. மன்னார் சமூக பொருளாதார மேம் பாட்டுக்கான நிறுவனத்தால் இந்த உதவிகள் நேற்றுமுன்தினம் வழங் கப்பட்டன. முகக் கவசம்,பற்பசை,கிருமிநீக்கி,பாதணி,சவர்க்காரம், சல வைத்தூள் மற்றும் ஆடைகள் உள்ளிட்ட பதினொரு அத்தியாவசிய சுகாதார பொருள்கள் அடங்கிய 100 பொதிகள் இதன்போது வழங்கப்பட் டன. இந்த நிகழ்வில் மன்னார் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பா ளர் மருத்துவர் ரி.வினோதன், மன்னார் உதவி மாவட்டச் செயலர் சிவ பாலன் குணபாலன், மன்னார் அனர்த்த முகாமைத்துவ உதவி ஆணை யாளர் கனகரத்தினம் திலீபன் மற்றும் மன்னார் மெசிடோ நிறுவனப் பணியாளர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர். (ஐ-213)



# செஞ்சோலை படுகொலையின் 15 ஆம் ஆண்டு நினைவேந்தல்

முல்லைத்தீவு,ஓக.15

**செஞ்சோலைப் படுகொலையின் 15 ஆம் ஆண்டு நினைவேந்தல் நிகழ்வு நேற்று முல்லைத்தீவு கள்ளப்பாடு பகுதியில் அமைந்துள்ள வடக்கு மாகாணசபை முன்னாள் உறுப்பினர் துரை ராசா ரவிகரனின் மக்கள் தொடர்பகத்தில் நடைபெற்**

முல்லைத்தீவு வள்ளிபுனம், சொஞ்சோலை வளாகத்தில் கடந்த 2006 ஆம் ஆண்டு, இலங்கை வான்படையினரால் மேற்கொள் ளப்பட்ட கொடூர விமானத்தாக்குதலால் அப்பாவி மாணவிகள் 61 பேர் படுகொலை செய்யப்பட்டனர்.

இவ்வாறு படுகொலை செய்யப்பட்ட மாண வர்களுக்கு அகவணக்கம் செலுத்தப்பட்டு, மலர்தூவி, சுடரேற்றி அஞ்சலி நிகழ்வுகள் உணர்வெழுச்சியுடன் மேற்கொள்ளப்பட்டது. இந்த அஞ்சலி நிகழ்வில் வடக்கு மாகாண சபை முன்னாள் உறுப்பினர் துரைராசா ரவிகரன், கரைதுறைப்பற்று பிரதேசசபை உறுப்பினர்களான மரியநாயகம் தொம மைப்பிள்ளை, சின்னராசா லோகேஸ்வரன் ஆகியோர் கலந்துகொண்டனர். (ஐ-246)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்



## உயிருடன் விளையாடும் அரசு

கொரோனா வைரஸ் இப்போது இலங்கை முழுவதும் வியாபித்து விட்டது. கொரோனா வைரஸ் தொற்றாளர்களின் எண்ணிக்கையும், அந்தக் கொடிய தொற்றால் இறப்போரின் எண்ணிக்கையும் எதிர்பார்க்காத அளவு அதிகரித்திருக்கிறது.

நாடு இப்போது மிக ஆபத்தான கட்டத்தில் இருக்கின்றது. இந்த நிலைமைக்கு வடக்கு மாகாணமும், கிழக்கு மாகாணமும் விதிவிலக்கல்ல. தொற்றுப் பரவும் வேகமும், வைரஸ் தொற்றால் இறப்போரின் எண்ணிக்கையும் வடக்கு, கிழக்கின் மோசமான நிலைமையை புடம் போட்டுக் காட்டுகின்றன.

இந்த ஆபத்தான நிலைமையில் இருந்து தப்பித்துக் கொள்வதற்குரிய ஆலோசனைகள் சுகாதார, மருத்துவ வல்லுநர்களால் கூறப்படுகின்றபோதும், இலங்கை அரசு அவற்றைப் புறக்கணித்தே வருகின்றது. தற்போது மட்டுமல்ல, முன்னைய சந்தர்ப்பங்களிலும், மருத்துவ வல்லுநர்களின் ஆலோசனைகளை செவிமடுக்காதே செயற்படுகின்றது. இப்போதைய இக்கட்டான நிலைமைக்கு அதுவும் ஒரு காரணம் என்பதை மறுக்க முடியாது.

கடந்த சித்திரை மாதம் புத்தாண்டு காலத்தில் பயணத் தடை விதிக்க வேண்டும் என்று சுகாதாரத் துறைசார்ந்தவர்கள் வலியுறுத்தியபோது, அதை அரசு அலட்சியம் செய்தது. அதன் விளைவாகவே நாட்டை ஆட்டிப் படைத்த புத்தாண்டு கொரோனாக் கொத்தணி உருவானது. வைரஸ் பரவல் தீவிரமடைந்த பின்னர் அவசர, அவசரமாக நாட்டை முடக்கியது அரசு. சுகாதாரத் துறையினரின் ஆலோசனையை அரசு தகுந்த நேரத்தில் நடைமுறைப்படுத்தியிருந்தால் புத்தாண்டுக் கொத்தணியே உருவாகியிருக்காது.

அரசின் இந்த இறுமாப்புப் போக்கில் இப்போதும் மாற்றம் ஏற்படவில்லை. இலங்கையில் ஒரு மாவட்டத்தில் டெல்டா பிறழ்வு இனங்காணப்பட்டபோது நாட்டை ஓரிரு வாரங்கள் முடக்குங்கள் என்று சுகாதார நிபுணர்கள் வலியுறுத்தினர். ஆனால் அரசு பயணத் தடை விதிக்க மறுத்ததுடன், மாகாணங்களுக்கு இடையிலான போக்குவரத்தையும் திறந்து விட்டது.

இப்போது நாட்டின் அனைத்து பிரதேசங்களுக்கும் டெல்டா பிறழ்வு பரவிவிட்டது. நூற்றுக்கும் மேற்பட்டவர்கள் தினமும் உயிரிழக்கின்றனர். 3 ஆயிரத்துக்கும் அதிகமான தொற்றாளர்கள் தினம் இனங்காணப்படுகின்றனர். இத்தனைக்கும் பின்னர் கொரோனா பரவலைக் கட்டுப்படுத்துவதற்கு மாகாணங்களுக்கு இடையிலான பயணத் தடையை நடைமுறைப்படுத்தியிருக்கிறது கோத்தாபய ராஜபக்ச அரசு. இந்தப் பயணத் தடை மிக இறுக்கமாக நடைமுறைப்படுத்தப்படும் என்று அரசு அறிவித்த 12 மணி நேரத்துக்குள் பொதுமக்கள் நடந்து மாகாண எல்லை ஒன்றைக் கடக்கும் காட்சிகள் சமூக வலைத் தளங்களில் பரவுகின்றன. தங்களது கையாலாகத்தனத்தை மறைப்பதற்காக பல்வேறு அறிவிப்புக்களை விடுத்து மக்கள் உயிருடன் விளையாடும் கோத்தாபய ராஜபக்ச அரசு, மிக முக்கியமான நடைமுறை ஒன்றை செயற்படுத்த முடியாத வினைத்திறமை அற்றிருப்பது வெட்கக்கேடானது.

நாட்டின் பொருளாதார நிலைமையில் தற்போது எதுவும் செய்ய முடியாது என்பது அரசின் வாதமாக இருக்கிறது. அதேநேரம் கடந்த காலங்களில் சரியான நேரத்தில் முடிவுகளும், செயற்பாடுகளும் முன்னெடுக்கப்பட்டிருந்தால், இத்தனை நீண்ட நாள் முடக்கங்களுக்கான தேவை இருக்காது. குறுகிய காலத்தில் வைரஸ் பரவலைக் கட்டுப்படுத்த முடிந்திருக்கும். வெள்ளம் வந்த பின்னர் அணை கட்டும் போக்கை கோத்தாபய ராஜபக்ச அரசு கைக்கொண்டு வருவதாலேயே சுகாதாரத் துறையினர் எதிர்பார்க்கும் இலக்கை அடைய முடியாதுள்ளது.

வடக்கிலும் சரி, நாட்டிலும் சரி இப்போது ஒவ்வொரு வீதிகளிலும் பல வீடுகள் தனிமைப்படுத்தப்பட ஆரம்பித்திருக்கிறன. ஒவ்வொரு வீதிகளிலும் கொரோனாத் தொற்றாளர்கள் இனங்காணப்படுகின்றனர். உயிரிழப்புகளும் அதிகரித்துக் கொண்டிருக்கின்றன. இனியாவது அரசு துரிதமான முடிவுகளை எடுக்கவேண்டும். இலங்கை வரலாற்றில் மோசமான நாள்களாக எதிர்வரும் காலம் மாறிவிடக்கூடும்.




### இப்போது கட்டுப்படுத்தத் தவறின்

# ஐந்து மாதங்களில் 18,000 பேர் உயிரிழப்பர்

### உலக சுகாதார அமைப்பு எச்சரிக்கை

கொழும்பு, ஓக. 15

"இலங்கையில் தினசரி பதிவாகும் கொரோனா வைரஸ் தொற்று மற்றும் இறப்புக்களின் எண்ணிக்கை வேகமாக அதிகரித்து வருகின்றமை நாட்டில் முன்னெப்போதும் இல்லாத விகிதத்தில் சுகாதார நெருக்கடியை ஏற்படுத்தும். இப்போதைய நிலைமையைக் கட்டுப்படுத்தத் தவறினால் எதிர்வரும் 5 மாதங்களுக்குள் (2022ஆம் ஆண்டு ஜனவரி மாதத்துக்குள்) சுமார் 18 ஆயிரத்துக்கும் அதிகமான உயிரிழப்புக்கள் பதிவாகலாம்." இவ்வாறு உலக சுகாதார அமைப்பு அறிக்கையூடாக எச்சரிக்கை விடுத்துள்ளது. அந்த அமைப்பின் இலங்கை அலுவலக விசேட மருத்துவ நிபுணர்களின் பங்கேற்புடன் தயாரிக்கப்பட்ட அறிக்கையிலேயே மேற்கண்டவாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்த அறிக்கை சுகாதார அமைச்சிடம் கடந்த வியாழக்கிழமை ஒப்படைக்கப்பட்டுள்ளது.

அதில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:

"இலங்கையில் தற்போது அதிகரித்துள்ள கொரோனாத்தொற்று நிலைமையைச் சமாளிப்பதற்கும், மக்களுக்குத் தேவையான சிகிச்சைகளை வழங்குவதற்குமான மருத்துவ வசதிகளை அதிகரிக்க வேண்டியுள்ளது.

நாட்டின் தற்போதைய சூழ்நிலையில் உயிர்களைக் காப்பாற்றுவதே அரசின் அவசர கடமையாகும். இப்போதைய நிலைமையைக் கட்டுப்படுத்தத் தவறினால் 2022ஆம் ஆண்டு ஜனவரி மாதத்துக்குள் சுமார் 18 ஆயிரத்துக்கும் அதிகமான உயிரிழப்புகள் பதிவாகலாம்.

இந்தக் காலப்பகுதியில், தடுப்பூசி வழங்கும் பணிகளைத் துரிதப்படுத்தவும் இரண்டாவது டோஸ் மற்றும் பூஸ்டர் டோஸை வழங்கவும் தேவையான நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டும். அத்துடன் காதாரத் துறையினரின் பணிச்சுமையை குறைக்கவும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட வேண்டும். தற்போதைய நிலைமையைக் கட்டுப்படுத்தத் தாமதிக்கும் ஒவ்வொரு தருணமும் இறப்புகளை அதிகரிக்க வழிவகுக்கும் என்பதுடன், மீண்டும் இயல்பு நிலைக்குத் திரும்ப நீண்ட காலம் எடுக்கும்.

இலங்கையில் தற்போது பல பகுதிகளில் மேற்கொள்ளப்படும் பி.சி.ஆர். பரிசோதனைகளில் 20 சதவீதத்துக்கும் அதிகமானவர்களுக்குக் கொரோனாத் தொற்று உறுதியாகி வருகின்றது.

தற்போதைய நிலைவரப்படி நாட்டில் கொரோனா சிகிச்சை நிலையங்கள் 85 சதவீதத்துக்கும் மேல் நிரம்பியுள்ளன. அவசர சிகிச்சைப்பிரிவுகள் 90 சதவீதத்துக்கும் மேல் நிரம்பியுள்ளன.

நாடு முழுதும் கடந்த வாரம் 528 ஆக இருந்த ஒட்சிசனைச் சார்ந்துள்ள நோயாளிகளின் எண்ணிக்கை இந்த வாரம் 646 ஆகக் கணிசமாக அதிகரித்திருத்துள்ளது.

இந்தப் போக்கு தொடர்ந்தால், ஒட்சிசன் விநியோகத்தில் கடுமையான பற்றாக்குறை மற்றும் பராமரிப்பு சிக்கல்களைத் தவிர்க்க முடியாது போகும். இந்த நெருக்கடிகளிலிருந்து மீண்டு வருவதற்கு தேசிய அளவில் ஒரு குறுகிய காலத்துக்கு ஊரடங்கு உத்தரவை நடைமுறைப்படுத்த வேண்டும்.

அனைத்து பொது நிகழ்வுகளையும் மூன்று வாரங்களுக்குக் கட்டுப்படுத்த வேண்டும் அல்லது இரத்துச் செய்ய வேண்டும்.

60 வயதுக்கு மேற்பட்டவர்கள் மற்றும் நோயுற்றவர்கள் அனைவருக்கும் பைசர், மொடர்னா, அஸ்ட்ரா ஜெனெகா போன்ற தடுப்பூசிகளை வழங்குவதில் முன்னுரிமை அளிக்கப்பட வேண்டும்" - என்றுள்ளது. (த-22)

### தடுப்பூசியை திருடி விற்றாரென

# மருத்துவமனை ஊழியர் கைது

கொழும்பு, ஓக. 15

சினோபோர்ம் தடுப்பூசியை 2 ஆயிரம் ரூபாவுக்கு விற்பனை செய்தார் என்ற குற்றச்சாட்டில் மொரட்டுவ லுனாவ மருத்துவமனையின் சிற்றூழியர் ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார். சுகாதார அமைச்சின் விசாரணைப் பிரிவினரும் கல்கிசை பிராந்திய புலனாய்வுப் பிரிவின் அதிகாரிகளும் இணைந்து முன்னெடுத்த சுற்றிவளைப்பின் போது, சந்தேக நபர் கைதுசெய்யப்பட்டார் என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர், சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹன தெரிவித்தார். 50 வயதான குறித்த சிற்றூழியர், மொரட்டுவை பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளார். (த-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org










Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்



## சிவலிங்கம் சுந்தரலிங்கம்

(லிங்கம் மில், மற்றும் பேக்கரி உரிமையாளர்)

யாழ்ப்பாணம் கைலாசப்பிள்ளையார் கோயிலடியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சிவலிங்கம் சுந்தரலிங்கம் நேற்று முன்தினம் (13.08.2021) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சிவலிங்கம் பொன்மணி தம்பதிகளின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம் - இலக்குமி அம்மாள் தம்பதிகளின் மருமகனும், கலைவாணியின் அன்புக் கணவரும், காலஞ்சென்றவர்களான வேதாரணியம் (YOGAS) சண்முகலிங்கம் மற்றும் நாகேஸ்வரி, யோகேஸ்வரி ஆகியோரின் அன்புச் சகோதரனும், காலஞ்சென்ற மகேஸ்வரி மற்றும் வசந்தி சரவணபவன் காலஞ்சென்ற சிவபாதநாதன், கலைமணி, கலைச்செல்வி, கலைவாணன், கலைச்செல்வன், கலைமகள், கலைமகன், காலஞ்சென்ற கலைஅரசி ஆகியோரின் மைத்துனரும், சிவதக்சினி, சுவேந்திரணி, சிவாஜினியின் சிறிய தந்தையும், மயூரன், சசிகரன், வசிகரன் ஆகியோரின் பெரிய தந்தையும், ஜனகன், துவாரகன், செந்தூரன் சிவலக்சுமி, கார்த்திகா ஆகியோரின் அன்பு மாமனாரும், உருத்திரேஸ்வரன் (உருத்திரன்) அவர்களின் உடன் பிறவா சகோதரனும்ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (15.08.2021) ஞாயிற்றுக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக முற்பகல் 10.00 மணிக்கு செம்மணி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**இல.557, நாவலர் வீதி,**
**கைலாச பிள்ளையார் கோயிலடி,**
**யாழ்ப்பாணம்.**

**தகவல்**
**சு.கலைவாணி (மனைவி)**
**க. உருத்திரேஸ்வரன் (உருத்திரன்)**

**021 222 7411, 077 711 0280**

# மரண அறிவித்தல்

தோற்றம் 23 . 05 . 1933



மறைவு 11 . 08 . 2021

## இரத்தினராசா கணபதிப்பிள்ளை

(இளவாலை St. Hentry's College முன்னாள் ஆசிரியர்,
யா/ கோப்பாய் ஆசிரியர் கலாசாலை - முன்னாள் விரிவுரையாளர், முன்னாள்
யாழ் இந்துக் கல்லூரி ஆங்கில ஆசிரியர் )

பண்டத்தரிப்பு வடலியடைப்பை பிறப்பிடமாகவும் உடுப்பிட்டியை (தேவிவாசம்) வதிவிடமாகவும் தற்போது கொழும்பு வெள்ளவத்தையில் வசித்தவருமான இரத்தினராசா கணபதிப்பிள்ளை கடந்த (11.08.2021) புதன்கிழமை இரவு இயற்கை எய்தினார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கணபதிபிள்ளை - அன்னம் தம்பதிகளின் புதல்வனும் காலஞ்சென்ற சாந்தகுணதேவியின் அன்புக் கணவரும், கணதீபன் (கொழும்பு), கார்த்திகா (அவுஸ்ரேலியா), செந்தூரன் (கொழும்பு) ஆகியோரின் பாசமிகு தந்தையும், காலஞ்சென்றவர்களான மகாதேவன், செல்வராஜா, வாமதேவன், தில்லைநாதன், சண்முகநாதன் ஆகியோரின் அன்புச் சகோதரரும், அழகேசன் (அவுஸ்திரேலியா), நிரோஷா ஆகியோரின் மாமனாரும், அம்பிகையின் (கனடா) பெரியப்பாவும், சற்குணநாதன், சற்குணதேவி, கௌரி ஆகியோரின் மைத்துனரும், லிவ்யன், ஜவின் (அவுஸ்திரேலியா), தீக்ஷா ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் கொழும்பில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

33 4/3, 42 **ஆவது ஒழுங்கை,**
**வெள்ளவத்தை.**

**தகவல் :**
**பிள்ளைகள்**

**க.செந்தூரன் - 077 300 0134, க.கணதீபன் - 077 340 5893**

# மரண அறிவித்தல்

## நன்னித்தம்பி தயாசீலன்

(Bachelor of laws)



யாழ்.அச்சுவேலி ,தோப்பை பிறப்பிடமாகவும், கொழும்பு,கனடா (Toronto) ஆகிய இடங்களை வதிவிடமாகவும் கொண்ட நன்னித்தம்பி தயாசீலன் 20.07.2021 செவ்வாய்க்கிழமை கனடாவில் இறைபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற நன்னித்தம்பி மற்றும் முத்துப்பிள்ளை (கனடா) தம்பதியினரின் சிரேஷ்ட புதல்வனும், காலஞ்சென்றவர்களான கனகசபாபதி - திலகவதி தம்பதியினரின் அன்பு மருமகனும், காலஞ்சென்றவர்களான சாந்தநாயகி, யோகசீலன் மற்றும் பத்மமலர் (கனடா) ஆகியோரின் அன்பு சகோதரரும், கண்ணகியின் (சிரேஷ்ட விரிவுரையாளர் - யாழ்.தேசிய கல்வியியற் கல்லூரி) அன்புக் கணவரும், இலக்கியாவின் ( மாணவி யா/ சுண்டுக்குளி மகளிர் கல்லூரி) பாசமிகு தந்தையும், கர்ணன் ( SPHI - சுகாதார மருத்துவ அதிகாரி பணியகம், சாவகச்சேரி) காருண்யன் (கஜன் - கனடா) ஆகியோரின் அன்பு மைத்துனரும்.குணதர்சனா ( ஜனா- முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் - மாவட்டச் செயலகம், யாழ்ப்பாணம்) ஸ்ரீதேவி (சுதா - கனடா) ஆகி யோரின் அன்புச் சகோதரரும், ஆதிகா, லக்சயன் (கனடா) ஜசிகன் (கனடா) ஆகியோ ரின் ஆசை மாமாவுமாவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (15.08.2021) ஞாயிற்றுக்கிழமை காலை கனடா நேரம் 6.00 - 9.00 வரை Chapel Ridge Funeral Home & Cremation Centre இல் மக்கள் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு 16.08.2021 திங்கட்கிழமை காலை 8.30 (கனடா நேரம்) மணியளவில் இறுதிக்கிரியைகள் Chapel Ridge Funeral Home & Cremation Centre இல் நடை பெற்று முற்பகல் 10.00 (கனடா நேரம்) மணியளவில் தகனக்கிரியைக்காக Highland Hills Crematorium )இற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர் ,நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும.

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

**தோப்பு, அச்சுவேலி**

| | | | |
|---|---|---|---|
| கண்ணகி | - மனைவி | (கனடா) | + 947 711 09786 |
| முத்துப்பிள்ளை | - தாய் | (கனடா) | + 141 629 78193 |
| பத்மமலர் | - சகோதரி | (கனடா) | + 141 629 78193 |
| இலக்கியா | - மகள் | (கனடா) | + 143 721 54442 |
| கர்ணன் | - மைத்துனர் | (இலங்கை) | + 947 712 10648 |
| காருண்யன் | - மைத்துனர் | (கனடா) | + 141 631 81705 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகளின் மறைவு சைவ உலகுக்கு பேரிழப்பாகும்

### கலாநிதி ஆறு.திருமுருகன் தெரிவிப்பு

யாழ்ப்பாணம்,ஓக.15

மதுரை ஆதீனம் 292ஆவது குருமகா சந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ அருணகிரிநாத ஞானசம்பந்த தேசிக பரமாச்சார்ய சுவாமிகளின் மறைவு சைவ உலகுக்கு பேரிழப்பாகும் என்று கலாநிதி ஆறு.திருமுருகன் தெரிவித்துள்ளார்.

ஸ்ரீலஸ்ரீ அருணகிரிநாத ஞானசம்பந்த தேசிக பரமாச்சார்ய சுவாமிகள் நேற்றுமுன்தினம் உடல்நலக்குறைவு காரணமாக உயிரிழந்தார். அன்னாரின் மறைவை முன்னிட்டு அவர் அனுப்பிவைத்துள்ள இரங்கல் செய்தியிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டதாவது;

சிறந்த அறிவும் ஆற்றலும் மிக்க சுவாமிகள், சைவசமயத்தின் பாதுகாவலனாக விளங்கினார். துணிந்து குரல் கொடுப்பவர். தமிழ்,ஆங்கிலம்,வடமொழிப் புலமைமிக்க சுவாமிகளுக்கு தென்நாட்டில் மட்டுமன்றி வடநாட்டிலும் மிகுந்த செல்வாக்கு இருந்தது. நல்லை ஆதீனம் மதுரை ஆதீன மரபைப் பின்பற்றி ஆரம்பிக்கப்பட்டது. நல்லை ஆதீனத்தின் வளர்ச்சிக்கு மூலமாக அமைந்த மதுரை ஆதீனத்தின் முதல்வரின் சமாதிச்செய்தி மிகவும் கவலை தரும் செய்தியாகும். சுவாமிகள் மதுரைச் சொக்கநாதரின் பாதக்கமலங்களில் பரிபூரணம் அடைந்து சைவ உலகை என்றும் ஆசீர்வதிக்க வேண்டுதல் செய்வோமாக- என்றுள்ளது. (ஐ)



## வல்லிபுர ஆழ்வார் திருவிழா மாசி மாதத்துக்கு ஒத்திவைப்பு

வடமராட்சி,ஓக.15

வடமராட்சி ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் ஆலய வருடாந்தப் பெருந் திருவிழா அடுத்தவருடம் மாசி மாதத்துக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

ஆலய பெருந்திருவிழா தொடர்பான ஏற்பாட்டுக் கூட்டம் நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை வடமராட்சி வடக்கு பிரதேச செயலர் ஆழ்வாப்பிள்ளை சிறீ தலைமையில் நடைபெற்றது.

குறித்த கூட்டத்தின் முடிவில் இந்த வருடம் மகோற்சவம் நடத்துவதற்கான அனுமதி மறுக்கப்பட்டிருந்தது.

இந்த நிலையில் ஆலய தர்மகர்த்தா சபையினர், ஆலய நிர்வாகம், திருவிழா உபயகாரர்களுடன் ஆலய வளாகத்தில் நேற்று சனிக்கிழமை கலந்துரையாடல் ஒன்று நடைபெற்றது. இக் கலந்துரையாடலின் முடிவில், ஆலய வருடாந்தப் பெருந்திருவிழாவை அடுத்த வருடம் மாசி மாதத்தில் வரும் பூரணை மகம் நாளில் நடத்துவது என்று தீர்மானிக்கப்பட்டது. (ஐ-26)

## பாலியல் துஷ்பிரயோகம்; 18 வயது இளைஞன் கைது

சாவகச்சேரி, ஓக.15

22 வயதுடைய பெண் ஒருவரை பாலியல் துஷ்பிரயோகம் செய்த குற்றச்சாட்டில் 18 வயதுடைய இளைஞன் ஒருவர் சாவகச்சேரி பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார். துஷ்பிரயோகத்துக்கு உட்படுத்தப்பட்டதாக கூறப்படும் பெண்ணின் தாயார் சாவகச்சேரி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்திருந்தார். இதனையடுத்து சந்தேகநபரை நேற்றுமுன்தினம் பொலிஸார் கைது செய்துள்ளதுடன், மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுவருகின்றனர். (ஐ-159)






## சைவமும் தமிழும் கண்ணெனப் போற்றிய அடிகளாரின் மறைவு உலகுக்கு பேரிழப்பே

### அகில இலங்கை சைவ மகா சபை இரங்கல்



யாழ்ப்பாணம்,ஓக.15

சைவமும் தமிழும் கண்ணெனப் போற்றிய பரமாச்சாரிய அடிகளாரின் மறைவு சைவத்தமிழ் உலகுக்கு பேரிழப்பே என்று அகில இலங்கை சைவ மகா சபை தெரிவித்துள்ளது.

ஸ்ரீலஸ்ரீ அருணகிரிநாத ஞானசம்பந்த தேசிக பரமாச்சார்ய சுவாமிகள் நேற்றுமுன்தினம் உடல்நலக்குறைவால் உயிரிழந்தார். அன்னாரின் மறைவை முன்னிட்டு சைவ மகா சபை அனுப்பிவைத்துள்ள இரங்கல் செய்தியிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. அதில் மேலும் உள்ளதாவது;

எம் ஈழத் தமிழர் பால் அளவு கடந்த அன்பு கொண்டிருந்த அடிகளாருக்கு சைவ மகா சபை ஆத்மார்த்த வணக்கங்களை தெரிவித்து நிற்கின்றது.

திருஞான சம்பந்தமூர்த்தி நாயனாரால் தோற்றுவிக்கப்பட்ட ஆயிரத்து 500 ஆண்டு பழமையான மதுரை ஆதீனம் தென் பாண்டி நாட்டின் தலையாய ஆதீனமாகும்.

அதன் 292 ஆவது குருமகா சந்நிதானமாக அடிகளார் அரை நூற்றாண்டு காலம் திகழ்ந்தார். யாழ்ப்பாணம் நல்லை திருஞான சம்பந்தர் ஆதீனம் இவரது குருவின் காலத்தில் வழி ஆதீனமாக தோற்றம் பெற்றது குறிப்பிடத்தக்கது. எம் மண்ணின் மீது அவர் கொண்டிருந்த பாசம் இன்றும் மனக்கண்ணில் வருகின்றது- என்றுள்ளது. (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மரண அறிவித்தல்

தோற்றம் 14 . 04 . 1953



மறைவு 14 . 08 . 2021

### நடேசன் ராசலிங்கம் (ராஜா அண்ணன்)

(லக்சுமி கோல்ட் ஹவுஸ், கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்)

கொட்டாஞ்சேனை கொழும்பை பிறப்பிடமாகவும், யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட நடேசன் ராசலிங்கம் (ராஜா அண்ணன்) நேற்று (14.08.2021) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் நடேசன் தம்பதிகளின் அன்பு மகனும் சண்முகம் சரஸ்வதி தம்பதிகளின் மூத்த மருமகனும் வசந்தகுமாரி (தங்கம் நெடுந்தீவு) அவரின் அன்புக்கணவரும் கோகிலவாணி (வெளிநாட்டு அமைச்சு, கொழும்பு), புஸ்பகாந் (DAN T.V), தர்சி (கனடா) ஆகியோரின் பாசமிகு தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (15.08.2021) ஞாயிற்றுக் கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறும். பின்னர் கோம்பயன்மணல் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

**22/1 கில்னர்லேன்,**
**கஸ்தூரியார் வீதி,**
**077 212 5528**

**தகவல்:**
**குடும்பத்தினர்**
**மனைவி, பிள்ளைகள்**

## கண்ணீர் அஞ்சலி

வடமாகாண ஆயுர்வேத மருத்துவர் நலன்புரி மன்றத்தில் உறுப்பினராக உள்ள **வைத்தியகலாநிதி திருமதி மு. சசிவதனி** அவர்களின் தாயார்

**சச்சிதானந்தன் புவனேஸ்வரி**

அவர்களின் மறைவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**வடமாகாண ஆயுர்வேத மருத்துவர் நலன்புரி மன்றம்**

## THREE IN TO QUIN QUIN

**Death Anniversary of Ex-Principal Of St. John's College Jaffna.**

**Late. S. Thanapalan** B.A (Ceylon, P.G.D.E (Brimingham, Uk)



*We Remember him with Gratitude and Honour him for the tremen Dous Service for St. John's nad Sri Lanka.*

***May his soul Rest in Peace***

**107/ 2 Morris Lane,**
**Chundikuli.**

**S.K. Annalingam J.P**
**(Whole Island)**

## பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை, முல்லைத்தீவு

# விலைக்கேள்விக்கானகோரல் - 2021

01. பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை முல்லைத்தீவுற்காக, பிராந்திய பெறுகைக்குழுவின் தலைவர் கீழ்வரும் அட்டவணையில் குறிப்பிடப்பட்ட வேலைகள் மற்றும் வாகனம் வடகைக்கு அமர்த்துவதற்க்காக தகமையுடையோரும் தகைமை பெற்றவருமான விலைக்கேள்வியாளர்களிடமிருந்து குறியீடுசெய்யப்பட்ட விலைக்கேள்விகளைக் கோருகின்றேன்.

02. விலைக்கேள்வியானது தேசிய போட்டி விலைக்கேள்வியின் மூலம் நடாத்தப்படும். இருப்பினும் வியாபார பதிவினை கொண்டுள்ள விலைக்கேள்வியாளர்களே விண்ணப்பிக்கமுடியும்.

03. விலைக்கேள்வியாளர்கள் கறுப்புப் பட்டியலில் பெயர் இடம் பெறாதவராயிருப்பவரும் 04/2016(i) ம் இலக்க 30.09.2016 ம் திகதிய பொதுநிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் நிர்மாணத் தொழில் அபிவிருத்தி அதிகாரசபையில் (CIDA) கட்டடம் நிர்மாணிப்பதற்கு கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள தரத்தினை பதிவு செய்யப்பட்டிருப்பதுடன் செல்லுபடியான வியாபார/கம்பனி பதிவினையும் கொண்டிருத்தல் வேண்டும்.

04. தகைமைகள் பற்றிய தேவைப்பாடுகள் விலைக்கேள்வி ஆவணத்தில் பகுதி 4 இல் குறிப்பிடப்பட்டுள்ளது. மேலதிக தகவல்கள் விலைக்கேள்வி ஆவணத்தில் Schedule (பகுதி 5), Schedule (பகுதி 3) இல் உள்ளடக்கப்பட்டுள்ளது.

05. தகுதி வாய்ந்த மற்றும் இதில் நாட்டமுள்ள விலைக்கேள்விதாரர்கள் மேலதிக தகவல்களை அலுவலக நேரங்களில் (021 229 0111) பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை, முல்லைத்தீவிலிருந்து பெற்றுக்கொள்ள முடியும்.

06. நாட்டமுள்ள விலைக்கேள்விதாரர்கள் இப் பணிமனையில் கிடைக்கும் "Application for Bid documents" என்ற படிவத்தினை பூர்த்திசெய்து மேற்காட்டிய ஒவ்வொரு பெறுகைக்கும் மீளளிக்கப்படாத பெறுகைக் கட்டணமாக கீழ்வரும் **அட்டவணையின்படி** காசாக செலுத்தி ஆங்கில மொழியிலான பெறுகைப்பத்திரங்களை அலுவலக நாட்களில் 16.08.2021 தொடக்கம் 23.08.2021 வரையான காலப்பகுதியில் 09.00 மணி தொடக்கம் 15.00 மணிவரை நேரங்களில் பெற்றுக்கொள்ளலாம்.

07. விலைக்கேள்விகள் 24.08.2021 ஆந் திகதி 11.30 மணிக்கு முன்பதாக பதிவுத்தபாலிலோ அல்லது நேரடியாகவோ பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை, முல்லைத்தீவு நிதிக்கிளை அறையில் பேணப்படும் பெறுகைகள் பெட்டியில் சேர்ப்பிக்கப்படல் வேண்டும். இவ்விலைக்கேள்விகள் 24.08.2021 ஆம் திகதி 11.30 மணிக்கு எழுத்து மூலம் அதிகாரமளிக்கப்பட்ட விலைமனுதாரர்கள் அல்லது அவர்களின் பிரதிநிதிகள் முன்னிலையில் முல்லைத்தீவு பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை மாநாட்டு மண்டபத்தில் திறக்கப்படும

08. முன்னாயத்த விலைகூறல் தொடர்பான ஒன்றுகூடல் முல்லைத்தீவு பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை மாநாட்டு மண்டபத்தில் 19.08.2021 ஆம் திகதி 11.00 மணிக்கு நடைபெறும்.

09. கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டவாறான கேள்விப் பிணைப்பொறுப்பு இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

| Bid No | Description of Work | Estimated Cost /(Rs in millions) | Contract Period | Required Grade | Required Bid Security | | Non-refundable fees(Rs.) |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | | Security Amount | Valid Period | |
| NP/MU/2021/08/LIMI/B6/01 | Improvement and Renovation of Mallavi MOH Office, Mullaitivu. | 1.866 | 78 Days | C9 and C8 (Building) | 19,000.00 | Till 01.11.2021 | 2,000.00 |
| NP/MU/2021/08/LIMI/B6/02 | Improvement and repair work at MOH Office welioya, Mullaitivu. | 1.280 | 73 Days | C9 and C8 (Building) | 13,000.00 | Till 01.11.2021 | 2,000.00 |
| NP/MU/2021/08/LIMI/B6/03 | Improvement and Renovation of Oddusuddan MOH Office, Mullaitivu. | 1.257 | 72 Days | C9 and C8 (Building) | 13,000.00 | Till 01.11.2021 | 2,000.00 |
| NP/MU/2021/08/LIMI/B6/04 | Improvement and Renovation of Mullaitivu MOH Office, Mullaitivu. | 1.340 | 72 Days | C9 and C8 (Building) | 14,000.00 | Till 01.11.2021 | 2,000.00 |
| NP/MU/2021/08/LIMI/B6/05 | Improvement and Renovation of Puthukkudiyiruppu MOH Office, Mullaitivu. | 0.918 | 67 Days | C9 and C8 (Building) | 10,000.00 | Till 01.11.2021 | 2,000.00 |
| NP/MU/2021/08/ PSDG /B6/06 | Improvement of RDHS Office | 0.610 | 59 Days | C9 and C8 (Building) | 7,000.00 | Till 01.11.2021 | 2,000.00 |

"Bidding will be conducted through National Competitive Bidding (NCB). Since the Estimated Value of Work to be performed under this procurement (excluding VAT and other taxes) is below Rs. 50 Mn., regional preference and CIDA grade preference shall apply as stipulated in Public Finance Circular No. 04/2016 (iii)" dated 18.02.2021 and Public Finance Circulars No 03/2020 and 03/2020(i) dated 09.10.2020 and 11.01.2021 respectively will also be adopted.

**வைத்திய கலாநிதி. மு.உமாசங்கர்**
**தலைவர்,**
**பிராந்திய பெறுகைகள் குழு,**
**பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை,**
**முல்லைத்தீவு.**

உடற்கூற்றுப் பரிசோதனையின் பின்

# ஹிசாலினியின் உடல் அடக்கம் செய்யப்பட்டது

கொழும்பு, ஓக. 15

நாடாளுமன்ற உறுப்பினர் ரிஷாத் பதியுதீனின் வீட்டில் எரிகாயங்களுக்கு உள்ளான நிலையில் உயிரிழந்த சிறுமி ஹிசாலினியின் உடல், இரண்டாவது உடற்கூற்றுப் பரிசோதனையின் பின்னர் அவரது பெற்றோரிடம் கையளிக்கப்பட்டு மீண்டும் அடக்கம் செய்யப்பட்டது.

குறித்த சடலம் நேற்றுமுன்தினம் பெற்றோரிடம் கையளிக்கப்பட்டநிலையில், டயகமவில் அன்றையதினமே மீண்டும் அடக்கம் செய்யப்பட்டது.

பேராதனை மருத்துவமனையில் இரண்டாவது தடவை சிறுமியின் உடல் பிரேத பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டது.

இன்று சிறுமியின் குடும்ப உறுப்பினர்கள் பூதவுடலை அடையாளம் காண்பிப்பதற்காக பேராதனை மருத்துவமனைக்குச் சென்றிருந்தனர். பின்னர் மீண்டும் அடக்கம் செய்வதற்காக சிறுமி ஹிஷாலினியின் உடல் கண்டியிலிருந்து டயகம பகுதிக்கு கொண்டு செல்லப்பட்டது.

முன்னாள் அமைச்சர் ரிசாத் பதியுதீனின் வீட்டில் எரிகாயங்களுடன் மீட்கப்பட்டு மருத்துவமனையில் சேர்க்கப்பட்டதன் பின்னர் உயிரிழந்த சிறுமி ஹிஷாலினியின் உடல் ஜூலை 30 ஆம் திகதி தோண்டி எடுக்கப்பட்டது.

கொழும்பு பல்கலைக்கழக மருத்துவ பீடத்தின் சட்ட மருத்துவத் துறை தொடர்பான பேராசிரியர் ஜீன் பெரேரா, கொழும்பு பல்கலைக்கழக மருத்துவ பீடத்தின் சட்ட மருத்துவத் துறைத் தலைவரும் விரிவுரையாளரு மான மருத்துவர் சமீர குணவர்த்தன, பேராதனை போதனா மருத்துவமனையின் சட்ட மருத்துவத்துறை விஷேட சட்ட மருத்துவ அதிகாரி பிரபாத் சேனசிங்க ஆகியோரால் இரண்டாவது உடற்கூற்றுப் பரிசோதனை கடந்த 31ஆம் திகதி நடத்தப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (து-இ)

# சாவகச்சேரியில் நேற்று 20 பேருக்கு கொரோனா தொற்று

சாவகச்சேரி,ஓக.15

சாவகச்சேரியில் நேற்று மேற்கொள்ளப்பட்ட அன்டிஜென் பரிசோதனையில் 20 பேருக்கு கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

தென்மராட்சி பிரதேசத்தில் தனிமைப்படுத்தலில் உள்ள குடும்பங்களைச் சேர்ந்தவர்கள் மற்றும் தொற்றாளர்களுடன் நேரடித் தொடர்புள்ளவர்கள் என 68 பேருக்கு அன்டிஜென் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டது. இவர்களில் 18 பேருக்கு தொற்று உறுதிப்படுத்தப்பட்டது.

இதேவேளை சாவகச்சேரி மருத்துவமனைக்கு கொரோனா அறிகுறியுடன் அன்புலன்ஸில் அழைத்துவரப்பட்ட கோப்பாய் வாசி உள்ளிட்ட இருவருக்கு மேற்கொள்ளப்பட்ட அன்டிஜென் பரிசோதனையில் தொற்று உறுதிப்படுத்தப்பட்டது. (ஐ-9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாட்டில் 87 வீத ஆசிரியர்களுக்கு முதலாவது தடுப்பூசி ஏற்றப்பட்டது

## கல்வி அமைச்சர் தெரிவிப்பு



கொழும்பு, ஓக. 15
நாட்டில் 87 வீதமான ஆசிரியர்களுக்கு முதலாவது சினோபோர்ம் தடுப்பூசி ஏற்றப்பட்டுள்ளது என்று கல்வி அமைச்சர் ஜீ.எல். பீரிஸ் தெரிவித்தார். அவர்களுக்கான இரண்டாவது தடுப்பூசியை இந்தமாத நிறைவுக்குள் வழங்குவதற்கு எதிர்பார்த்துள்ளோம்.

பாடசாலை கல்வி நடவடிக்கையை எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் முதலாவது வாரத்தில் ஆரம்பிக்க முன்னர் தீர்மானித்திருந்த போதிலும், தற்போதைய சூழ்நிலையில் உறுதியான திகதியை அறிவிக்க முடியாதுள்ளது என்றும் கல்வி அமைச்சர் மேலும் தெரிவித்தார். (த-இ)


## வேலையாட்கள் தேவை

No. 226, Main street, Jaffna எனும் இடத்தில் இயங்கி வருகின்ற VVmart Super Market க்கு கீழ்வரும் பதவி வெற்றிடங்களுக்கு வேலையாட்கள் உடன் தேவை.

1. Cashier
2. Accounting Clerk
3. Data Operator

**ஆண், பெண் இருபாலாரும்**
**வயதெல்லை 20 - 30**
**சுயவிபரக் கோவையுடன் 18, 19, 20 திகதிகளில் நேரடியாக வருகை தரவும்.**

தொடர்பு: 021 221 4266, 076 119 7016



## On-line Free Classes
### ZOOM / MICROSOFT TEAM

➤ DIPLOMA IN ENGLISH / SPOKEN ENGLISH
➤ DIPLOMA IN SINGALAM
➤ DIPLOMA IN ICT

★ காலம் : 3 மாதங்கள் ★ சான்றிதழ்
ஆரம்பம் : 21.08.2021, 10.00 AM

குறிப்பு:
★ புதிய மாணவர்கள் இணைத்துக் கொள்ளபடவுள்ளனர் பிரிவு - V
★ Student's Record book இணை 25.08.2021 இனுள் பெற்றுக்கொள்ள முடியும்.
★ ஆர்வமுடையவர்கள் Viber, Whatsapp ஊடாக இணைந்து கொள்ள முடியும்.

IPS *to your future* On-line Education Center Jaffna.
021 424 0229 / 076 685 2529



## வலுவிழந்தோர் புனர்வாழ்வுச் சங்கம்
## பதவி வெற்றிடம்

**பதவி : சமையல் செய்பவர் (பெண், வெற்றிடம் -01)**
**வயதெல்லை : 45 - 60 வருடங்கள்**
**தகைமை :**

- தரம் 8 ஆம் வகுப்பு வரை படித்திருத்தல்
- சமையல் துறையில் சிறந்த அனுபவமுடையவராக இருத்தல் வேண்டும்.
- உடல் ஆரோக்கியமானவராக இருத்தல் வேண்டும். (சுகாதார வைத்திய அதிகாரியிடம் பெற்ற மருத்துவச் சான்றிதழ் இணைப்பது விரும்பத்தக்கது)
- விடுதியில் தங்கி நின்று கடமையாற்றுபவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.
- தங்குமிட வசதி உணவு வழங்கப்படும்.

**சம்பளம் : பேசித் தீர்மானிக்கப்படும்**
**குறிப்பு : நேர்முகத் தேர்வின் மூலம் வெற்றிடம் நிரப்பப்படும்.**

விண்ணப்பப்படிவம் சுயமாகத் தயாரித்து உங்கள் பிரிவு கிராம சேவையாளரிடம் உறுதிப்படுத்தி 27.08.2021 முன்பாக கீழ் உள்ள முகவரிக்கு பதவியை என்வலப்பில் இடது பக்கம் மூலையில் எழுதி விண்ணப்பப்படிவத்தினை பதிவுத் தபாலில் அனுப்பி வைக்க வேண்டும்.

**அனுப்ப வேண்டிய முகவரி**
**தலைவர்,**
**வலுவிழந்தோர் புனர்வாழ்வுச் சங்கம்**
**47/2, ஆடியபாதம் வீதி,**
**திருநெல்வேலி வடக்கு,**
**திருநெல்வேலி.**

விண்ணபத்தில் தங்களின் கைத்தொலைபேசி இலக்கம் குறிப்பிடப்படல் மிக அவசியமானது.

தொடர்பு இலக்கம் : 021 222 5925, 077 668 1798


சம்பள பிரச்சினையை தீர்க்க

# இணையத்தளம் ஊடாக மனுவில் கையொப்பமிடல்

*ஜோசப் ஸ்டாலின் தெரிவிப்பு*

கொழும்பு, ஓக. 15
அதிபர், ஆசிரியர்கள் சம்பள பிரச்சினையை அரசு தீர்க்க வேண்டும் என்று வலியுறுத்தி, இணையத்தளத்தின் ஊடாக மனுவில் கையொப்பமிட தீர்மானிக்கப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்படுகின்றது.

நேற்றுத் தொடக்கம் இந்த நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டது என்று இலங்கை ஆசிரிய சங்க செயலாளர் ஜோசப் ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

தங்களது கோரிக்கைகள் நிறைவேறும் வரை, தமது தொழிற்சங்க நடவடிக்கை தொடரும் என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (த-இ)


# மணிவிழா வாழ்த்து

Congratulations! Congratulations!

எமது வித்தியாலய அதிபர்

## திருமதி ஜெயமணி தேவேஸ்வரன்
### SLPS - II

Best Wishes Best Wishes




அவர்கள் **15.08.2021** அன்று ஓய்வுபெற்று மணிவிழா காணும், இன்றைய நாளில் அவருடைய மகத்தான சேவையினைப் மனதாரப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

**சேவை விபரம்.**

| | | |
|---|---|---|
| ◆ வ / பூந்தோட்டம் அ.த.க.பாடசாலை. | Teacher. | 22.11.1989 - 31.12.1991 |
| ◆ வ / வவுனியா அ.த.க.பாடசாலை. | Teacher | 01.01.1992 - 31.12.1992 |
| ◆ யா / கோப்பாய் ஆசிரிய பயிற்சி கலாசாலை. | | 01.01. 1993 - 31.12.1994 |
| ◆ வ / வவுனியா தமிழ் மகா வித்தியாலயம். | Teacher. | 01.01.1995 - 30.04.1995 |
| ◆ கிளி / திருவையாறு மகா வித்தியாலயம். | Teacher. | 01.05.1995 - 31.12.1996 |
| ◆ வ / வவுனியா தமிழ் மகா வித்தியாலயம். | Teacher. | 01.01.1997 - 01.04.1998 |
| ◆ யா / சரசாலை சரஸ்வதி வித்தியாலயம். | Teacher. | 02.04.1998 - 14.08.2002 |
| ◆ யா / சரசாலை சரஸ்வதி வித்தியாலயம். | Performing principal | 15.08.2002 - 06.02.2013 |
| ◆ யா / மட்டுவில் சாந்தநாயகி வித்தியாலயம் | Performing principal | 07.02. 2013 - 25.02.2013 |
| ◆ யா / மட்டுவில் சாந்தநாயகி வித்தியாலயம் | Principal. | 26.02. 2013 - 14.08.2021 |

வாழ்த்துவோர்:
பாடசாலை சமூகம்
யா/ மட்டுவில் சாந்தநாயகி வித்தியாலயம்


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

மண்ணில் 09 . 02 . 1942

விண்ணில் 16 . 07 . 2021



அமரர் வைத்திய கலாநிதி லயன்

## DR.சிற்றம்பலம் இராஜலிங்கம்

ஓய்வுபெற்ற வைத்தியசாலை பொறுப்பதிகாரி – அச்சுவேலி பிரதேச வைத்தியசாலை, CHARTER PRESIDENT, INTERNATIONAL LIONS CLUB OF ATCHUVELY CIRCLE 306 B.1. அகில இலங்கை சமாதான நீதவான், முன்னாள் தலைவர் அச்சுவேலி தோப்பு போதிப் பிள்ளையார் தேவஸ்தானம் மற்றும் ஆலய தர்மகத்தா– தோப்பு முதலியம்மன் கோயில்.)

எமது குடும்பத்தலைவரை இழந்து கலங்கி நின்றவேளை நேரடியாகவும் தொலைபேசி வாயிலாகவும் எமக்கு ஆறுதல்களை தெரிவித்த அனைத்து அன்பு உள்ளங்களுக்கும் எமது மனமார்ந்த நன்றிகள் உரித்தாகட்டும். அன்னார் காலமான செய்தியறிந்து அன்னாரின் இல்லத்திற்குச் சென்று பல்வேறு வழிகளிலும் உதவிய அனைவருக்கும் நன்றி கூறக்கடமைப் பட்டுள்ளோம். மேலும் சுகாதார வழிகாட்டலுக்கமைய பூதவுடலானது கோம்பயன்மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்பட்டு மின்தகனம் செய்யப்பட்டவேளை அன்னாரின் இறுதிப்பயணத்தில் கலந்துகொண்டு அஞ்சலி செலுத்தியவர்களுக்கும் மற்றும் இலத்திரனியல் சமூக ஊடகங்கள் மூலமாகவும் பதாகைகள் மூலமாகவும் தமது இரங்கல்களைத் தெரிவித்தவர்களுக்கும் எமது நன்றிகளை தெரிவித்துக்கொள்கின்றோம்.

**குறிப்பு:-** அன்னாரின் அந்தியேட்டி கிரியைகள் 15.08.2021 ஞாயிற்றுக்கிழமை லண்டனிலுள்ள REDBRIDGE SPORTS &LEISURE CENTRE, JEAN BROWNINDOOR ARENA, FOREST ROAD, BARKINGSIDE, ILFORD, IG6 3HD. இல் லண்டன் நேரப்படி காலை 11:30 மணியளவில் நடைபெறும் என்பதை அறியத்தருகின்றோம்.

தொடர்புகளுக்கு
மகிந்தன்(மகன்) - + 447443 926044
ரூபதர்சினி(மகள்) - + 447854 314021
காண்டீபன்(மகன்) - + 447443 925974

குடும்பத்தினர்
"இராஜ கோட்டம்",
இராஜ வீதி, தோப்பு,
அச்சுவேலி.

# 31ஆம் நாள் வீட்டுக்கிருத்தியமும் நன்றி நவிலலும்

மண்ணில் 17 . 12 . 1942

விண்ணில் 16 . 07 . 2021



கடந்த 16.07.2021 அன்று இறைபதம் அடைந்த எமது குடும்பத் தலைவன்

## அமரர் திரு. வல்லிபுரம் இலட்சுமணன்

(ஓய்வுபெற்ற எழுது வினைஞர் - மாவட்டச் செயலகம் யாழ்ப்பாணம்)

*எம் அன்புத் தெய்வமே!*
*பாசத்தின் மறு உருவமே!*
*அன்புச் சுவர்க்கமே*
*எம் மனதில் நீங்கா இடம்பெற்ற.*
*இந்த மலர்ந்த முகத்தை இனி காணக் கிடைக்குமா!*

அன்னாரின் அந்தியேட்டி கிரியைகள் 13.08.2021 வெள்ளிக்கிழமை காலை 8.00 மணியளவில் கீரிமலை புனித தீர்த்தக்கரையில் நடைபெற்றது. வீட்டுக்கிருத்தியக்கிரியைகள் இன்று (15.08.2021) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெறவுள்ளது என்பதை உற்றார், உறவினர், நண்பர்கள் மற்றும் அரச உத்தியோகத்தர்கள் அனைவருக்கும் அறியத்தருகின்றோம்.

எமது துயரத்தில் நேரில் பங்கு கொண்டவர்களுக்கும், தொலைபேசி மூலம் அனுதாபம் தெரிவித்த உள்நாட்டு வெளிநாட்டு உற்றார், உறவினர், நண்பர்கள் அரச உத்தியோகத்தர்களுக்கும் பல்வேறு வழிகளில் உதவிய அனைத்து அன்பு உறவுகளுக்கும் எமது இதய பூர்வமான நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

நாட்டின் அசாதாரண சூழ்நிலை காரணமாக பொதுச் சுகாதார நடைமுறைகளுக்கு அமைய மேற்படி நிகழ்வில் கலந்து கொள்ளும் உறவுகளின் எண்ணிக்கை மட்டுபடுத்த வேண்டியுள்ளதால் உற்றார், உறவினர், நண்பர்கள் மற்றும் அரச உத்தியோகத்தர்கள் அவனைவருக்கும் மிகுந்த மன வேதனையுடன் அறியத் தருகின்றோம்.

பாடசாலை வீதி,
நாவற்குழி.

குடும்பத்தினர்
077 370 3931

# மரண அறிவித்தல்

தோற்றம் 16 . 04 . 1920

மறைவு 14 . 08 . 2021



## திருமதி சுப்பிரமணியம் அன்னப்பிள்ளை

மட்டுவில் வடக்கை பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சுப்பிரமணியம் அன்னப்பிள்ளை அவர்கள் நேற்று (14.08.2021) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான லோச் செல்லப்பா, கண்ணகைப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான முத்தர், கற்பகம் அவர்களின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற சுப்பிரமணியம் (ஓய்வு நிலை அதிபர்) அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான சண்முகராஜா, சரவணபவன் (ஓய்வுபெற்ற நில அளவையாளர்) கனகாம்பிகை மற்றும் குமாரசாமி (ஓய்வு நிலை பரீட்சைத் திணைக்கள உத்தியோகத்தர்) சிவராஜா, சிவகுமாரன் (ஓய்வுநிலை உபஅதிபர்), செந்திரு (ஓய்வு நிலை தகவல் திணைக்கள உத்தியோகத்தர்), சிவானந்தன் (ஓய்வு நிலை ஆசிரியர்) சிவசோதி (பிரான்ஸ்), சிவசுந்தரம் (டென்மார்க்), சோதிநாயகி (பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு தாயாரும், சந்தானலட்சமி (கனடா), காலஞ்சென்ற துரைராஜசிங்கம் ((ஓய்வுநிலை தபாலதிபர்) மற்றும் சாரதா (ஓய்வு நிலை ஆசிரியர்), சுபத்திராதேவி (ஓய்வுநிலை சிரேஸ்ட பதவி நிலை உத்தியோகத்தர் யாழ். பல்கலைக்-கழகம்), ஜெகதீஸ்வரன் (கனடா), உதயவேணி (பிரான்ஸ்), கோகிலா (பிரான்ஸ்), சுகன்யா (டென்மார்கக்), பாலசிங்கம் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு மாமியாரும்,நிர்மலன், நிசாகரன், நிரஞ்சனா, காஞ்சனா, சுபோசனா, சுதர்சன், பாஸ்கரன், சுபாஸ்கரன், எழிலினி, பரணிதரன், கோபிரமா, கோகிலன், வித்தியாபூசனி, பிரியதர்சினி, அர்ச்சனா, ஆர்த்திகா, சியானி, சியாம் சுந்தர், சாங்கவி, சிவறம்மியன், சிவதர்சன், சுஜீவன், சுயன், நிரோசன், அனோயன், தீபிகா, அவர்களின் அன்பு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (15.08.2021) ஞாயிற்றுக்கிழமை நடைபெற்று பூதவுடல் முற்பகல் 10.00 மணிக்கு ஊரிப்பிட்டி இந்து மயானத்திற்கு (வண்ணாத்தி பாலத்தடி) தகனக் கிரியைகளுக்ககாக எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

மட்டுவில் வடக்கு
சாவகச்சேரி.

சிவசோதி : 021 227 1823
சிவானந்தன் : 077 658 9651
சிவகுமாரன் : 077 744 8360

தகவல் :
குடும்பத்தினர்

# மரண அறிவித்தல்

தோற்றம் 16 . 01 . 1955

மறைவு 13 . 08 . 2021



## அழகரத்தினம் சிவபரஞ்சோதி (செட்டி)

மண்டைதீவைப் பூர்வீகமாகவும் நவக்கீரியைப் பிறப்பிடமாகவும், இல. 403, கரியாலை நாகப்படுவானை வதிவிடமாகவும் கொண்ட அழகரத்தினம் சிவபரஞ்சோதி (செட்டி), (கரியாலை நாகபடுவான் குளக்கட்டி தான்தோன்றி ஐயனார் ஆலய நிர்வாகத் தலைவர்) அவர்கள் நேற்று முன்தினம்(13.08.2021) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற அழகரத்தினம் மற்றும் சுந்தரலட்சுமி தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான நடராசா வேதவனம் தம்பதிகளின் அன்பு மருமகனும், யாழினியின் பாசமிகு கணவரும், சானுஜன், சாளினி, (கிளி/ கரியாலை நாகப்படுவான் இல 2 பாடசாலை மாணவர்கள்) ஆகியோரின் பாசமிகு தந்தையும், மணியம், கர்க்கண்டன், ராசன், பராசக்தி, காலஞ்சென்ற ரவி மற்றும் தவம், வதனம் ஆகியோரின் பாசமிகு சகோதரனும், பராசக்தி, சறோஜா, காலஞ்சென்ற சாந்தமலர் மற்றும் நந்தினி நளாஜினி ஆகியோரின் அன்பு மைத்துனருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (15.08.2021) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 9.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கரியாலை நாகபடுவான் கிழக்கு இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

077 991 5412

தகவல் : குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மரண அறிவித்தல்



திருமதி

### மகேஸ்வரி புத்திரசிங்கம்

(இளைப்பாறிய ஆசிரியை - யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி)

உரும்பிராயை பிறப்பிடமாகவும், வட்டுக்கோட்டை, யாழ்ப்பாணம் முதலாம் குறுக்குத்தெரு, பிரித்தானியா ஆகிய இடங்களை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி மகேஸ்வரி புத்திரசிங்கம் கடந்த 02.08.2021 திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ச. குலசிங்கம், நாகரத்தினம் தம்பதிகளின் அன்புப் புதல்வியும், காலஞ்சென்றவர்களான தனபாலசிங்கம் - அன்னம்மா தம்பதிகளின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற த.புத்திரசிங்கம் அவர்களின் அன்பு மனைவியும், சிவநங்கை (லண்டன்), சிவசங்கர் (லண்டன்), சிவப்பிரியா (லண்டன்) ஆகியோரின் அன்புத் தாயாரும், சாதனா (லண்டன்) அவர்களின் அன்பு மாமியாரும், விஷாலா, அனன்யா, ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், பாலேஸ்வரியின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்ற இராமச்சந்திரன், காலஞ்சென்ற விமலசிங்கம், காலஞ்சென்ற குமாரசிங்கம், பவானி, காலஞ்சென்ற சறோஜினிதேவி, அருந்ததி ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 17.08.2021 செவ்வாய்க்கிழமை அன்று நண்பகல் 12.00 மணியளவில் இங்கிலாந்தில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:

குடும்பத்தினர்.

sivaputhrasingam@doctors.org.uk

## மரண அறிவித்தல்

தோற்றம் 13 . 02 . 1932



மறைவு 10 . 08 . 2021

### விநாயகமூர்த்தி நேசம்மா

ஆரயம்பதியைப் பிறப்பிடமாகவும், நீர்வேலி, அச்சுவேலி, மட்டக்குளியை வதிவிடமாகவும் கொண்ட இவர் கடந்த (10.08.2021) செவ்வாய்க்கிழமை கொக்குவிலில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற விநாயகமூர்த்தியின் மனைவியும், காலஞ்சென்ற திரு. திருமதி சின்னத்தம்பியின் மகளும், காலமதி, சுந்தரமதி, இளஞ்சேரன், இளங்கோ, இளஞ்செழியன், இளஞ்குமார், இளம்மோகன், ஆகியோரின் தாயாரும், திரு.திருமதி முருகேசரின் மருமகளும், வேல்முருகன், ஆனந்தராசா, சுபத்திரா, சாந்தினி, பகீரதி, தேவகி, மொரீன் ஆகியோரின் மாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் கடந்த (11.08.2021) புதன்கிழமை முற்பகல் 9.30 மணியளவில் கொக்குவில் இல்லத்தில் நடைபெற்று கொக்குவில் இந்து மயானத்தில் நல்லடக்கம் செய்யப்பட்டது.

இந்த அறிவித்தலை, உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும் நடந்து முடித்த இறுதிக்கிரியைகளில் எமக்கு பூரண ஒத்துழைப்பு வழங்கிய உத்தியோகத்தர்கள், நண்பர்கள், சுகாதார பிரிவினர், கிராம உத்தியோகத்தருக்கும் நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

கோ.கி. ஆனந்தராசா,
குளம்கரை வீதி,
கொக்குவில்.

தகவல்
குடும்பத்தினர்

077 610 6648, 077 114 1586

## வீடு விற்பனைக்கு

இல.177, பாண்டியன் தாழ்வு, கொழும்புத்துறை வீதியில் ஒன்றேகால் பரப்பினுள் அமைந்துள்ள வீடு (நன்னீர் கிணற்றுடன்) உடன் விற்பனைக்குண்டு. (ஜீவா பேக்கறிக்கு அருகில்) தரகர் தேவையில்லை

தொடர்பு: **077 658 9624, 076 452 5250**

(5.00 p.m.பின் தொடர்புகொள்க)

விலை : ஒருகோடியே இருபது இலட்சம்

## கண்ணீர் அஞ்சலி



தோற்றம் 01.07.1943 — மறைவு 14.08.2021

எமது பிரதேச செயலகத்தில் பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தராக கடமையாற்றும்
**திரு.மகேந்திரன் ஜெயகாந்தன்**
அவர்களின் அன்புத் தந்தையார்

**அமரர். கந்தையா மகேந்திரன்**

அவர்களின்
பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதோடு அன்னாரின் ஆத்மா சாந்தி அடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

பிரதேச செயலரும், உத்தியோகத்தர்களும்
உத்தியோகத்தர் நலன்புரிச் சங்கம்,
பிரதேச செயலகம்-வேலணை.

## Admiralty Investment (Pvt) Ltd
### Hydrophonics Research & Development

1. எங்களால் வழங்கப்படும் Hydrophonics தொடர்பான பயிற்சி நெறியில் (Course) கலந்து கொள்ளவேண்டியது அவசியம்.
   (பயிற்சிநெறி கட்டணம் எங்களால் செலுத்தப்படும்.)
2. பயிற்சி நெறிக்காக 13,500/= வழங்கப்படும்.
3. பயிற்சி நெறிக்கான கொடுப்பனவினை பெறுவதற்கு 95 % பயிற்சி நெறியில் கலந்துகொள்வது (Attendance) மிக அவசியம்.
4. பயிற்சி நெறி (Training) 3 மாத காலம். மாதத்திற்கு 15,000/= ஊதியம் வழங்கப்படும்.
5. பயிற்சிநெறி நிறைவின் பின் (Training) 17,500/= ஆக இருக்கும்.
6. ஒரு வருடத்திற்குப் பின் செயல்திறன் அடிப்படையில் ரூ.20,000/= ஆக உயர்த்தப்படும்.
7. ஆரம்ப ஊழிய ஒப்பந்தம் இரண்டாவது வருட முடிவில் நீடிக்கப்படும்.

**தகைமையுடையோர்:**

1. பாடசாலை படிப்பினை முடித்து வெளியேறியோர்.
2. ஆங்கிலம் மற்றும் சிங்களம் மொழி தெரிந்தோர் சிறந்தது.
3. விவசாயம் / ஹைட்ரோபோனிக்ஸ் தொடர்பான கல்வியறிவு / அனுபவம் கொண்டவர்கள் சிறந்தது.

உங்களது CV இனை
admiraltyhydrophonics@gmail.com இற்கு
அனுப்பி வைக்கவும்.

## 29ஆம் நாள் நினைவஞ்சலி

பிறப்பு 13 . 03 . 1944



இறப்பு 18 . 07 . 2021

### திருமதி சிவபாக்கியம் நடராசா

அல்வின் வீதி — காரைநகர்.

பஞ்ச பூதங்களின் பரிவுடன்
பாரில் தோன்றி வாழ்ந்து
மறையும் மானிடர் கோடி கோடி....
மறைந்தும் மற்றவர் மனங்களில்
மறையா நினைவுகளாய்
மாண்புறும் மனிதர் தொகையோ
சில நூறு.....

கருணை மிகு உதவி கொள்கைகளால்.
கல்விச் சேவைகளால்
கண்டிப்பான வழி காட்டுதல்களால்
காலம் முழுதும் எம்மோடு கலந்திருக்கும்
அன்னையே
எம்மை விட்டுப்போகாது
உங்கள் நினைவுகள்
ஒரு போதும்.

ஆலடி, காரைநகர்.

யோகேஸ்வரன்
குடும்பம்



## தென்மராட்சியில் அன்டிஜென்: 18 பேருக்கு தொற்றுறுதி

கொடிகாமம், ஓக. 15

தென்மராட்சி சாவகச்சேரி சுகாதார வைத்திய அதிகாரி பிரிவிற்குட்பட்டவர்களுக்கு மேற்கொள்ளப்பட்ட அன்டிஜென் பரிசோதனையில் 18 பேருக்கு கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

சாவகச்சேரி சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையில் நேற்று 68 பேருக்கு மேற்கொள்ளப்பட்ட அதிவிரைவு அன்டிஜென் பரிசோதனையின்போதே 18 பேருக்கு கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டவர்களில், சாவகச்சேரி தனியார் நிறுவன ஊழியர், கொடிகாமம் மீன் சந்தை வியாபாரி, வெளிமாவட்டங்களில் பணியாற்றும் அரச உத்தியோகத்தர்கள் மற்றும் இலங்கைப் போக்குவரத்துச் சாலை ஊழியர்களும் உள்ளடங்குகின்றனர். (ம-159)



## சுகாதார வழிகாட்டலை சட்டமாக்கத் தீர்மானம்

*நாளை வர்த்தமானி வெளியீடு*

கொழும்பு, ஓக. 15

சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்தால் வெளியிடப்படும் சில வழிகாட்டல்களை சட்டமாக்குவதற்கான வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்படவுள்ளது எனச் சுகாதார அமைச்சர் பவித்ரா வன்னியாராச்சி தெரிவித்தார்.

சுகாதார அமைச்சில் நேற்று நடைபெற்ற கலந்துரையாடலின்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார். இந்த வர்த்தமானி அறிவித்தல் நாளை திங்கட்கிழமை வெளியிடப்படவுள்ளது எனவும் அவர் குறிப்பிட்டார்.

இதனிடையே நாடு முழுவதும் கொரோனாத் தொற்றாளர்களை வீட்டிலேயே வைத்து சிகிச்சை அளிக்கும் திட்டம் எதிர்வரும் வெள்ளிக்கிழமை முதல் ஆரம்பிக்கப்படவுள்ளது எனவும் சுகாதார அமைச்சர் பவித்ரா வன்னியாராச்சி மேலும் தெரிவித்தார். (ம-22)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 31ஆம் நாள் நினைவஞ்சலி

மண் நெகிழ 28.11.1952 கண் நெகிழ 17.07.2021

உடுவிலில் மொட்டவிழ்ந்து வவுனியாவில் மணம் வீசிய மண்
உதிர்ந்து வீழ்ந்து மாதம் ஒன்றாகியதோ?



## அமரர் நாகலிங்கம் சுந்தரலிங்கம்

(விவசாயத் திணைக்களம் - வவுனியா)

காற்றையும் அன்பால் நுரைக்க வைத்த சுந்தரமே
மரணம் பாட நீ உறங்கி விட்டாயோ!
விரலுக்கு விஞ்சி வீங்கி வேதனை தலையில் தாங்கிய
வாரி வழங்கிய பாரியே அளந்து பறித்தார் உன் கரத்தை
புவியின் மேல் பூத்த ஐயப்பா காலவன் வரும்போது கண்ணை மூடியது ஏன்
சுந்தரமே வேண்டுமென்று அரவணைத்துக் கொள்வதற்காக
கடல் தாண்டிச் சென்ற தலைமகனை காணவில்லை என்றா
உன் முகத்தை மூடி மல்லாந்து சென்றாயோ?
உங்கள் இழப்பினால் எங்கள் கண்ணிமைகள் தாழ்ந்து
திரவ மழை பொழிகிறது.
ஆத்மா சாந்தி பெற ஆண்டவனை வேண்டுகின்றோம்.

**குறிப்பு: அசாதாரண சூழ்நிலை காரணமாக 16.08.2021 அன்று நடைபெற விருந்த வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது என்பதனை அறியத் தருகின்றோம்.**

**குடும்பத்தினர்.**

# மரண அறிவித்தல்

பிறப்பு 18 . 05 . 1940 இறப்பு 14 . 08 . 2021



## திரு. கந்தசாமி சிவாநந்தம்

(ஓய்வுபெற்ற தபாலதிபர்)

சங்குவேலியைப் பிறப்பிடமாகவும், சுன்னாகம் வரியப்புலத்தை வதிவிடமாகவும் கொண்ட திரு.கந்தசாமி சிவாநந்தம் (ஓய்வுபெற்ற தபால் அதிபர்) அவர்கள் நேற்று (14.08.2021) சனிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தசாமி பவளநாயகி ஆகியோரின் மூத்த மகனும், காலஞ்சென்றவர்களான ஆறுமுகசாமி சிவபாக்கியம் தம்பதியரின் மூத்த மருமகனும், நாகபூசணியின் அன்புக் கணவரும், நந்தகுமார் (ஆசிரியர், வேம்படி மகளிர் பாடசாலை), சிவதர்சினி (ஆசிரியர், கா/நடேஸ்வராக் கல்லூரி) ஆகியோரின் அன்புத் தந்தையும், யாழினி (அபிவிருத்தி இணைப்பாளர், கச்சேரி, யாழ்ப்பாணம்), கோகிலன் (பணிப்பாளர், உயர் தொழில்நுட்ப நிறுவனம், Advanced Technological Institute, Jaffna) ஆகியோரின் அன்பு மாமனாரும், காலஞ்சென்ற நாகேந்திரா, நாகராணி ஆகியோரின் மைத்துனரும், சிவநேசன், சிறிராதா, சிறி வசந்தா சிறிபாஸ்கரன் ஆகியோரின் பாசமிகு அண்ணனும், காலஞ்சென்ற சண்முகசுந்தரம், அருந்ததி நாயகி ஆகியோரின் சகலனும், ரிசிபவன் (பரி.யோவான் கல்லூரி A/L), துலக்சினி (வேம்படி மகளிர் பாடசாலை -A/L), சர்மிகா (வேம்படி மகளிர் பாடசாலை, வகுப்பு-8) ஆகியோரின் பேரனும், சிவரூபன், சிறிகரன் ஆகியோரின் அன்புப் பெரியப்பாவும், ஜனார்த்தனன் இன் பெரிய மாமாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (15.08.2021) ஞாயிற்றுக்கிழமை மதியம் 12 மணியளவில் நடைபெற்று, சுன்னாகம் கொத்தியாலடி இந்து மயானத்தில் தகனக் கிரியைகள் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல்: குடும்பத்தினர்.**

**021 224 1338, 077 6566 739, 071 8235 631,**
**076 967 4206, 077 391 6269**

கொவிட் தீவிரம்

## கரைச்சிப் பிரதேச சபையின் செயற்பாடுகள் நிறுத்தம்!

கொரோனாத் தொற்றின் தாக்கம் தீவிரமானதை அடுத்து கரைச்சிப் பிரதேச சபையின் செயற்பாடுகள் மறு அறிவித்தல் வரை இடைநிறுத்தப்பட்டுள்ளன. கரைச்சி பிரதேச சபையில் இதுவரை 17 பேருக்கு கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. அத்துடன் நேற்றுமுன்தினம் வீதியில் விழுந்து உயிரிழந்த கரைச்சிப் பிரதேச சபையின் சுகாதாரப் பணியாளருக்கும் தொற்று உறுதிப்படுத்தப்பட்டது. இந்த நிலையிலேயே கரைச்சிப் பிரதேச சபையின் செயற்பாடுகள் மறு அறிவித்தல் வரை இடைநிறுத்தப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்பட்டது. (ம-6)


## பூந்தோட்டப் பராமரிப்பாளர் தேவை



பூந்தோட்டப் பராமரிப்பில் ஈடுபட்டோருக்கு
முன்னுரிமை முழு நேரமாகவோ
பகுதி நேரமாகவோ பணியாற்றலாம்.

ஆர்வமுள்ளோர் தொடர்புகொள்ளவும்.

**தொடர்புக்கு:**
**0777808935**


# மரண அறிவித்தல்

## திருமதி பாக்கியம் நடராசா



தையிட்டி காங்கேசன்துறையை பிறப்பிடமாகவும் கோண்டாவிலை வதிவிடமாகவும் கொண்ட திருமதி பாக்கியம் நடராசா நேற்று (14.08.2021) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லையா சின்னம்மா தம்பதியரின் புதல்வியும், காலஞ்சென்றவர்களான பொன்னையா தம்பதியரின் மருமகளும், வசந்தகோகிலா, சாந்தி, ரகுராஜ், யுவராஜ், சுகந்தி, ஜெயந்தி, சுமதி மற்றும் றதி ஆகியோரின் அன்பு தாயாரும், கந்தசாமி, சுப்பிரமணியம், நந்தினி, யோகேஸ்வரி, திருச்செல்வம், சுப்ரமணியம், சக்திதாசன் மற்றும் உதயகுமார் ஆகியோரின் அன்பு மாமியாரும், மிதிலா பகீரதன், ரோமிலா, விஜயதாஸ், ஷகிலா, ஹரிஷாந்தன், ஹர்ஷான், ஹர்ஷனா, ரம்யா, ஜெரஞ்யா, விதுஷா, அயேஷரியா, யுமேஷ், பிரதீஸ் ரம்மியகலா, தனுதீஸ், ரேகாந்த், அஜித்காந்த், விமலகாந்த், தனுஸ்காந்த், ரொபேகா, சஸ்மிலா, சுகாஷ் மற்றும் டிமோஜன் ஆகியோரின் பேர்த்தியும், சஸ்மிலன், ஜெஸ்மி, பவிஷன் ஆகியோரின் பூட்டியும், (காலஞ்சென்றவர்களான அன்னபூரணம், சிவஞானம் மற்றும் கிருஸ்ணதேவி, ஞானசிங்கம், சோதிமலர் ஆகியோரின் அன்பு சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (15.08.2021) ஞாயிற்றுக்கிழமை நண்பகல் 12.00 மணிக்கு அன்னாரின் வீட்டில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கோண்டாவில் காரைக்கால் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார் உறவினர்கள் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும் .

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

# மரண அறிவித்தல்

**தோற்றம்:19.10.1971 மறைவு:12.08.2021**

## லோறன் கிறிஸ்ரி அன்ரன் றொபின்சன்

(செல்லகுமார்)



எழுவைதீவை பிறப்பிடமாகவும் கெலன் தோட்டத்தை வசிப்பிடமாகவும் கொண்ட லோறன் கிறிஸ்ரி அன்ரன் றொபின்சன் (செல்லகுமார்) கடந்த (12.08.2021) அன்று அகால மரணமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற லோறன் கிறிஸ்ரி மரியநாயகி தம்பதியரின் அன்பு மகனும், அன்ரன் றொபின்சன் கிருசாந்தி (ரஜிதா) வின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற சிவநாதன், புஸ்பம் ஆகியோரின் மருமகனும், அருண்குமார், அஜன், அஜந்தன் ஆகியோரின் அன்பு தந்தையும், ஜெயக்குமார் (குருநகர்), காலஞ்சென்ற வசந்தகுமார் (எழுவைதீவு), கலிஸ்ரா (பிரான்ஸ்), சசிகுமார் (பிரான்ஸ்), செபஸ்ரீன் (மாதகல்), ஜெனிஸ்ரா (எழுவைதீவு), ஆகியோரின் சகோதரரும், கிறிஸ்ரி யூலியஸ் (பிரான்ஸ்), பிரியா, சுதா, ஜெசி, செல்லப்பா, கஜேந்தினி ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் அவரது இல்லத்திலிருந்து இன்று (15.08.2021) ஞாயிற்றுக்கிழமை காலை 9.00 மணியளவில் புனித கொஞ்சேஞ்சிமாதா சேமக்காலைக்கு நல்லடக்கத்திற்காக கொண்டுசெல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார் உறவினர்கள் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும் .

**076 884 6688**
**077 4269 669**

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*சுய பயணக்கட்டுப்பாட்டை....*

இது தொடர்பில் அந்தச் சங்கத்தின் தலைவர் உபுல் ரோஹண நேற்று நடத்திய செய்தியாளர் சந்திப்பில் மேலும் தெரிவிக்கையில்,

'இலங்கையில் கொரோனா பரவுவதைக் கட்டுப்படுத்த உலக சுகாதார நிறுவனம் பரிந்துரைத்த நடவடிக்கைகள் எவையும் புதிய வழிகாட்டுதல்களில் சேர்க்கப்படவில்லை. எதிர்வரும் திங்கட்கிழமை முதல் ஏழு நாள் பயணக் கட்டுப்பாடு மூலம் கொரோனா நெருக்கடியைத் தணிக்கப் பொதுமக்கள் ஒத்துழைக்கவேண்டும். பயணக் கட்டுப்பாடுகளை விதிக்க அரசிடமோ அல்லது அதிகாரிகளிடமோ வலியுறுத்தினாலும் எந்த நடவடிக்கையும் எடுக்கப்படாது.

தினசரி உயிரிழக்கும் 150 கொரோனா நோயாளிகளில் சக இலங்கையர்களின் குழந்தைகள் அடங்குவர். தற்போதைய நிலைமையைக் கட்டுப்படுத்த ஒரே வழி கடுமையான பயணக் கட்டுப்பாடுகள் மட்டுமே.

மருத்துவமனைகளின் வரம்புகள் மற்றும் இடைநிலை சிகிச்சை நிலையங்களின் வசதிகள் நிரப்பப்பட்டதால் ஏற்கனவே நாட்டில் நடைமுறையில் இருந்த கட்டுப்பாடுகள் கடுமையாக்கப்பட்டு பயணக் கட்டுப்பாடுகள் விதிக்கப்படும் என்று பலர் எதிர்பார்த்தனர். தற்போதைய நிலைமையை மாற்றியமைக்க இந்த வழிகாட்டுதல்கள் போதுமானதாக இல்லை என்று உலக சுகாதார நிறுவனம் எச்சரித்துள்ளது' என்றார். (ம-22)

*மாகாண....*

னைகளும் இடம்பெற்று வருகின்றன என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

'அத்தியாவசிய சேவையில் ஈடுபடுபவர்களுக்கு மாத்திரமே மாகாணங்களுக்கிடையில் பயணிப்பதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இதன்போதும் தேவையானோர் மாத்திரமே பயணிக்க முடியும். இது தொடர்பில் விசேடமாக கண்காணிக்குமாறு மாகாண எல்லைகளில் அமைக்கப்பட்டுள்ள சோதனைச் சாவடிகள், நடமாடும் கண்காணிப்புப் பிரிவு மற்றும் மோட்டார் சைக்கிளில் கண்காணிப்புக்களில் ஈடுபடும் அதிகாரிகளுக்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது.

இந்தக் கண்காணிப்புகளுக்கு இராணுவப்படை, கடற்படை மற்றும் விமானப் படையின் ஒத்துழைப்புக்கள் பெற்றுக் கொள்ளப்பட்டுள்ளன. குறிப்பாக மேல் மாகாணத்துக்குள் பிரவேசிக்கக்கூடிய பிரதான வீதிகள், குறுக்கு வீதிகள் மற்றும் பாலங்கள் உள்ளிட்ட சகல பகுதிகளும் கண்காணிக்கப்படவுள்ளன. இதே போன்று ஏனைய மாகாண எல்லைகளிலும் பயணிக்க முடியாது. மாகாணங்களுக்கிடையில் பொதுப் போக்குவரத்துக்கள் இயங்க முடியாது. மீறி இயக்கப்பட்டால் பஸ் சாரதிகள் மற்றும் நடத்துநர்கள் கைதுசெய்யப்படுவார்கள்' என்றார். (ம-22)

*கொவிட்...*

தின் உறுதிப்படுத்தலுடன் அரச தகவல் திணைக்களத்தால் வெளியிடப்பட்டுள்ள அறிக்கையில் இந்தச் சாவுகள் தொடர்பான விபரங்கள் வெளியிடப்பட்டுள்ளன. இதன்படி நாட்டில் பதிவான கொரோனாச் சாவுகளின் மொத்த எண்ணிக்கை 5 ஆயிரத்து 935ஆக அதிகரித்துள்ளது. (ம-22)

*கர்ப்பிணிப்...*

அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஏனைய நபர்களை விட கர்ப்பிணித் தாய்மார்களை கொரோனா வைரஸ் அதிகம் தாக்குகின்றது. இதை உலக சுகாதார நிறுவனம் அண்மையில் அறிவித்துள்ளது.

கடந்த இரண்டு மாதங்களுக்கு முன்னர் கொவிட் தொற்றால் உயிரிழந்த கர்ப்பிணிப் பெண்களின் எண்ணிக்கை ஏழாக இருந்தது. ஆனால் தற்போது அது மூன்று மடங்காக அதிகரித்துள்ளது. கர்ப்பிணித் தாய்மார்கள் தாங்கள் எதை செய்வதற்கு முன்பும் இரண்டு உயிர்கள் என்பதை மறக்கக்கூடாது. சிசு வயிற்றில் வளரும்போது ஏற்படும் தாக்கமானது நீண்டகால தாக்கத்தை உண்டாக்கும். கர்ப்பிணித் தாய்மார்களுக்கு தடுப்பூசி ஏற்றுவது தொடர்பான பல்வேறு சந்தேகங்கள் பலர் மத்தியிலும் எழுகின்றன.

இதுவரையில் எமக்கு கிடைத்துள்ள தகவலின் அடிப்படையில் கொவிட் வைரஸ் தொற்றுக்கு எதிரான அனைத்துத் தடுப்பூசிகளும் பாதுகாப்பானவை. இதனை கர்ப்பிணிகள் அனைவரும் பெற்றுக்கொள்ளலாம். உலக சுகாதார ஸ்தாபனத்தின் அறிக்கைகளின்படி தடுப்பூசிகளை பெற்ற தாய்க்கோ அல்லது வயிற்றிலிருக்கும் சேய்க்கோ குறுகியகால பக்கவிளைவுகள் எதுவும் இல்லை என உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

நீண்டகால பக்க விளைவுகள் எவ்வாறு இருக்கும் என்பதற்கான சான்றுகள் எதுவும் இதுவரை கிடைக்கப்பெறவில்லை - என்றார். (ம-27)

*காணாமற்போன...*

தங்கியிருந்து நேற்றுமுன்தினம் கடற்றொழிலுக்கு சென்றுள்ளார். இந்த நிலையில் அவர்கள் தொழிலுக்குச் சென்ற படகு இரணைதீவில் விபத்துக்குள்ளானது. அதில் பயணித்த மூவரில் இருவர் நீந்திக் கரையேறி வீடுதிரும்பிய நிலையில் மற்றையவர் காணாமல் போயுள்ளார். காணாமற்போனவரை தேடும் பணி கடற்படையால் முன்னெடுக்கப்பட்டது. இந்த நிலையில் அவரின் சடலம் மண்டைதீவுக் கடற்பரப்பில் நேற்று மீட்கப்பட்டது. (ம-27)

*கொரோனா...*

அமைச்சின் தொற்று நோயியல் பிரிவு தெரிவித்துள்ளது. இதற்கமைய நாட்டில் இதுவரை அடையாளம் காணப்பட்ட கொரோனாத் தொற்றாளர்களின் மொத்த எண்ணிக்கை 3 லட்சத்து 51 ஆயிரத்து 515ஆக அதிகரித்துள்ளது. இதேவேளை, கொரோனாத் தொற்றால் பாதிக்கப்பட்ட மேலும் 2 ஆயிரத்து 717 பேர் குணமடைந்து நேற்று வீடு திரும்பியுள்ளனர். இதையடுத்து நாட்டில் கொரோனாத் தொற்றிலிருந்து குணமடைந்தவர்களின் மொத்த எண்ணிக்கை 3 லட்சத்து 7 ஆயிரத்து 345 ஆக உயர்வடைந்துள்ளது. (ம-22)

# மரண அறிவித்தல்

மண்ணில் · 20 · 07 · 1964



விண்ணில் · 13 · 08 · 2021

## செல்வி வனிதா பூவிலிங்கம் B.A, Dip.in Edu

**(ஆசிரியை இணுவில் மத்திய கல்லூரி)**

யாழ்ப்பாணத்தை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட செல்வி வனிதா பூவிலிங்கம் நேற்று (14.08.2021) சனிக்கிழமை கர்த்தருக்குள் நித்திரையடைந்துள்ளார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பொ.பூவிலிங்கம் (இளைப்பாறிய ஆசிரியர். யா/பரி யோவான் கல்லூரி யாழ்ப்பாணம்) மரியமுத்து பூவிலிங்கம் (இளைப்பாறிய அதிபர் யா/ஆனைப்பந்தி அமெரிக்கன் மிஷன் த.க. பாடசாலை) தம்பதியரின் செல்வப் புதல்வியும், காலஞ்சென்றவர்களான பொன்னையா லட்சுமி ஜனவாரிஸ் எஸ்வேனிக்கம் தம்பதியரின் பாசமுள்ள பேர்த்தியும், பூ.சந்திரவதனா (ஓய்வுநிலை முகாமைத்துவ உதவியாளர் (யா. பனை அபிவிருத்தி சபை), ற.வனஜா (பிரான்ஸ்), காலஞ்சென்ற பூ.வளர்மதி மற்றும் பூ.ஜெயவதனி (விஜி) ஆகியோரின் அன்புச் சகோதரியும், க.றஜந்தன் (மின் பொறியியளாளர், பிரான்ஸ்) அன்பு மைத்துனியும், ற.வைதிகா (மருத்துவபீட மாணவி-பிரான்ஸ்), ற.றொசேன் ராஜ் (பொறியியல் பீட மாணவன் - பிரான்ஸ்) ஆகியோரின் பாசமுள்ள சித்தியுமாவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை பின்னர் அறியத்தரப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார் உறவினர்கள் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**85, தேவாலய வீதி,**
**யாழ்ப்பாணம்.**

**தகவல்:**
**குடும்பத்தினர்.**
**021 222 7859**

*வடக்கில்...*

மருத்துவமனையில் 575 பேரின் மாதிரிகள் பி.சி.ஆர். சோதனைக்கு உட்படுத்தப்பட்ட நிலையில் 138 பேருக்குத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டது. அதே நேரம் நேற்று 86 பேருக்கு அன்டிஜன் பரிசோதனையில் தொற்று உறுதிப்படுத்தப்பட்டது. (ம)

*120 கிலோ...*

ளனர். பொலிகண்டி கடற்கரை வீதியில் வைத்து சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டனர். சந்தேக நபர்களில் ஒருவருக்குக் கொரோனாத் தொற்றும் உறுதிப்படுத்தப்பட்டது. பொலிகண்டி கடற்கரை வீதியில் வைத்து நேற்று அதிகாலை 5.30 மணியளவில் இந்தக் கடத்தல் கடற்படையினராலும் வல்வெட்டித்துறை பொலிஸாராலும் முறியடிக்கப்பட்டது என்று கடற்படையினர் குறிப்பிட்டனர். கைது செய்யப்பட்ட சந்தேக நபர்கள் 38, 34, 28 வயதுடைய மாங்குளம், இரணைமடு மற்றும் கிளிநொச்சியைச் சேர்ந்தவர்கள். (ம-20,26)

*இணைய....*

செய்தி வெளியிட்ட குற்றச்சாட்டில் குறித்த எழுத்தாளர் கைதுசெய்யப்பட்டுள்ளார். கண்டியில் வசித்து வரும் கீர்த்தி ரத்நாயக்க என்பவரே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளார் என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண தெரிவித்துள்ளார்.

முன்னாள் விமானப்படை வீரரான கீர்த்தி ரத்நாயக்க 'லங்கா ஈ நியூஸ்'க்கு பாதுகாப்பு விவகாரங்கள் தொடர்பான கட்டுரைகளை எழுதி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ம-22)

*செஞ்சோலை...*

இந்தத் தாக்குதலில் 54 மாணவிகளும் 7 பணியாளர்களுமாக 61 பேர் கொல்லப்பட்டனர். அவர்களின் 15ஆவது நினைவுதினத்தை நேற்று கடைப்பிடிக்க ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. இந்த நிலையில் துப்பாக்கி ஏந்திய இராணுவத்தினரும் பொலிஸாரும் குவிக்கப்பட்டு மேற்படி நினைவேந்தல் நிகழ்வுகள் தடுத்து நிறுத்தப்பட்டன. (ம-19)

*இறால்...*

மற்றும் கடற்றொழிலாளர்கள் இணைந்து இந்த போராட்டத்தை முன்னெடுத்தனர்.

வேலணை வடகிழக்கு ஜே/13 கிராம அலுவலர் பிரிவில் தனியார் நிறுவனத்தின் நவீன இறால் பண்ணைத் திட்டம் கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவால் கடந்த 11ஆம் திகதி வைபவ ரீதியாக அங்குரார்ப்பணம் செய்யப்பட்டது. குறித்த திட்டத்துக்கு எதிர்ப்பு தெரிவித்தே இந்தக் கவனவீர்ப்புப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது. (ம-27)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தொற்றா நோயாளர்களை விசேடமாகக் கவனியுங்கள்

## சுகாதார அதிகாரிகளைப் பணித்தார் ஜனாதிபதி

கொழும்பு, ஓக. 15

60 வயதுக்கு மேற்பட்டவர்கள் மற்றும் தொற்றா நோய்களால் நீண்ட காலமாகப் பாதிக்கப்பட்டுள்ளவர்கள் குறித்து விசேட கவனம் செலுத்துமாறு ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச, சுகாதார அதிகாரிகளுக்கு அறிவுறுத்தியுள்ளார்.

இது பற்றி அவரது ஊடகப்பிரிவின் செய்திக் குறிப்பில்,

கடந்த சில நாள்களில் இடம்பெற்ற இறப்புகள் குறித்து மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளின் படி உயிரிழந்தவர்களில் பெரும்பாலானவர்கள் மேல் மாகாணத்தைச் சேர்ந்தவர்கள் என்றும் இவர்களில் அதிக சதவீதத்தினர் 60 வயதுக்கு மேற்பட்ட, தடுப்பூசி பெற்றுக்கொள்ளாத மற்றும் தொற்றா நோய்களால் பாதிக்கப்பட்டவர்கள் என்றும் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

எனவே, 60 வயதுக்கு மேற்பட்டவர்கள் மற்றும் தொற்றா நோய்களால் நீண்டகாலம் பாதிக்கப்பட்டுள்ளவர்கள் குறித்துக் கவனம் செலுத்தி, விசேட நிகழ்ச்சித் திட்டமொன்றைத் தயாரிக்க வேண்டியதன் அவசியத்தை ஜனாதிபதி வலியுறுத்தினார். பி.சி.ஆர். மற்றும் அன்டிஜென் பரிசோதனைகளைச் செய்யும்போது, 60 வயதுக்கு மேற்பட்டவர்கள் மற்றும் பல்வேறு நோய்களால் பாதிக்கப்பட்டவர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படவேண்டும். என்றுள்ளது. (த)

**விற்பனைக்கு**

1. யாழ்ப்பாணம் சென்.ஜோன்ஸ் பாடசாலைக்கு அருகில் பிரதான வீதியோரமாக 5 ¾ பரப்புக்காணி
2. முதலாம் குறுக்குத் தெருவில் Pizza Hut இற்கு அண்மையாக 2 பரப்புக் காணி
3. கொடிகாமத்தில் A9 வீதியிலிருந்து 300 m தூரத்தில் 8 பரப்புக் காணி

தொடர்பு: 077 221 6683

**பணிப்பெண் தேவை**

ஊர்காவல்துறை சுருவிலில் வீட்டை பராமரிப்பதற்கு பணிப்பெண் தேவை. குடும்பத்தினருடன் தங்குமிட வசதி உண்டு.

சம்பளம் பேசி தீர்மானிக்கப்படும்

தொடர்பு 077 061 6191

**கடை வாடகைக்கு தேவை**

யாழ் நகரில் இயங்கும் Royal Granite Coner நிறுவனத்திற்கு கடை வாடகைக்குத் தேவை.

தொடர்புக்கு: 077 3580 547

**வேலையாட்கள் தேவை**

யாழ் நகரில் இயங்கும் பிரபல தனியார் விருந்தினர் விடுதிக்கு ரெஸ்டோரண்ட் waiter வேலை, மற்றும் விடுதி பராமரிப்பு வேலைகளுக்கு முழு நேரமாகவும், காலை, மாலை, வேளைகளில் பகுதி நேரமாகவும் வேலை செய்யக்கூடியவர்கள் தேவை.

தொடர்பு 077 668 1840

**Individual English Classes**

யாழ்நகரில் இலகுவாக கதைக்கும் ஆங்கில வசன அமைப்பு முறை Active and Passive, Direct and Reported Speech, Grade 7- GCE OL,AL

பட்டதாரிகள் தொழில் புரிவோர்.

077 766 8725

**வேலைக்கு ஆட்கள் தேவை**

யாழ் நகரில் இயங்கும் வியாபார நிலையத்திற்கு ஆண், பெண் இருபாலாரும் தேவை.

**விற்பனையாளர், காசாளர், கணக்காளர்,**

தொடர்பு 076 267 7434

**நீர்க்கசிவை தடுப்பதற்கு Water Proofing**

உங்கள் கட்டடங்களில் ஏற்படும் நீர்க்கசிவுகளை 10 வருட உத்தரவாதத்துடன் நிறுத்தித் தருகிறோம்.

Finexஇன் ஏக விநியோகஸ்தராகிய எங்களிடம் விசேட விலைக் கழிவு வழங்கப்படும்.

North and East Engineering

077 5244 177, 077 232 3000, 021 222 2363

**படவரைஞர் தேவை**

மானிப்பாயில் உள்ள எமது அலுவலகத்திற்கு Auto CAD படவரைஞர் அவசரமாக தேவை.

தொடர்பு: 077 213 7266

mail - aniththan@gmail.com

**தச்சு வேலையாள்கள் தேவை**

சுழிபுரம், தொல்புரத்தில் எமது தொழிற்சாலையில் வேலை செய்யக்கூடிய இருவர் தேவை.

சம்பளம் : 1800 - 2500

தொடர்பு: 077 213 7266

**வேலையாட்கள் தேவை**

யாழ்நகரில் அமைந்துள்ள குளிர்பான நிலையமொன்றிற்கு விநியோகப்பகுதியில் வேலை செய்வதற்கு ஆண், பெண் இருபாலாரும் தேவைப்படுகின்றனர்.

ஆர்வமுள்ளவர்கள் கீழ்க்காணும் தொலைபேசி இலக்கத்துக்கு தொடர்புகொள்ளவும்.

077 618 2725

## நீங்கா நினைவலைகள்

10ஆம் ஆண்டு     11ஆம் ஆண்டு

பிறப்பு 05.02.1933     பிறப்பு 04.06.1935



இறப்பு 30.06.2011     இறப்பு 16.08.2010

மாதகல் மேற்கைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட

**அமரர் வேலுப்பிள்ளை பூபாலசிங்கம்**

(காங்கேசன்துறை சிமெந்து கூட்டுத்தாபன முன்னாள் உத்தியோகத்தர்)

**திதி: அபரபக்க சதுர்த்தசி (08.07.2021)**

உங்கள் இருவரையும் தேடி ஊர் உலகம் தேடி
நாயாய் அலைகின்றோம் எப்போ கிடைப்பீர்கள்?
யாரைக் கேட்கிறது எங்கே ஆறுவோம்?

அம்மாவின் பிரிவுத்துயர் தாழாமல்
அவரோடு நீங்களும் சென்றது ஏன் தொடர்ந்து?
உங்கள் திருமண தினத்தன்று
அக்கினியில் நீங்கள் செய்துகொண்ட
சத்தியம் தான் காரணமோ?

வேதனைகள் வேர் வரை சென்றாலும்
விழுதுகளாய் எம்மைத் தாங்கினீர்கள்!
உங்கள் இருவரின் குரல் கேட்காமல்
பரிதவிக்கும் எங்கள் குமுறல்கள்
உங்கள் காதுகளில் கேட்கிறதா?

ஊர் விட்டு வந்து நம் சொந்த ஊருக்கு
திரும்ப முடியாமல் தவித்த தவிப்பும்
இப்போ ஊருக்கு போக நிலை வந்தும்
போவதற்கு நீங்கள் இல்லையே அப்பா....

உயரங்கள் நாம் காண எம்
வாழ்க்கைப் பயணத்தில் துணையாய் இருந்த
ஈரிரண்டு கண்களையும் கண்கெட்ட
எமனுக்கோ பொறுக்கவில்லை

நாள்கள் வாரமாகி வாரங்கள் மாதமாகி
மாதங்கள் ஆண்டாகி போனாலும்
ஆறவில்லை எங்கள் துயர்

உங்கள் வார்த்தைகள் எம்மை வாழவைக்கும்
உங்கள் நினைவுகள் எம்மை வாழ்த்திடும்

**திருமதி பாக்கியம் பூபாலசிங்கம்**

**திதி: பூர்பக்க அட்டமி (15.08.2021)**

அம்மா நீ சென்ற கணமும்
அம்மா நீ சொன்ன வார்த்தைகளும்
அம்மா நீ செய்த உன்னதங்களும்
அம்மா நீ தந்த நெறிகளும்
எம் நெஞ்சினில் என்றும் அழியாதம்மா
எழுகின்ற கேள்விகளுக்கெல்லாம்

நாளும் விடை தேடுகின்றோம் அம்மா!
எங்கள் வலிகளைத் தாங்க
யாருமே இல்லையம்மா
அப்பா அம்மா இல்லாத
அநாதைகளானோம் அம்மா
அந்த இறைவனே கண்ணீரைப் பரிசாகத் தந்து
மௌனம் காணுகின்றார் அம்மா

அன்பு அம்மாவே!
கொடிய நோய் வடிவில் காலன்
கொன்றுவிட்டானே உங்களை
அன்று மாலைவரை நீங்கள் புரிந்த அன்பு மழை
இன்னும் எம் கண்முன்னே வந்து செல்லுதம்மா.....

நாடு கடந்து வந்து நாம் உங்களைக் கண்டு
நாளும் பொழுதும் மகிழ்ந்து இருந்த கணங்களும்
மருமகளையும், பேரப்பிள்ளைகளையும்
நீ கொஞ்சிக் குலாவிய தருணங்களும்
என்றும் உங்களை நினைவூட்டுகின்றது அம்மா......

நீங்கள் எனக்காக கட்டிய வீடு
இன்று பாலைவனமாய் கிடக்கின்றது
நீங்கள் இன்று இருந்திருந்தால்
நீங்களாவது அந்த வீட்டில் இருந்திருப்பீர்களோ அம்மா.......
உயிரைத் தந்து உடலில் சுமந்து
உலகில் வாழ உருவம் தந்த
தெய்வம் நீயம்மா!

**உங்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.**

**ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!**

என்றும் உங்கள் நினைவுகளுடன்
குடும்பத்தினர்
மகன் - 077 774 3185

**மாதகல் மேற்கு,
மாதகல்.**

## மரண அறிவித்தல்

மலர்வு 17 . 07 . 1943     உதிர்வு 14 . 08 . 2021



### திரு. கந்தையா மகேந்திரன்

யாழ்ப்பாணம் துரை வீதி, இணுவில் தெற்கு, இணுவிலைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா மகேந்திரன் அவர்கள் நேற்று (14.08.2021) சனிக்கிழமை சிவபதமெய்தினார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா-செல்லம்மா தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான சீனிவாசகம் - தெய்வானைப்பிள்ளை தம்பதியரின் பாசமிகு மருமகனும், கமலநாயகி அவர்களின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற கந்தசாமி மற்றும் யோகம்மா, ஆனந்தகௌரி ஆகியோரின் அன்புச் சகோதரனும், கஜேந்தினி, (ஆசிரியை- வசாவிளான் மத்திய மகா வித்தியாலயம்), ஜெயகாந்தன் (அபிவிருத்தி உத்தியோகத்தர், பிரதேச செயலகம், வேலணை), Dr.ஜெயந்தினி (யாழ். போதனா வைத்தியசாலை) ஆகியோரின் பாசமிகு தந்தையும், கமலதாசன் (ஆசிரியர் - யா/ கோப்பாய் சரவணபவானந்த வித்தியாலயம்), பிரவீனா (ஆசிரியர் - யா/ உடுவில் முருகமூர்த்தி வித்தியாசாலை), பேராசிரியர் வேலாயுதமூர்த்தி (இரசாயனவியல் துறை, யாழ் பல்கலைக்கழகம்) ஆகியோரின் அன்பு மாமனாரும், அபிஷாலினி, ஆர்த்திகன், நாராயணி, பானுஜன், கேசிகா, சிவகாமி, உமையாள் ஆகியோரின் பாசமிகு பேரனும், பத்மாவதி, குமாரசாமி, இரத்தினசிங்கம், காலஞ்சென்றவர்களான அன்னம்மா, குமாரகுலசிங்கம், சுகிர்தாம்பிகை மற்றும் சந்திரவதனி, சகுந்தலாதேவி, சோதிநாதன், ரவீந்திரன் ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**துரை வீதி, தாவடி வடக்கு,
கொக்குவில்.**

**தகவல்: குடும்பத்தினர்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விளம்பரம்: advt@uthayan.com

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 15.08.2021 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

# சஞ்சீவி

Registered as a Newspaper

பக்கங்கள்: 16

மலை 33: வள்ளுவர் ஆண்டு : 2052 ஆடி 30 ஞாயிற்றுக்கிழமை (15.08.2021) சிகரம் : 60


நல்லூருக்குப் போகவெனப் பெண்டுகள்
நாலுசீலை வாங்கினவையாம் தண்டுகள்
உள்ளூர் முருகனாரின்விழா
உலாத்தல் ஒருக்காலும்பார்க்கார்
உல்லாசமோ அவர்தம் வேண்டுதல்!

-காரைக்கவி



# வைரஸ்+ விலையேற்றம்+ ஜெனிவா!



○ நிலாந்தன்

புராணங்களில் வரும் அசுரர்கள் தோற்கடிக்கப்படுகையில் தங்கள் தோற்றங்களை மாற்றிக்கொள்வது போல அதாவது சூரன் சேவலும் மயிலுமாக மாறியது போல, வைரசும் மனித குலத்தின் தடுப்பு நடவடிக்கைகளுக்கு எதிராக திரிபடைந்து கொண்டே போகிறது" என்று எனது நண்பர் ஒருவர் கூறுவார்.

இலங்கை மக்கள் மத்தியில் டெல்டா என்ற பெயரில் ஒரு ரொபி இருக்கிறது. இப்பொழுது அதே பெயரில் ஒரு வைரஸ் வந்திருக்கிறது. ஆனால் டெல்டா, பீட்டா என்பவற்றுக்கு மேலதிகமாக புதுவித திரிபுபெற்ற வைரசினால் அண்மையில் கொலம்பியாவில் 8 பேர் உயிரிழந்துள்ளனர். பாகிஸ்தான் லாகூரில் கொரோனா நோயாளர்களின் இரத்த மாதிரிகளை பரிசோதித்தபோது "எப்சிலன்" என்ற புதிய வைரஸ் திரிபு கண்டறியப்பட்டுள்ளது. ஏனைய வைரசுகளைப் போன்று தடுப்பூசிகளால் "எப்சிலன்" திரிபை கட்டுப்படுத்த முடியாது என்று நிபுணர்கள் சுட்டிகாட்டுகின்றனர்.

கடந்த 10 ஆம் திகதி இலங்கைக்கான உலக சுகாதார ஸ்தாபனத்தால் ஏற்பாடு செய்யப்பட்ட ஐந்தாவது சுயாதீன நிபுணர் குழுவின் கூட்டம் அதன் அவதானிப்பில் பின்வருமாறு தெரிவித்துள்ளது "வரும் செப்ரெம்பர் நடுப்பகுதியளவில் வைரஸ் தொற்றுக்கு உள்ளாவோரின் எண்ணிக்கை நாளொன்றுக்கு ஆறாயிரத்தை எட்டிவிடும். ஒக்ரோபர் தொடக்கமளவில் இறப்புகளின் எண்ணிக்கை நாளொன்றுக்கு 220ஐ எட்டிவிடும்".

இலங்கைத் தீவில் வைரஸ் தாக்கத்தால் இதுவரையிலும் இறந்தோரின் மொத்தத் தொகை இந்தக்கட்டுரை எழுதப்படும் நாளில் 5600 ஐத் தாண்டிவிட்டது. முதலாவது அலையில் 13 பேரும், இரண்டாவது அலையில் 596 பேரும் மூன்றாவது அலையில் 5600 க்கும் அதிகமானவர்களும் இறந்துள்ளனர். மூன்றாவது அலையில் இறப்பு விகிதம் நான்கு மடங்காக அதிகரித்துள்ளதாக தொற்று நோயியல் பிரிவின் புள்ளிவிவரங்கள் தெரிவிக்கின்றன. இவை உத்தியோகபூர்வ தகவல்கள். மெய்யான தொகை, இதைவிட அதிகமாக இருக்கக்கூடும் என்ற சந்தேகமும் உண்டு.

"சம்பந்தப்பட்ட தரப்புக்கள் விரைந்து நடவடிக்கை எடுக்காவிட்டால் இந்த மூன்றாவது தொற்றலை இந்த ஆண்டின் இறுதிக்குள் இருபதாயிரம் உயிர்களை எடுத்துவிடும்" என்று சுகாதார கொள்கைகளுக்கான நிறுவனத்தின் பணிப்பாளர் மருத்துவர் ரவீந்திர ராணன் எலிய கூறியிருக்கிறார். ஒவ்வொரு மாதமும் கிட்டத்தட்ட 3000 பேர் இறந்து கொண்டிருக்கிறார்கள். இது ஜே.வி.பியின் இரண்டாவது கிளர்ச்சி காலகட்டத்தில் மாதாந்தம் கொல்லப்பட்டவர்களின் தொகையைவிட அதிகமானது என்றும் அவர் குறிப்பிடுகிறார்.

நாட்டில் கொவிட் பரவல் கட்டுப்படுத்த முடியாத நிலைமைக்குச் சென்றுள்ளதாக பொதுச் சுகாதார பரிசோதகர்கள் சங்கம் தெரிவித்துள்ளது. இந்த நிலைமை தொடருமாக இருந்தால் மருத்துவமனைகளில் மட்டுமன்றி தகனசாலைகளிலும் பெரும் நெருக்கடி நிலைமையைச் சந்திக்க நேரிடும் என்று அந்தச் சங்கத்தின் தலைவர் உபுல் ரோஹண தெரிவித்துள்ளார். அதேசமயம் கோத்தாபய அரசாங்கத்தை உருவாக்குவதற்காக பாடுபட்டவர்களில் ஒருவரும் இப்பொழுது அரசாங்கத்தை கடுமையாக விமர்சிப்பவ ருமாகிய ஆனந்த முருத்தெட்டுவ தேரர் கூறுகிறார் "இந்த நிலைமை நீடித்தால் பேக்கரிகளில் உபயோகிக்கப்படும் பாண் போறணைகளில் பிணங்களை தகனம் செய்யவேண்டி வரலாம்" என்று.




தடுப்பூசி ஏற்றும் நடவடிக்கைகள் மூலம் தொற்றுப் பரவும் வேகத்தை போதுமான அளவுக்கு தடுக்கக் கூடியதாக இருக்காது என்று மருத்துவர் ரணன் எலிய சுட்டிக்காட்டுகிறார். இந்த நிலைமை கிட்டத்தட்ட இஸ்ரேலிலும் காணப்பட்டது. உலகில் அதிக விகிதம் பைசர் தடுப்பூசி ஏற்றப்பட்ட நாடுகளில் அதுவும் ஒன்று. ஆனால் மறுபடியும் இப்பொழுது அங்கு இறப்பு விகிதம் அதிகரிக்கிறது. இலங்கைத் தீவில் ஓகஸ்ட் நான்காம் திகதியிலிருந்து இறப்பு வீதம் நாள் ஒன்றுக்கு 90 க்கும் அதிகமாக காணப்படுகிறது. இது மேலும் சிறிது காலத்துக்கு தொடரலாம் என்றுமவர் கூறுகிறார்.

உலகில் இதுவரையிலும் டெல்டா திரிபை பெருமளவுக்கு முறியடித்த நாடாக சீனாவைதான் கூறமுடியும். குவாங்டோங் மகாணத்தில் ஆறே வாரங்களில் அவர்கள் நோய் முறியடிப்பு நடவடிக்கைகளில் குறிப்பிடத்தக்க அளவு வெற்றிபெற்றதாகவும் ராணன் எலிய கூறுகிறார். மேற்படி மாகாணத்தில் பெருமெடுப்பிலான பி.சி.ஆர் சோதனைகளின் மூலமும் தனிமைப்படுத்தல்களின் மூலமுமே டெல்டா திரிபு கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்பட்டது என்றும் இந்தக்கால கட்டத்தில் தடுப்பு ஊசி ஏற்றும் நடவடிக்கைகள் இடைநிறுத்தப்பட்டன என்றும் அவர் கூறுகிறார். எனவே சீனாவின் குவாங்டோங் மாகாணத்தில் பெற்ற வெற்றி என்பது தடுப்பூசி மூலம் பெறப்பட்ட வெற்றி அல்ல என்றும் அவர் சுட்டிக்காட்டுகிறார்.

ஆனால் இலங்கை அரசாங்கம் பி.சி.ஆர் பரிசோதனைகளை ஒப்பீட்டளவில் குறைத்திருப்பதோடு தடுப்பு ஊசி ஏற்றும் நடவடிக்கையை ஏறக்குறைய ஒரு படை நடவடிக்கை போல முன்னெடுத்து வருகிறது. உலகப் பொது புள்ளி விபரங்களின்படி வைரஸ் தொற்றினால் இறப்பவர்களின் எண்ணிக்கை ஐந்து விகிதம் என்றும் தடுப்பூசி போடுவதன் மூலம் இறப்பு விகிதத்தை 1.5 தொடக்கம் 1.3 வரையிலும் குறைக்க முடிந்திருக்கிறது என்று மருத்துவர்கள் சுட்டிக்காட்டுகிறார்கள். இது விடயத்தில் மருத்துவத் துறையினருக்கும் படைத்தரப்புக்கும் இடையில் பொருத்தமான ஒருங்கிணைப்பு இல்லை என்பதும் அவதானிக்கப்பட்டுள்ளது.

தடுப்பூசி ஏற்றுவதற்காக மக்கள் மிக நீண்டவரிசையில் காத்து நிற்கிறார்கள். இவ்வாறு நீண்ட நேரம் நீண்ட வரிசைகளில் காத்திருக்கச் செய்யும் நடவடிக்கையானது தொற்று வீதத்தை அதிகரிக்கும் என்றும் சுட்டிக்காட்டப்படுகிறது.

கடந்தவாரம் யாழ்ப்பாணத்தில் இரண்டாவது கட்டத் தடுப்பூசி ஏற்றப்பட்ட பொழுது நல்லூர், திருநெல்வேலி போன்ற இடங்களில் பொருத்தமான முகாமைத்துவம் இருக்கவில்லை என்

10

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புதுமையும் எழிலும் பொலியும் பல்சுவை வார இதழ்





# தென் சீனக் கடல் விவகாரமும் வடக்கு, கிழக்கும்!

## ஐ.நா செயலாளரின் உயர்மட்ட ஆலோசனைக் கூட்டத்தில் இந்தியா

அ.நிக்ஸன்

ஐக்கிய நாடுகள் சபையின் பாதுகாப்புச் சபையில் இந்தியாவுக்கு நிரந்தர உறுப்புரிமை இல்லை. ஆனாலும் இந்த மாதத்துக்கான தலைமைப் பொறுப்பை ஏற்றுள்ளது இந்தியா. இதன் பின்னர் இந்தியப் பிரதமர் மோடி. பாதுகாப்புச் சபையில் இடம்பெற்ற விவாதத்தில் கடல்சார் பாதுகாப்பு மற்றும் வர்த்தகத்துக்கு எதிராக உள்ள தடைகளை நீக்க வேண்டுமென அழைப்பு விடுத்துள்ளார். அனைத்துப்பிரச்சினைகளுக்கும் அமைதியான ம்றையில் தீர்வு காண வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தியிருக்கிறார். அமெரிக்கா ஆதரவுடன் பாதுகாப்புச் சபையில் தற்காலிக உறுப்புரிமை பெற்று இந்த மாதத்துக்குமான தலைமைப் பொறுப்பையும் வகிக்கும் நிலையில், மோடியின் உரையை ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடின் பாராட்டியுள்ளார். ஆனால் கடல்சார் பாதுகாப்பு மற்றும் வர்த்தகச் செயற்பாடு உள்ளிட்ட தற்போதைய பூகோள அரசியல் நகர்வுகளில் ரஷ்யாவுடன் அமெரிக்கா முரண்படுகின்றது.

அமெரிக்க ரஷ்ய அரசியல் பகைமை என்பதற்கு நீண்டகால வரலாறு உண்டு. ஆனாலும் சமீபகாலமாக இரு நாடுகளுக்கிடையேயுமுள்ள பகைமை என்பது, ரஷ்ய - சீன உறவின் அடிப்படையில் எழுந்ததெனலாம். அத்துடன் இந்தோ - பசுபிக் பிராந்திய விவகாரத்திலும் சீனாவுக்குச் சாதகமான இராணுவச் செயற்பாடுகளுக்கும் ரஷ்யா ஒத்துழைப்பு வழங்குகின்றது. இதன் பின்னணியிலேயே அமெரிக்க - ரஷ்ய பகைமை வளர்ந்து வருகின்றது. இந்தப் பகைமைக்குள் இந்தியா இருதலைக் கொள்ளி எறும்பாக இயங்குகின்றது.

இதன் காரணத்தினாலேயே மோடியின் உரைக்கு புடின் நன்றி தெரிவித்திருக்கிறார் போலும். ஆனால் புடினின் பாராட்டுத் தொடர்பாக அமெரிக்கா அலட்டிக்கொள்ளவில்லை . இருந்தாலும் இந்திய- ரஷ்ய உறவின் பாரம்பரியம் நீடிக்கக் கூடாதென்பதில் அமெரிக்கா கவனமாகவே இருக்கின்றது என்பதை 2015 ஆம் ஆண்டின் பின்னரான அமெரிக்க -இந்திய பாதுகாப்பு ஒப்பந்தங்கள் எடுத்தியம்புகின்றன.

இதன் காரணத்தினாலோ என்னவோ பாதுகாப்புச் சபையில் நரேந்திரமோடி நிகழ்த்திய உரையில் அமெரிக்க - இந்திய உறவுமுறை இயல்பாகவே வெளிப்பட்டது. ஆனாலும் அமெரிக்கா தவிர்ந்த ஏனைய வல்லாதிக்க நாடுகளையும் இணைத்துச் செயற்படுவதற்கான முறையில் கடல்சார் பாதுகாப்பு விவகாரத்தைக் கையாள ஐந்து அம்சத் திட்டமொன்றை முன்மொழிந்திருக்கிறார் மோடி. முதலாவதாக, சட்டப்படியான கடல்சார் வர்த்தகத்துக்கு உள்ள தடைகளை நீக்க வேண்டும். இதன் ஊடாக சர்வதேச பொருளாதார வளர்ச்சி ஏற்படும்.

இரண்டாவது, தற்போது உள்ள கடல்சார் உரிமை குறித்த பிரச்சினைகளுக்குச் சுமுகமான முறையில் சர்வதேச சட்டங்களுக்கு உட்பட்டு தீர்வு காண வேண்டும். பரஸ்பரம் நம்பிக்கை மற்றும் ஒத்துழைப்பை இது ஏற்படுத்தும்.

மூன்றாவதாக, இயற்கைச் சீற்றம் மற்றும் கடல் பிராந்தியத்துக்கு உள்ள ஆபத்துகளுக்கு எதிராக அனைத்து நாடுகளும் இணைந்து செயற்பட வேண்டும்.

நான்காவது, கடல்கள் மாசுபடுவதை தடுப்பதில் அனைத்து நாடுகளும் பொறுப்புடன் செயற்பட வேண்டும்.

ஐந்தாவது, கடல்சார் ஆதாரங்களைப் பயன்படுத்துவதில் அனைத்து நாடுகளுக்கும் உரிமையுண்டு. சில நாடுகளில் மாத்திரம் அதிகளவில் மீன் பிடிக்கும் நடைமுறை தவிர்க்கப்பட வேண்டும்.

இவ்வாறு முன்வைக்கப்பட்ட ஐந்து அம்சத் திட்டத்தை பாதுகாப்புச் சபையின் இணையவழி மாநாட்டில் பங்குபற்றிய நாடுகள் பாராட்டியிருந்தாலும், மீன்பிடிக்கும் நடைமுறை தளர்த்தப்பட வேண்டுமென்ற மோடியின் பரிந்துரை அமெரிக்காவுக்குக் கொஞ்சம் மனக்கஷ்டமாகவே இருந்ததாகச் சில இந்திய இணையச் செய்தி ஊடகங்கள் விமர்சித்திருந்தன.

கடல்சார் பாதுகாப்பில் உள்ள நவீன சவால்கள் மற்றும் அச்சுறுத்தல்கள் குறித்த நரேந்திரமோடியின் கருத்துக்கு நன்றி கூறுவதாகக் கூறிய ரஷ்ய ஜனாதிபதி புடின், கடல் சார் குற்றங்களை அதன் அனைத்து வடிவங்களிலும் எதிர்கொள்ளும் பணியை மேற்கொள்ள ரஷ்யா உறுதிபூண்டுள்ளதாகக் கூறியிருக்கிறார். சமமான சர்வதேச ஒத்துழைப்பின் வளர்ச்சியை மேலும் ஊக்குவிக்க ரஷ்யா தயாராக இருப்பதாகவும் புடின் உறுதிப்படுத்தியிருக்கிறார். ஆகவே அமெரிக்க ஆதரவுடன் பாதுகாப்புச் சபைக்குத் தலைமை வகித்துக் கடல்சார் பாதுகாப்பு விவகாரம் பற்றிய விவாதத்தை நடத்திய மோடி ரஷ்யாவுடனும் உறவைப் பேணும் வகையில் காய் நகர்த்தியிருக்கிறார். ஐ.நா பாதுகாப்புச் சபையில் அமெரிக்கா, ரஷ்யா, பிரித்தானியா, பிரான்ஸ், சீனா ஆகிய ஐந்து நிலையான உறுப்பு நாடுகளும் மற்ற 10 உறுப்பு நாடுகளும் அங்கம்



வகிக்கின்றன. இந்தவொரு நிலையில், பாதுகாப்புச் சபையில் கடந்த ஆண்டு ஜூன் மாதம் தற்காலிக உறுப்பினராக இந்தியா போட்டியின்றி தேர்வு செய்யப்பட்டது. 193 உறுப்பு நாடுகளைக் கொண்ட ஐ.நா. பொதுச் சபையில் 184 வாக்குகளைப் பெற்று பாதுகாப்புச் சபையில் உறுப்பு நாடாக இருப்பதற்கான ஆதரவும் இந்தியாவுக்கு உண்டு.

ஆகவே தென் சீனக் கடல் பிரதேசத்தில் சீனாவின் ஆதிக்கத்தைத் தடுப்பதற்கான போட்டியில் கூடுதலாக ஈடுபட்டாலும் இந்தோ-பசுபிக் பிராந்திய விவகாரத்தில் சீனாவின் ஆதிக்கத்தைக் கட்டுப்படுத்த இந்தியாவை முன்னிலைப்படுத்தலாம் என்ற நம்பிக்கை அமெரிக்காவுக்கு உண்டு. இதன் பின்னணியிலேயே ஐ.நா.பாதுகாப்புச் சபையில் இந்தியாவுக்குக் கொடுக்கப்பட்ட முக்கியத்துவத்தை நோக்க வேண்டும்.

தென் சீனக் கடல் போக்குவரத்து விவகாரத்தில் சீனா ஆதிக்கம் செலுத்த முடியாதென 2016 ஆம் ஆண்டு சர்வதேச நீதிமன்றம் தீர்ப்பு வழங்கியிருந்தது. ஆனால் சீனா அந்தத் தீர்ப்பை ஏற்கவில்லை. அந்தக் கடல் பகுதி தமக்குரியது என்பதே சீனாவின் நிலைப்பாடு. இந்தச் சர்ச்சை குறித்தும் தொடர்ச்சியாக இடம்பெறவுள்ள பாதுகாப்புச் சபைக் கூட்டத்தில் விவாதிக்கப்படவுள்ளது. இந்த இடத்திலேதான், அமெரிக்கா-இந்திய உறவு மேலும் வலுப்பெறுவதோடு, இந்தோ-பசுபிக் பிராந்தியத்தில் உருவாக்கப்பட்ட குவாட் அமைப்பின் செயற்பாடுகளை மேலும் துரிதப்படுத்தும் திட்டங்களும் வகுக்கப்படலாம்.

இதன் பின்னணியிலேயே அமெரிக்காவுக்கான சீனாவின் புதிய தூதுவராக கின் கேங் (Qin Gang) இந்த வாரம் பதவியேற்கவுள்ளார். 55 வயதான இவர் சீனாவின் மூத்த இராஜதந்திரியாகவும் சீன கம்யூனிஸ் கட்சியின் அனுபவம் மிக்க உறுப்பினராகவும் உள்ளார். இவரை மிகத் தந்திரோபாயமான நரி என்று அமெரிக்கச் சார்புடைய பொறின்பொலிஸி என்ற இணையத்தளம் வர்ணித்திருக்கிறது. அதாவது சீனாவுக்கான அமெரிக்கத் தூதுவராக கின் கேங் நியமிக்கப்பட்டிருப்பது, தென் சீனக் கடல் மற்றும் இந்தோ பசுபிக் பாதுகாப்பு விவகாரங்களைக் கையாளக்கூடியவர் என்ற நம்பிக்கை சீனாவுக்கு இருப்பதாகவே அந்த இணையத்தளத்தின் விமர்சனத் தொனி வெளிப்படுகின்றது.

ஐ.நா.பாதுகாப்புச் சபைக் கூட்டம் இந்தியாவின் தலைமையில் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றமை தொடர்பாகப் பகிரங்கமாகக் கருத்துக்கூற விரும்பாத சீனாவின் முக்கிய ஊடகங்கள், கின் கேங்கின் நியமனம் அமெரிக்க - சீன உறவில் விரிசலைத் தடுக்கும் என்று நாசூக்காக விமர்சிக்கின்றன. அதாவது இந்தியாவுடனான உறவு உள்ளிட்ட அமெரிக்காவின் எதிர்காலச் செயற்பாடுகளில் மாற்றங்கள் உருவாகலாம் என்ற தொனி சர்வதேச அரசியல் அரங்கில் பல ஊகங்களைக் கிளப்பியுமுள்ளன.

ஆனால் கின் கேங் , அமெரிக்க விவகாரங்களைக் கையாள்வதில் தேர்ச்சி பெற்றவரல்லர் என்று 'தடிப்ளொமெற்' என்ற செய்தித்தளம் கூறுகின்றது. இவருடைய செயற்பாடுகள் அமெரிக்க-இந்திய உறவை மேலும் நெருக்கமாக்குமே தவிர வல்லாதிக்க நெருக்கடிகளைத் தீர்ப்பதாக அமையாதென்ற தொனியிலும் அந்தச் செய்தித்தளம் கூறுகின்றது. அதேவேளை, இவர் இலங்கை இராஜதந்திரிகளோடு நன்கு நெருக்கமானவர் என்றும் இலங்கையில் சீன முதலீடுகள் மற்றும் சீன அபிவிருத்தித் திட்டங்கள் குறித்தும் நன்கு விளக்கமுள்ளவர் எனவும் இலங்கை இராஜதந்திரியொருவர் கூறுகிறார். ஆயினும் பாதுகாப்புச் சபைக் கூட்டம் முடிவடைந்த பின்னரான சூழலில் அமெரிக்க-சீன பகைமை மேலும் அதிகரிக்கக்கூடிய சந்தர்ப்பங்களும் அமெரிக்க - இந்திய உறவு மேலும் புதுப்பிக்கப்படக்கூடிய ஏதுநிலைகளுமே தென்படுகின்றன. ஏனெனில் மலாக்கா நீரிணையூடாக தென் சீனக் கடல் வரை சென்றடையும் பாதை மீது ஆதிக்கத்தை வளர்த்தெடுக்கச் சீனா நீண்டகாலமாவே முற்படுகின்றது. இதனாலேயே அமெரிக்காவினால் இந்தியா தலைமையில் இந்தோ- பசுபிக் பிராந்திய பாதுகாப்பு அடிப்படையில் 'குவாட்'எனப்படும் இராணுவ அணி உருவாக்கப்பட்டது. இந்த அணி டொனால்ட் ட்ரம்பின் ஆட்சிக்காலத்தில் புதுப்பிக்கப்பட்டது. இங்கேதான் இலங்கையின் முக்கியத்துவமும் அதனைச் சாதகமாகப் பயன்படுத்திச் சிங்கள ஆட்சியாளர்கள், ஈழத்தமிழர்களின் அரசியல் விடுதலை குறித்த பேச்சுக்களையும் நீக்கம் செய்யும் முயற்சியில் ஈடுபட்டனர். இந்த ஈடுபாடு 2009 ஆம் ஆண்டு மே மாதத்துக்குப் பின்னரான சூழலில் மிகவும் இலகுவாகவே முன்னெடுக்கப்பட்டது.

தென் சீனக் கடல் மற்றும் இந்தோ-பசுபிக் விகாரத்தை மையமாகக் கொண்டு 2007 ஆம் ஆண்டு அமெரிக்கா, இந்தியா, ஜப்பான், அவுஸ்திரேலியா ஆகிய நாடுகள் கூட்டாகச் செயற்பட ஆரம்பித்திருந்தன. ஈராக் ,குவைத் ஆகிய நாடுகளின் கரையோரத்தில் இருந்து பாரசீக வளை குடாவினூடாகவும் அதனுடைய குறு நீரிணையான கோமூர்ஸ் நீரிணையூடாகவும் அரபிக் கடல், ஈழத்தமிழர்களின் மன்னார் வளைகுடா மற்றும் கிழக்கு மாகாண கடற் பகுதி வழியாகவும் இந்தியாவின் அந்தமான் நிக்கோபார் தீவுகளைத் தழுவி மலாக்கா நீரிணையூடாகத் தென் சீனக் கடலை சென்றடையும் பாதை மீது சீனா அதிக அக்கறை கொண்டிருப்பதாக மூத்த ஊடகவியலாளரும் அரசியல் ஆய்வாளருமான அமரர் சிவராம் 2003 ஆம் ஆண்டு வீரகேசரியில் எழுதிய கட்டுரையில் கூறியிருக்கிறார். ஆகவே 2007 ஆம் ஆண்டு மலாபார் பயிற்சியைக் கூட்டாக அமெரிக்கா, இந்தியா, ஜப்பான், அவுஸ்திரேலியா ஆகிய நாடுகள் ஏன் ஆரம்பித்தன என்பது பற்றியும் 2009 ஆம் ஆண்டு மே மாதம் ஈழப்போராட்டம் இல்லாதொழிக்கப்பட்ட பின்னணி குறித்தும் இலகுவாக அறிந்துகொள்ள முடியும். 2009 இன் பின்னரான சூழலில் சூடுபிடித்த இந்தோ-பசுபிக் விவகாரம் மற்றும் தென்- சீனக் கடலில் சீனா ஆதிக்கமும் அதற்கான அமெரிக்கா, பிரித்தானிய நாடுகளின் எதிர்ப்புச் செயற்பாடுகளுக்கான காரணிகளையும் நேரடியாகப் புரிந்துகொள்ள முடிகிறது.

எனவே ஐ.நா.பாதுகாப்புச் சபையில் இந்தியா தலைமையில் மாத இறுதிவரை நடைபெறுகின்ற கடல்சார்ந்த விவாதம் உலகில் அரசு என்ற கட்டமைப்பு இல்லாத தேசிய இனங்களின் அரசியல் விடுதலைக்கான நியாயங்களை இல்லாமல் செய்துவிடுமோ என்ற ஐயத்தையும் எழுப்புகின்றது. ஏனெனில் எதிர்வரும் 19 ஆம் திகதி தீவிரவாத அமைப்புகள் குறித்து ஐ.நா பொதுச் செயலாளரின் உயர்மட்ட ஆலோசனைக் கூட்டத்தில் எடுக்கப்படவுள்ள முடிவுகள், விடுதலை கோரி நிற்கின்ற தேசிய இனங்களின் அரசியல் அங்கீகாரத்தை நியாயப்படுத்துமா அல்லது வெறுமனே பயங்கரவாத இயக்கங்கள் என்ற கோசத்தோடு அவர்களின் நியாயங்களும் அமுக்கப்பட்டு விடுமா என்ற சந்தேகங்கள் நிலவுகின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கசப்பின் காலம் மீளாதிருக்கட்டும்!

○ ந.பரமேஸ்வரன்

இலங்கை இப்போது மிக மோசமான ஒரு பொருளாதார நெருக்கடிக்குள் சிக்கியுள்ளது. திறமையற்ற வினைத்திறனற்ற போலி பௌத்த ஊழல் அரசியல்வாதிகளால் இனங்களுக்கிடையில் நல்லுறவை ஏற்படுத்த முடியவில்லை. மக்கள் சக்தியின் பலத்தை அரசியல்வாதிகளுக்கு எடுத்துக்காட்டுவதற்கு ஒரு புதிய ஆட்சிமுறை தேவை.

கலாநிதி நீலன்திருச்செல்வம் முன்மொழிந்த பிராந்தியங்களின் ஒன்றியத்தில் இது வலியுறுத்தப்பட்டுள்ளது. இதை தயாரித்ததற்காகவே நீலன் திருச் செல்வம் புலிகளால் கொல்லப்பட்டார்; கொலை செய்தவர்களும் இப்போது இல்லை. கடந்தகால இருண்ட யுகத்திலிருந்து ஒரு நல்லாட்சி முறையை அறிமுகம் செய்வதற்கான ஒரு சூழல் உருவாகியுள்ளது. தற்போதைய ஆட்சிமுறையால் மக்கள் மிகவும் களைப்பும் துன்பமும் அடைந்துள்ளனர். தற்போதைய ஆட்சிமுறை மாற்றியமைக்கப்பட வேண்டும். வாசகர்கள் ஒன்றைப் புரிந்துகொள்ள வேண்டும் .

சிங்கள தமிழ் சமூகங்களுக்கிடையிலான பிளவு இரு சமூகங்களையும் சார்ந்த அரசியல்வாதிகளால் உருவாக்கப்பட்டதேயன்றி சிங்கள தமிழ் மக்கமக்களால் உருவாக்கப்பட்டதல்ல. பிரித்தானியர் வெளியேறிய பின்னர் பதவிக்கு வந்த ஆட்சியாளர்களால் நாட்டை கொண்டு நடத்த முடியவில்லை. இவர்கள் உருவாக்கிய இனப்பிரச்சினை 1983 இல் எரிமலையாக வெடித்தது; அது வரலாறு என்று சொல்கிறார்கள். கட்டுரையாளரின் அறிவுக்கெட்டிய வரையில் இந்த நாடு அரசர்களினதும் அரசிகளினதும் ஆட்சிக்குட்பட்டிருந்த காலத்தில் சிங்கள தமிழ் சமூகங்களுக்கிடையில் பாரதூரமான பிளவுகள் எதுவும் ஏற்படவில்லை.

காலத்துக்குக் காலம் இந்தியாவிலிருந்து வந்த படையெடுப்புகளில் இருந்து அரசர்கள் நாட்டை பாதுகாத்துள்ளனர். இலங்கையில் வாழும் அனைத்து இனமக்களும் காலத்துக்குக்காலம் இந்தியாவிலிருந்து வந்து குடியேறியவர்களே, ஆதிவாசிகள் அல்லது வேடர்கள் உட்பட. இந்த நாட்டில் வசிப்பவர்கள் அனைவரும் இது தமது தாய்நாடு என்றே எண்ணுகின்றனர். ஆனால் அண்மைக்காலத்தில் தமிழர்களுக்கு இந்த நாடு சொந்தமா என்ற எண்ணம் உருவாகியுள்ளது. அவர்களுக்கெதிராக வன்முறை பிரயோகிக்கப்படுகிறது. 1983 இல் அரசாங்கத்தின் உதவியுடன் குண்டர்கள் மேற்கொண்ட வன்முறைகள் மூலம் தமிழர்கள் பெரும்பான்மையாக வாழும் பிரதேசங்களைத் தவிர ஏனைய இடங்கள் தமிழர்களுக்கு பாதுகாப்பற்றவை என்ற நிலைப்பாடு தோன்றியுள்ளது. இதன் மூலம் தமிழர்களுக்கு எதிராக மனிதாபிமானமற்ற செயற்பாடுகளை மீண்டும் அரசாங்கங்கள் விரும்பினால் எப்போதும் மேற்கொள்ளலாம் என்ற நிலை காணப்படுகிறது.

இனப்பிரச்சனைக்கு தீர்வு காணப்படுவதாக இருந்தால் தமிழர்கள் தாங்கள் வாழும் இடங்களிலோ வேலைத்தளங்களிலோ பாதுகாப்பாக இருக்கக்கூடிய சூழல் உருவாக வேண்டும் .இதுவே அனைத்து இலங்கையர்களினதும் அவா.

தமிழர்களின் இனப்பிரச்சினைக்கான தீர்வு தொடர்பான உரையாடல்களின் போது மலையகத் தமிழர்களின் பிரச்சனைகள் பற்றியும் கலந்துரையாடப்படவேண்டும்; அனைவரும் இலங்கைத் தமிழர்களே. இலங்கைத் தமிழர்கள் நாடற்றவர்களல்லர். அனைத்து தமிழர்களினதும் பிரச்சினைகளும் பொதுவானவை; அவர்களது பாதுகாப்பே முதன்மையான பிரச்சினை.



கலாநிதி நீலன்திருச்செல்வம்

கட்டுரையாளர் தமிழர்களுக்கு ஒன்றை கூறவிரும்புகிறார். இந்த நாடு அனைவருக்கும் பொதுவானது. ஐன்ஸ்டீன் கூறியது போல் ஒரு பிரச்சினைக்கு அதேவழியில் சென்று தீர்வுகாணமுடியாது.

பிரித்தானியர் காலத்திலிருந்தே சிங்கள தமிழ் அரசியல்வாதிகள் இனவாதத்தை வளர்த்துவந்துள்ளனர். இந்த இனவாத அரசியல் இன்றும் முன்னெடுக்கப்பட்டு வருகிறது மகா சங்கத்தினரின் ஒரு பிரிவினரும் இதற்கு எண்ணெய் ஊற்றி வருகின்றனர். மறுபுறத்தில் புலம்பெயர் தமிழர்களில் ஒரு சாராரும் இனவாதத்தை தூண்டி வருகின்றனர். இரு பகுதியினதும் இனவாதச் செயற்பாடுகள் காரணமாக ஆட்சிமுறைகள் தோல்வியடைந்துள்ளன. பிரித்தானியர் காலத்தில் சிங்கள தமிழ் அரசியல்வாதிகள் பிரித்தானியரிடமிருந்து நாட்டை மீட்பதிலேயே கவனம் செலுத்தினர்.

வடக்கு, கிழக்கு தமிழர்களின் சுயநிர்ணய உரிமை பற்றியும் வடக்கு கிழக்கு இணைப்பு பற்றியும் கூடுதலாக எழுதப்பட்டுள்ளதுடன் விவாதிக்கப்பட்டும் வருகிறது. மன்னராட்சிக் காலத்தில் ஒவ்வொரு இராச்சியமும் சுயநிர்ணய உரிமையுடன் இருந்தன.

பிரித்தானியர் காலத்தில் அவர்களுடன் இணைந்து செயற்பட்ட சிங்கள, தமிழ், முஸ்லிம் அரசியல்வாதிகள் அவர்களுடன் இணைந்து டொனமூர் அரசியல்யாப்பை ஏற்றுக்கொண்டனர். டொனமூர் அரசியல் யாப்பே சோல்பரியின் யாப்பிலும் புகுத்தப்பட்டது; இது 1972 வரை நீடித்தது.

பிரித்தானியரிடமிருந்து நாடு விடுதலைய டைந்த பின் சிங்கள பௌத்த அரசியல்வாதிகள் இனங்களுக்கிடையில் மேலும் பிளவுகளை உருவாக்கினர். சில அரசியல் தலைவர்கள் இந்தப் பிளவுகளை பிராந்திய சபைகளினூடாகத் தீர்க்க முயற்சித்தனர். பண்டா செல்வா ஒப்பந்தம், டட்லி செல்வா ஒப்பந்தம், நீலன் திருச்செல்வம் பரிந்துரைத்த பிராந்தியங்களின் ஒன்றியம், இந்தியாவினால் உருவாக்கப்பட்ட மாகாணசபை என்பன இந்த பிராந்திய சபைகள் பிரச்சினையை தீர்க்காமை யால் இந்தத் தீவினுள் பிரிந்து வாழ்வதே ஒரேவழி என்ற இலட்சியத்துடன் விடுதலைப்புலிகள் ஆயுதப்போராட்டத்தைக் கையிலெடுத்தனர். வடக்கு, கிழக்கு மக்களின் அபிலாஷைகள் ஒருபோதும் புரிந்து கொள்ளப்படவில்லை. ஏனென்றால் அதற்கு முக்கியத்துவம் கொடுக்கப்படவில்லை.

பல்வேறு தரப்பினராலும் பல்வேறு சமாதான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்ட போதிலும் எல்லாமே தோல்வியில் முடிவடைந்தது. இறுதியில் 2009ல் இராணுவம் புலிகளை இல்லாமல் செய்தது.

இந்த நிலையில் கடந்தகால அனுபவங்களை வைத்து பிரச்சினைக்கான அடிப்படைக் காரணத்தை கண்டறிந்து தீர்வுகாணப்பட வேண்டும். வருங்காலத்தில் தற்போது உள்ள கற்பனைக்கு அப்பாற்பட்ட தொழில்நுட்ப வளர்ச்சி காரணமாக ஆட்சிமுறைகளில் மாற்றம் ஏற்படலாம். தற்போது உள்ள ஆட்சிமுறைகளுக்கு டைனோசோரின் நிலை ஏற்படலாம் .சில இடங்களில் இது ஏற்கன்வே இடம்பெற்றுள்ளது. இலங்கையின் ஆட்சிமுறைகள் யாவுமே தோல்வி கண்டுவிட்டன; இவை யாவுமே இனங்களுக்கிடையில் சமாதானத்தையும் நல்லுறவையும் கட்டியெழுப்ப தவறிவிட்டன. இனங்களுக்கிடையில் அவநம்பிக்கையையும் சந்தேகங்களையும் தான் கடந்தகால ஆட்சிமுறைகள் தோற்றுவித்துள்ளன. முதன்மைச் சமூகம் தமிழ்மக்களின் சுயநிர்ணய உரிமையை தனது ஆட்சிமுறைகளில் வழங்க தவறிவிட்டது. தமிழர்களினதும் முஸ்லிம்களினதும் பாதுகாப்பை கடந்த காலங்களில் பரீட்சித்துப் பார்த்த ஆட்சிமுறைகள் உறுதிசெய்யவில்லை. இந்த நிலையில் நீலன் திருச்செல்வத்தினால் தயாரிக்கப்பட்ட பிராந்தியங்களின் ஒன்றியம் பற்றி எதிர்காலத்தில் சிந்திப்பது நல்லது. இதில் செலவுகூடிய அரசியல் மயப்படுத்தப்பட்ட மாகாணசபைக்கு எதிரான மாகாணசபைகளினுடைய வினைத்திறனற்ற தன்மைக்கு மாறான அம்சங்கள் காணப்படுகின்றன. பிராந்தியங்களில் வாழும் மக்களின் சுயநிர்ணய உரிமையுடன் கூடிய பாதுகாப்பு இங்கு உறுதிசெய்யப்பட்டுள்ளது.

பிராந்தியத்தின் மனித வளத்தையும் ஏனைய வளங்களையும் உச்சபட்சமாக பயன்படுத்துவதன் மூலம் தற்போதைய ஆட்சிமுறையிலும் பார்க்க பலமடங்கு முன்னேற்றகரமான நிலையை உருவாக்கக்கூடிய நிலை காணப்படுகிறது. மத்தியை மையப்படுத்திய அதிகாரப்பகிர்வு முறைகள் நாட்டை துன்பகரமான நிலைக்கே கொண்டு செல்லும். இந்த மாதிரி (நீலன் திருச்செல்வத்தின்) வினைத்திறனுள்ள அரசியல்வாதிகளை உருவாக்கும் தற்போது உள்ளஆட்சிமுறையை இல்லாமலாக்கும். பிராந்தியங்களின் ஒன்றியங்களை அடிப்படையாக வைத்து ஒரு புதிய மாதிரி உருவாக்கப்பட வேண்டும். அதில் கடந்த காலத்தில் நிகழ்ந்தவை அல்லது நிகழ்காலத்தில் நடைபெறுகின்ற விடயங்கள் மீள இடம்பெறாத வகையில் இருக்கவேண்டும்.




**பிரித்தானியர் காலத்திலிருந்தே சிங்கள–தமிழ் அரசியல்வாதிகள் இனவாதத்தை வளர்த்துவந்துள்ளனர். இந்த இனவாத அரசியல் இன்றும் முன்னெடுக்கப்பட்டு வருகிறது மகா சங்கத்தினரின் ஒரு பிரிவினரும் இதற்கு எண்ணெய் ஊற்றி வருகின்றனர். மறுபுறத்தில் புலம்பெயர் தமிழர்களில் ஒரு சாராரும் இனவாதத்தை தூண்டி வருகின்றனர். இரு பகுதியினதும் இனவாதச் செயற்பாடுகள் காரணமாக ஆட்சிமுறைகள் தோல்வியடைந்துள்ளன.**

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

மருத்துவர் ப்ரியா கமலசிங்கம்
(யாழ்.போதனா மருத்துவமனை,
– சிலாபம் மாவட்டப்
பொது மருத்துவமனை)



# நீரிழிவும் பாதவழிபாடும்

## (Diabetic Foot Ulcer)

நலம் அறிய...





நீரிழிவு, உயர் குருதியமுக்கம்- இவை இரண்டும் அனைவரும் அலட்சியப்படுத்தும் இரு விடயங்கள். உங்களுக்கு ஒரு விபத்தோ, சிறு கல்லுக் குத்தி புண்ணோ ஏற்படும் வரை நீங்கள் தப்பித்துக் கொள்வீர்கள். ஆனால் நீங்கள் நீரிழிவு நோயாளியாக இருக்குமிடத்து விபத்து ஏற்பட்டாலோ புண் உருவாகினாலோ நிலை வில்லங்கமாகிவிடும் (புண்கள் குணமடையும் இயற்கை செய்முறை நீரிழிவால் இடையூறு ஏபற்படுத்தப்படுவதால் ஆரோக்கியமான திசுக்களின் கிரானுலேஷன் எனப்படும் மீளுருவாக்கம் பாதிக்கப்படுவதே இதற்குக் காரணமாகும்)

### இதன் முக்கியமான அறிகுறிகள் மற்றும் அடையாளங்கள் யாவை?

1. நீரிழிவு கால் புண் நோய் எப்போதுமே வலி ஏற்படுத்தக்கூடியதல்ல.
- இது மோசமான நிலையென்பதால் இதற்கான சிகிச்சையை உடனே ஆரம்பித்தல் அவசியம்.
2. நீரிழிவு புண் தடிமனான தோலில் எல்லையுடன் கூடிய சிகப்பு பள்ளம் போன்று காட்சியளிக்கும்.
3. மோசமான நிலையில், இந்த சிவப்பு பள்ளம் அடிப்படை தசைநாண்கள் மற்றும் எலும்புகள் வரை மிகவும் ஆழமாக செல்லக்கூடியது.
4. அழற்சியின் காரணமாக வீக்கம், வெப்பத்தன்மை மற்றும் வலி போன்றவைகள் ஏற்படலாம்.
5. இறுதி நிலைகளில், திரவ வெளியேற்றம், துர்நாற்றம், மற்றும் நிறம் மாறிய கிரானுலேஷன் திசு ஆகியவை காணப்படலாம்.

ஆரம்பக் கட்டத்தில் சிறிய புண் போன்று தொடங்கக்கூடிய இந்நோய், பொதுவாக உணர்ச்சியின்மை காரணமாக கவனிக்காமல் விடுவதாலேயே ஆழமான நீரிழிவு நோயாக உருவெடுக்கிறது.

அதிக காலத்திற்கு சிகிச்சை அளிக்காமல் விட்டுவிடுவதன் விளைவால் மேலும் இந்தப் புண்களில் தொற்றுகள் உருவாகி சீழ் (கட்டி) உருவாகும். இந்தக் கட்டி ஒஸ்டியோமெலலிஸ் osteomyelitis எனும் எலும்புத் தொற்றுக்கு வழிவகுக்கக் கூடியது. மேலும் ஏற்படும் சிகிச்சை தாமதம் பாதிக்கப்பட்ட பகுதி அழுகுவதற்கு காரணமாகிவிடும்,

அதாவது அந்தக் கால்ப் பாகத்தை துண்டிக்க வேண்டிய சூழ்நிலை ஏற்படும். இது ஏற்பட முக்கிய காரணங்கள்

1. இன்சுலின் பயன்படுத்தும் நோயாளிகளின் ஒப்பீட்டளவில் அதிகம்.
2. அதிக உடற்பருமன்
3. புகையிலை/ மதுவருந்துதல் என்பவை மேலும் மோசமடையச் செய்யும்
4. புண் ஏற்படும் இடம் மரத்துப் போய்விடுவதால் கவனிக்கப்படாமல் வெகுகாலமிருத்தல்

## கண்டறிவது எப்படி?

I. மருத்துவர் நேரடியாக பரிசோதிப்பர்
1. குருதியில் சீனியினளவு
2. உங்கள் பாதத்தில் அழுத்தம் ஏற்படும் புள்ளிகள் உதாரணமாக குதிக்கால்
3. நீங்கள் நடக்கும் பாங்கு
4. கால்களின் அன்னிச்சைத் திறன் உணர்ச்சித் திறன்

II. இதர இரத்தப் பரிசோதனைகள்
III. காயத்தை பரிசோதித்தல்
IV.-தேவையேற்படின் Xray...MRI



## சிகிச்சை

சர்க்கரை அளவின் கடுமையான கட்டுப்படுத்துதலே நீரிழிவு கால் புண் நோய் நிவாரணத்திற்கான முதல் படியாகும்.
இச் சிகிச்சைக்கான முக்கியமான நோக்கம் விரைவான நிவாரணத்தை வழங்குதல், ஏனெனில் இது காயத்தில் ஏற்படக்கூடும் தொற்றின் வாய்ப்புகளை குறைக்கும்.
பல்வேறு சிகிச்சை முறைகள், இந்த புண்கள் மீது ஏற்பட்டிருக்கும் அழுத்தத்தை விடுவித்து இறந்த செல்களையும் நீக்கப் பயன்படுகிறது. இந்த புண்களில் நோய்த்தொற்று ஏற்படாமல் இருக்க துணியோ அல்லது பருத்தியைக் கொண்டு மூடியிருக்க வேண்டும்.

### பிற சிகிச்சை முறைகள்:

- ஹைபர்பேரிக் ஆக்சிஜன் சிகிச்சை.
- எதிர்மறை அழுத்தம் காயம் சிகிச்சை.
- குறிப்பிட்ட பகுதியில் இருக்கும் அழுகிய திசுக்களின் மறுசீரமைப்பு.
- ஓசோன் சிகிச்சை.
- அழுத்தத்தை நிறுத்துவது.
- நோய்த்தொற்றை கட்டுப்படுத்த நுண்ணுயிர் எதிர்ப்பிகள் போன்ற மருந்துகளை உட்கொள்தல்.

### நீரிழிவு நோயுடன் புண் ஏற்பட்டுள்ளவர்களின் கவனத்திற்கு

**1. தினமும் பாதத்தை சரிபார்க்கவும்**
உங்கள் பாதங்கள் மற்றும் கால்களில் ஏதாவது வெட்டு, கொப்பளம் மற்றும் வீக்கம், குறிப்பாக நீரிழிவு நரம்பியல் காரணமாக உங்கள் காலில் உணர்ச்சி இழப்பு ஏற்பட்டால் நிச்சயம் கவனம் செலுத்த வேண்டும். கால்களை இழப்பதற்கு முக்கிய காரணமே, சிறு புண் தான். இதற்கு சிறந்த தீர்வு என்றால், தினமும் உங்கள் பாதங்களை சரி பார்க்கவும். காலில் ஏதாவது சிறிய காயத்தை பார்த்தால் கூட எவ்வித கால தாமதமும் இல்லாமல் உடனடியாக மருத்துவரை அணுக வேண்டும்.

**2. காயங்களின் கட்டுகளை மாற்ற மறந்திட வேண்டாம்**
உடலில் ஏற்படக்கூடிய காயங்களுக்கு போடப்படும் கட்டுகள் என்பவை மிகவும் முக்கியம். ஏனென்றால், அவைதான் காயங்களில் ஈரப்பதத்தை தக்க வைத்து, அவை விரைந்து குணமாக உதவும்.
கட்டுகளை மாற்ற மறந்தால், ஈரப்பதமின்றி காயம் குணமாக கால தாமதம் ஏற்பட்டுவிடும்.
உங்கள் மருத்துவரிடம் எப்படி கட்டு மாற்றுவது என்று கேட்டு தெரிந்து கொண்டு, முறையாக தொடர்ந்து கட்டுகளை மாற்றி வந்தால் காயம் விரைவில் ஆறிவிடும்.

**# தொடர்ந்து இரத்த சர்க்கரையின் அளவை பரிசோதிப்பது**
நீரிழிவு நோய் உள்ளவர்களுக்கு காயங்களை எதிர்கொள்வது என்பதே பெரிய விஷயம். அவற்றை விரைந்து குணப்படுத்த சில முக்கிய செயல்களை தொடர்ந்து செய்ய வேண்டும்.
உங்கள் இரத்தத்தில் சர்க்கரையின் அளவை சீராக வைத்துக் கொள்ள, ஆரோக்கியமான உணவுப் பழக்கத்தை தொடர வேண்டியது அவசியம். கலோரிகள், புரதங்கள், தாதுக்கள், வைட்டமின்கள், சிங்க் மற்றும் வைட்டமின் சி நிறைந்த உணவுகளை சேர்த்துக் கொள்வதன் மூலம் காயம் விரைவில் ஆறும். உங்களது மருத்துவரை அணுகி, சர்க்கரையின் [illegible] கேட்ட [illegible] காயம் மேற்கொண்டு வளராமல், குணப்படுத்திட முடியும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**3. உடற்பயிற்சி**
உடற்பயிற்சி செய்வதன் மூலம், உடலின் அனைத்து பாகங்களுக்கும் இரத்த ஓட்டம் சீராகும். சாதாரணமாகவே, நீரிழிவு நோய் உள்ளவர்கள் தொடர்ந்து உடற்பயிற்சி செய்வது நல்ல பலனளிக்கும் என்பது தெரிந்த ஒன்று தான். அதுவும், காயம் ஏற்பட்டிருக்கும் சமயம், உடற்பயிற்சி செய்வதன் மூலம் காயம் விரைவில் குணமடைவதோடு, உடல் ஆரோக்கியமும் மேம்படும்.

**4. அழுத்தத்தை குறையுங்கள்**
காயமடைந்த இடத்தில் அழுத்தத்தை அதிகமாக கொடுக்கும் போது, காயம் மேற்கொண்டு பெரியதாகக் கூடும். அதாவது, காலில் காயம் ஏற்பட்டால், நடப்பதை குறைத்து, காலிற்கு ஓய்வு கொடுத்தால் தான், காயம் குணமடைய வழிவகுக்கும். காயத்திற்கு மேற்கொண்டு அழுத்தத்தை அதிகரித்துக் கொண்டே சென்றால், அது காயத்தை பெரியதாக்குவதோடு, காயம் குணமடைவதிலும் தாமதத்தை ஏற்படுத்திவிடும்.

## நீரிழிவு நோயாளர்களுக்குரிய டிப்ஸ்

1. தினமும் காலை, மாலை இருவேளையும் பாதத்தை நன்றாக கூர்ந்து நோக்குதல் நன்று!!
(சிறுபுண்கள் , காயங்கள் , சேற்றுப்புண்கள் , காலணிக் காயங்கள், நகக்கண் வீக்கங்களில் உடனடிக் கவனம் தேவை! தம் குடும்பத்தாரிடம் பாதத்தை தினம் ஒருமுறை பார்க்கச்சொல்லுதல் மிக நன்று!!)
2. வெறும் காலில் நடப்பதை அறவே தவிர்க்கவும் . சமூக , மத நம்பிக்கைக்காக வெறும் காலில் நடப்பது , நீரிழிவுப்பாதத்துக்கு உகந்தது அல்ல!!
3. நீரிழிவு பாத நோயாளர்கள் தாங்கள் அணியும் காலணிகளில் கூடுதல் கவனம் செலுத்த வேண்டும் . பொருந்தா காலணியும், நீரிழிவுப்பாதமும் பொருந்தாக் காதல் போன்று முடிவு பெறும்.
4. விரல்கள் நடுவே அணிவது போன்ற காலணிகள் , பழைய நைந்த காலணிகள், கடின நெளிவற்ற ரப்பர் காலணிகள் இவை அனைத்தையும் கண்டிப்பாக தவிர்க்கவும்.
5. பாதத்தை நன்றாகக் கழுவியபின் , சுத்தமான துணியால் காலினை துடைத்துவிட வேண்டும் . விரலிடை ஈரத்தை தவிர்த்தல் வேண்டும் .
6. விரல்களிடையே ஈரப்பசை , பூஞ்சைத் தொற்று ஏற்படவும் , அதன் வழியே கிருமித்தொற்று பாதத்தினுள் பரவும் ஆபத்து உள்ளது!!
7. நரம்பு இயக்கத்தடையில் பாதத்தோல் பகுதி காய்ந்து , வெடிப்பு ஏற்பட வாய்ப்புண்டு. ஆதலால் ஈரப்பசை கொண்ட களிம்பை (Moisturising Cream) உலர்ந்த பாதத்தின் மேலிட வேண்டும் . இவை விரலிடைப் பரவாமல் கவனித்தல் அவசியம்.
8. வசதி வாய்ப்புள்ளவர்கள் , நீரிழிவுப் பாதத்திற்கான சிறப்பு தூய்மை உறையினை (Diabetic Socks) அணிந்து கொள்ளலாம் . வேர்வை உறையினைத் தவிர்க்கவும் .
9. நீரிழிவு பாதநோயாளர்கள் , சுடுநீரில் கால்களை ஊற வைப்பது ஆபத்தில் முடியும் .
10. நாட்டு மருந்துகள் , இலைதழைகள் , வலிநிவாரணக் களிம்புகள் நீரிழிவுப்பாதத்தில் சுயச்சிகிச்சை செய்வதை , அறவே தவிர்த்தல் நலம் !! ( பலமுறை இத்தகைய நோயாளர்கள் சுயசிகிச்சையினால் காலினையும் , உயிரினையும் இழக்கும் நிலை ஏற்படுகின்றது. அருகில் இருக்கும் அரசு மருத்துவமனையில் உடனே சிகிச்சை மேற்கொள்ளவும் )
11. நீரிழிவுபாதத்திற்கு ,சிறந்த காலணிகள் சுமை நீக்கப்பட்ட அழுத்தப் புள்ளிகள் நீக்கப்பட்ட காலணிகளே (Off Loading Footwear)ஆகும். இதன் மூலம் 75 சதவீத பாதப்புண்களைத் தவிர்க்கலாம்.
12. உயிரினையும் , கால்களையும் காப்பாற்ற புகையிலை சார்ந்த அனைத்து வகையான பொருட்களின் பயன்படுத்தலையும் நிறுத்த வேண்டும் . இவை போன்றவற்றை பழகாமல் இருப்பதே சாலச்சிறந்தது!!
13. பாதத்தில் ஏற்படும் ஆணி , தோல் தடித்தல், வெடிப்பு , நிறம் மாறுதல், புண், காயங்களில் உடனடி மருத்துவக் கவனிப்பு அவசியம் .
14. தகுந்த காலணிகளுடன் , நடைப்பயிற்சி , இரத்த சர்க்கரை அளவைக் கட்டுக்குள் வைத்திருத்தல் அவசியம்.
15. வருடம் இருமுறை மருத்துவர்களின் ஆலோசனை தேவை. தேவை இருந்தால் ஒட்டுறுப்பு அறுவைசிகிச்சை மருத்துவரையும் (Plastic Surgen) , இரத்தநாள அறுவைசிகிச்சை மருத்துவரையும் (Vascular Surgen) ஆலோசித்தல் நன்று!!

# ஊர்ப் புதினம்

புதினம் - 1

இராகவன்





ஆயிரத்தித் தொள்ளாயிரத்தி எண்பத்தியோரா மாண்டு.

நான் நேசறி படிச்சுக் கொண்டிருந்தன். கிழவி தோட்டப் பிள்ளையார் கோயிலுக்கு முன்னால இருக்கிற கட்டடத்திலதான் நேசறி வகுப்பு நடக்கும். பேபியக்காதான் நேசறி ரீச்சர். அவ நல்ல வளத்தி. றோஸ்கலரில இருப்பா. கூடுதலாப் பச்சை, கறுப்பு கலர் சாறியள்தான் கட்டுவா. பொட்டு வைக்கமாட்டா. அவையள் வேதக்காரர் எண்டு எங்கட அம்மா சொல்லுவா. ஒவ்வொரு நாளும் காலமை (சனி, ஞாயிறு தவிர) அம்மா என்னைக் கூட்டிக் கொண்டே நேசறியில விடுவா. எங்க வீட்டிலிருந்து நேசறிக்கு நடந்து போக ஒரு பத்து நிமிசமெண்டாலும் எடுக்கும். "நேசறி முடியச் சிவாவோட சேர்ந்து வா" எண்டு அம்மா சொல்லுவா.

சிவா எங்கட பக்கத்து வீடுதான். ஆள்வலு சுழியன். கொஞ்சம் புளுகனும். அவன்ர தேப்பன் அப்பவே 'ஸம்பியா'வில இருந்தவர். "என்ர அப்பா ஸம்பியாவில இருக்கிறார்" எண்டு சிவா அடிக்கடி எங்களுக்குப் பெருமை பொங்கச் சொல்லுவான். அவன் சொல்லித்தான் எங்களுக்கெல்லாம் 'ஸம்பியா' எண்டொரு நாடு இருக்கெண்டே தெரியும். அவன் நேசறிக்குக் கொண்டு வாற பென்சில் சீவுலிக்கூடு, கொப்பி, புத்தகப் பை எண்டு எல்லாமே வெளிநாட்டுச் சாமான்கள்தான். நாங்களெல்லாம் காற்சட்டை சேட்டோட நேசறிக்கு வர, அவன் மட்டும் ரவுசர், சேட்டோட நேசறிக்கு வருவான். மழை காலங்களில் அம்மா குடை பிடிச்சுக் கொண்டு வந்து நேசறியில விட்டுட்டுப் போவா. குடையை என்னட்டத் தரமாட்டா. வீட்டில் ஒரேயொரு குடைதானிருக்கு. மற்றது குடையை என்னிட்டத் தந்திட்டுப் போனால் நான் துலைச்சுப் போடுவன் எண்டும் சொல்லுவா. அநேகமாக நேசறிக்கு வாற பொடியளெல்லாம் சின்னச் சின்னக் குடையளோட தான் வருவினம். ஆனால் சிவா மட்டும் றெயின்கோட் போட்டுக் கொண்டு வருவான். அவனுக்குக் கொஞ்சம் லெவலுமிருந்தது. எங்களோடயெல்லாம் சேரமாட்டான். அம்மாவுக்கு இதெல்லாம் தெரியாது. மற்றது நேசறி முடிஞ்ச கையோட சிவாவின்ர தமையன்மார் சில வேளை வந்து அவனைச் சைக்கிளில ஏத்திக் கொண்டு போடுவினம்.

இப்படியிருக்கேக்குள்ள ஒருநாள் நேசறி நடந்து கொண்டிருக்கு. திடீரென்று சனமெல்லாம் வெளியில பரபரத்துக் கொண்டு ஓடுதுகள். பேபியக்கா எங்களை "அமைதியாய் இருங்கோ" எண்டு சொல்லிப் போட்டு என்ன சங்கதி? எண்டு விசாரிக்கிறதுக்கு வெளியில போனா. அப்ப பாத்து இன்னுங்கொஞ்ச சனம் நேசறிக்குப் பின்பக்கத்தால 'ஆமி வருகுது ஓடுங்கோ! ஓடுங்கோ!' என்று கத்திக் கொண்டு வெளியில ஓட, நானும் புத்தகப் பையைத் தூக்கிக் கொண்டு பின்னால ஓடினன். வெளியில போன பேபியக்கா 'பிள்ளையள் ஓடாதேங்கோ. நில்லுங்கோ ஓடாதேங்கோ!' எண்டு சொல்லிக் கொண்டு வீச்சாய் ஓடிவந்தா. அவவின்ர சொல்லை ஆர் கேட்டது? திக்குத் திக்கா ஓடினம். உண்மையில அப்ப எனக்கு ஆமி எண்டா எப்படியிருக்கும்? என்ன நிறம்? பச்சையா? நீலமா? கறுப்பா? சிவப்பா? ஒண்டுந்தெரியாது.

*(இன்னும் சொல்லுவன்)*

# யாழ்ப்பாண வரலாறு

## 1505-1948 வரை

ந.பரமேஸ்வரன்



**1645** ஆம் ஆண்டு கொழும்புத்துறை துறைமுகத்திலிருந்து போர்த்துக்கல் அரசுக்குக் கிடைத்த வருமானம்

| | |
|---|---|
| புகையிலை வரி | - 54 10 பகோடாஸ் |
| பச்சிலைப்பள்ளிக்குச் செல்வதற்கான அனுமதி பத்திரக் கட்டணம் | - 310 பகோடாஸ் |
| சாராய வரி | - 155 பகோடாஸ் |
| சாயவரி | - 381 பகோடாஸ் |
| துணிகளுக்கு முத்திரை குத்துவதன் மூலம் கிடைத்த வரி | - 700 பகோடாஸ் |
| அலுப்பாந்தி சந்தை வரி | - 1200 பகோடாஸ் |
| மொத்தம் | - 8156 பகோடாஸ் |

ஒரு பகோடாஸ் என்பது பத்து பணம். ஒரு பணம் ஆறு சதம்.

போர்த்துக்கீசர் காலத்தில் முதல் முறையாக வலிகாமம் பகுதிக்குத் தயாரிக்கப்பட்ட தோம்பும் கிடைத்த வரி வருமானமும்.

| கிராமங்கள் | வரி வருமானம் | சந்தை வரி |
|---|---|---|
| தெல்லிப்பழை | 467 பகோடாஸ் | 85 பகோடாஸ் |
| வீமன்காமம் | 74 பகோடாஸ் | 15 பகோடாஸ் |
| தையிட்டி | 70 பகோடாஸ் | 30 பகோடாஸ் |
| நவக்கிரி | 18 பகோடாஸ் | 07 பகோடாஸ் |
| சூராவத்தை | 27 பகோடாஸ் | 04 பகோடாஸ் |
| சுதுமலை | 62 பகோடாஸ் | 15 பகோடாஸ் |
| ஊரெழு | 03 பகோடாஸ் | 09 பகோடாஸ் |
| உரும்பராய் | 95 பகோடாஸ் | 12 பகோடாஸ் |
| சிறுப்பிட்டி | 69 பகோடாஸ் | 16 பகோடாஸ் |
| அச்செழு | 63 பகோடாஸ் | 17 பகோடாஸ் |
| கோண்டாவில் | 101 பகோடாஸ் | 26 பகோடாஸ் |
| புத்தூர் | 155 பகோடாஸ் | 37 பகோடாஸ் |
| மானிப்பாய் | 92 பகோடாஸ் | 29 பகோடாஸ் |
| சங்குவேலி | 88 பகோடாஸ் | 12 பகோடாஸ் |
| இணுவில் | 33 பகோடாஸ் | 11 பகோடாஸ் |
| உடுவில் | 142 பகோடாஸ் | 22 பகோடாஸ் |
| மல்பட்டு | 12 பகோடாஸ் | 07 பகோடாஸ் |

(மல்பட்டு என்பது மல்லாகமாக இருக்கலாம் இந்த புள்ளி விபரப்பட்டியலில் மல்லாகத்தை காணவில்லை)

| | | |
|---|---|---|
| பத்துவக்காரர் | 03 பகோடாஸ் | 00 பகோடாஸ் |

(இது பத்தமேனியாக இருக்கலாம்)

| | | |
|---|---|---|
| அச்சுவேலி | 307 பகோடாஸ் | 96 பகோடாஸ் |
| கோப்பாய் | 411 பகோடாஸ் | 68 பகோடாஸ் |
| நீர்வேலி | 167 பகோடாஸ் | 35 பகோடாஸ் |
| நீர்வேலிகுளிக்குட்டி | 14 பகோடாஸ் | 06 பகோடாஸ் |
| கட்டுவன் | 65 பகோடாஸ் | 20 பகோடாஸ் |
| பளை | 36 பகோடாஸ் | 08 பகோடாஸ் |
| வயாவிளான் | 107 பகோடாஸ் | 37 பகோடாஸ் |
| மயிலிட்டி | 120 பகோடாஸ் | 28 பகோடாஸ் |
| கந்தரோடை | 37 பகோடாஸ் | 06 பகோடாஸ் |
| சில்லாலை | 61 பகோடாஸ் | 20 பகோடாஸ் |
| புன்னாலைக்கட்டுவன் | 86 பகோடாஸ் | 26 பகோடாஸ் |
| துணைவி | 50 பகோடாஸ் | 00 பகோடாஸ் |
| ஆவரங்கால் | 97 பகோடாஸ் | 10 பகோடாஸ் |
| சுன்னாகம் | 125 பகோடாஸ் | 29 பகோடாஸ் |
| இருபாலை | 09 பகோடாஸ் | 06 பகோடாஸ் |
| திருநெல்வேலி | 77 பகோடாஸ் | 13 பகோடாஸ் |
| நல்லூர்பட்டணம் | 53 பகோடாஸ் | 27 பகோடாஸ் |
| **மொத்தம்** | **3449 பகோடாஸ்** | **814 பகோடாஸ்** |

**முத்துக்குளிப்பு**

18.7.1645 அன்று முத்துக்குளிப்புத் தொடர்பாக புதிய சட்டம் யாழ்ப்பாண தளபதி மஸ்ஹறினாஸினால் அமுல்படுத்தப்பட்டது. செப்ரெம்பர் மாதத்தில் முத்துக்குளிப்பு ஆரம்பமாகும். தூத்துகுடியிலிருந்தும் வந்து முத்துக்குளிப்பதற்கு அனுமதி வழங்கப்பட்டது.

முத்துகுளிப்பை மேற்பார்வை செய்வதற்கு செயலாளர் ஒருவர் நியமிக்கப்பட்டிருந்தார். முத்துப்படுக்கைகளை அடையாளம் காண்பதும் இவரது கடமையாக இருந்தது. முத்துக்குளிப்பு நடைபெறும் காலத்தில் முத்துக்குளிப்பு நடைபெறும் பிரதேசத்தில் மீன்பிடி தடைசெய்யப்பட்டிருந்தது. முத்துச்சிப்பி கண்டெடுக்கப்படும் சந்தர்ப்பத்தில் அதை கரையிலுள்ள முகாமுக்கு கொண்டு சென்று அதன் பெறுமதியை பரிசோதிப்பர். மார்ச்சிலும் முத்துக்குளிப்பு நடைபெறும். முத்துக்குளிப்பு நடைபெறும் காலத்தில் பல்வேறு இனங்களையும் சாதிகளையும் சேர்ந்தவர்கள் மன்னாருக்கு விஜயம் செய்வர். அவர்களுக்கிடையே சண்டை ,சச்சரவுகள், சுத்துமாத்துகள் இடம்பெறாமல் பார்த்துக் கொள்ளவேண்டியது மன்னார்த் தளபதியின் கடமையாக இருந்தது. மன்னார்த் தளபதியும் கணக்கப்பிள்ளையும் முத்துக்குளிக்க புறப்படும் படகுகளையும் படகுக்கு பொறுப்பாகச் செல்லும் படகோட்டியின் பெயரையும் ஒரு புத்தகத்தில் பதிந்துவைப்பர். தனது படகில் எத்தனை சுழியோடிகள் வருகிறார்கள் என்பதை படகோட்டி தெரியப்படுத்தவேண்டும். முத்துக்குளிப்பு நடைபெறும் காலத்தில் இராணுவச் சிப்பாய்கள் கடலில் காவல் புரிந்தனர். இவர்களுக்கு இதற்கு மேலதிக கொடுப்பனவு எதுவும் வழங்கப்படவில்லை. போனஸ் மட்டுமே வழங்கப்பட்டது.

முத்துக்குளிக்க செல்லும் சுழியோடிகள் புறப்படுவதற்கு முன்னர் தாங்கள் எந்த மதத்தை சேர்ந்தவர் என தெரியப்படுத்தவேண்டும். முஸ்லிம்கள், கிறிஸ்தவர்கள் ,யூதர்கள் ஆகியோர் சுழியோடிகளாகப் பணிபுரிந்தனர். சுழியோடிகள் தாங்கள் செல்லும் படகைவிட்டு வேறு படகுக்கு மாறமுடியாது. அத்துடன் கிடைக்கும் முத்துச் சிப்பிகளை ஒளித்து வைக்கமாட்டோமென சத்தியப்பிரமாணம் செய்துவிட்டே புறப்படவேண்டும். முத்துகுளிப்பவர்களின் விபரங்களை செயலாளரும் கணக்கப்பிள்ளையும் கணக்குப் பதிவுத் திணைக்களத்துக்கு அனுப்பவேண்டும். முத்துக்குளிப்பு நடைபெறும் காலத்தில் கடைகள் கட்டப்பட்டு ஏலத்தில் விடப்படும். கடைகளுக்கான வாடகை போர்த்துக்கீசரால் அறவிடப்பட்டது. முத்துக்குளிப்பு குத்தகைக்கு எடுக்கும் முஸ்லிம்கள் சுழியோடிகளுக்கு 5 பதக்கும் யூதர்கள் இரண்டரைப் பதக்கும் செலுத்தவேண்டியிருந்தது. முத்துக்குளிப்பு குத்தகைக்கு எடுப்பவர்களிடமிருந்து சட்டவிரோதமாகவும் சில கட்டணங்களை மன்னார்த் தளபதி அறவிட்டுள்ளார்.

*(வரலாறு நீளும்)*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சொற்சிலம்பம் போட்டி 51

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | | 4 | | ■ | 5 |
| 6 | | | ■ | | ■ | 7 | |
| 8 | | ■ | 9 | | 10 | | ■ |
| | ■ | 11 | | | | ■ | 12 |
| 13 | 14 | ■ | 15 | | | 16 | |
| ■ | 17 | 18 | | ■ | 19 | | |
| 20 | | | ■ | 21 | | | ■ |
| 22 | | | | | ■ | 23 | |

அனுப்புபவர் பெயர்:........................................

முழுமையான தபால் விலாசம்: ...............................

........................................................

கையொப்பம்:.............................................

ஒவ்வொரு போட்டியிலும் ஏராளமான வாசகர்கள் ஆர்வத்துடன் கலந்துகொள்வதுடன், அவர்களில் பெரும்பாலானோர் முற்றிலும் சரியான விடைகளை அனுப்பி வருகின்றமையால் பரிசுக்கும் பாராட்டுக்கும் உரிய அதிர்ஷ்டசாலிகள் குலுக்கல் முறைமூலம் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர்.

## இடமிருந்து வலம்

1.பார்த்தனுக்குப் பரந்தாமன் போர்க்களத்தில் உபதேசித்தது. 6.அரிசியைத் தீட்ட வருவது 7.ஒரு தானிய வகை 8.தாவரம் முளைப்பது இதிலிருந்து 9.ஒலி 11.பேரழகுடைய பெண் 13.சமிக்ஞை 15. ஞாபகம் கொள்ளல் 17.சௌகரியம் 19.தலைவன் மனம் கவர்ந்தவள் 20.ஒரு நட்சத்திரம் 21.வித்தை 22.ஒன்று கூடிப்பேசுதல் 23. வரி

## மேலிருந்து கீழ்

1.அழிவுக்கு காரணமான ஆசைகளில் ஒன்று 2.கவிஞர்கள் படைப்பது 3.காயத்தின் அடையாளம் 4.ஸ்தோத்திரம் பாடல் 5.இது ஆயிரம் முட்டை இட்டாலும் அமைதியாக இருக்கும் 7.விமானங்களை வீழ்த்தவல்ல ஏவுகணை 9. மூலஸ்தானம் 10.நிறுத்துதல் 12.வெற்றிக்கான முதல்படி 14.தற்போதுள்ள இருப்பு 16.சிரசில் எழுதப்பட்டது இது தான் என்பர் 18.ஒரு நெல் 20. மெதுவாகத் தேய்க்க 21.பாணம்

### சொற்சிலம்பம் போட்டி 49 க்கான விடைகள்

**இடமிருந்து வலம்**

1.விசுவாசம், 5.ஆவி, 7.வருடம், 8.ஆடல், 9.சாதி, 10.பதிகம், 12.கவரி, 13.பகு, 15.வடம், 16.கரம், 17.தண்மை, 18.குடம்பி, 19.மடி, 20.சணல், 21. துல்லியம், 22.கால்

**மேலிருந்து கீழ்**

1.விவசாயி, 2.சுருதி, 3.வாட, 4.சம்பவம், 5.ஆடம்பரம், 6.வில், 8.ஆக, 11.திரி, 12.கடமை, 14.கும்பிடல், 15.வண்டில், 16.கடல், 17.தமது, 18.குணம், 20.சய

**சொற்சிலம்பம் போட்டி இல.51**

பூர்த்தி செய்யப்பட்ட கூப்பன்கள்

**உதயன் சஞ்சீவி**

**இல.361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.**

என்னும் முகவரிக்கு

**20.08.2021** இற்கு முன்னர் கிடைக்கத்தக்கதாக தபாலட்டையில் ஒட்டி அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.

## போட்டி விதிகள்

- வாசகர் எவரும் சொற்சிலம்பம் போட்டியில் கலந்து கொள்ளலாம்.
- ஒருவர் எத்தனை கூப்பன்களையும் நிரப்பி அனுப்பலாம்.
- சஞ்சீவியில் பிரசுரமாகும் கூப்பன்களே போட்டிக்கு ஏற்கப்படும்.
- போட்டி தொடர்பாக ஆசிரியரின் தீர்ப்பே முடிவானதாகும்.
- வெற்றி பெறும் முதல் ஐந்து அதிர்ஷ்டசாலிகளுக்கு முறையே

ரூபா 300/=, ரூபா 250/=, ரூபா 200=, ரூபா 150/= ரூபா 100/=

பரிசாக வழங்கப்படும்.

சொற்சிலம்பம் போட்டியில் பரிசு பெற்றோருக்கான கொடுப்பனவுக் காசோலைகள் காலக்கிரமத்தில் அவரவர்களது விலாசத்துக்கு அனுப்பி வைக்கப்படும்.

### போட்டி இலக்கம் 49இல் வெற்றி பெற்றோர் விபரம்

**1 ஆம் பரிசு**
**ம.மே.லெற்றீஷியா**
இல.1625, இரத்தினபுரம்,
கிளிநொச்சி.

**2 ஆம் பரிசு**
**அ.ராதாமணி,**
கண்டி வீதி,
சாவகச்சேரி.

**3 ஆம் பரிசு**
**இராமன் கந்தசாமி**
கைதடி தெற்கு,
கைதடி

**4 ஆம் பரிசு**
**சு.மறீன் அபிஷாயினி,**
40/1, புனித அன்னாள் வீதி,
பாண்டியன்தாழ்வு.

**5 ஆம் பரிசு**
**நற்குணராஜா தனுபதன்,**
பெருமாள் கோவிலடி,
யாழ்ப்பாணம்

# கி.ரா: நினைவுகள்



முதுபெரும் எழுத்தாளர் கி.ராஜநாராயணனின் (கி.ரா.வின்) நண்பரும் எழுத்தாளருமான பேராசிரியர் அ.ராமசாமி, அவரின் 40 ஆண்டு கால நண்பர். அவரோடு கொண்ட நட்பை 'உதயன் – சஞ்சீவி' வாசகர்களுக்காக நினைவுக் குறிப்புகளாகத் தருகிறார்.

**பேராசிரியர் அ.ராமசாமி**
*தமிழ்த்துறை (பணி நிறைவு) மனோன்மணி சுந்தரனார் பல்கலைக்கழகம், திருநெல்வேலி, தமிழ்நாடு.*

## 30

பு

ஒரு இடத்தை அதன் பூர்வீகத்தோடும் மனிதர்களின் நிகழ்கால இருப்போடும் சேர்த்து வைத்துப் புரிந்துகொள்ள வேண்டும் என்று எப்போதும் நினைப்பவர் கி.ரா. அவரோட புனைகதைகளில் இந்தக் கூறு தூக்கலாவே இருக்கும். 'என்னோட கதைகள் இடத்தெ எழுதிக்காட்டுதா? இடத்திலெ இருக்கிறெ மனுசங்களெ எழுதிக்காட்டுதான்னு உறுதியாச் சொல்லமுடியாது' என்று ஒருமுறை சொன்னார். பாண்டிச்சேரிக்கு வந்த பிறகு அந்த ஊரைப்பற்றிப் பலரிடமும் கேட்டுத் தெரிந்து கொள்வதில் காட்டிய ஆர்வத்தைப் பின்னர் நேரில் பார்த்துத் தெரிந்து கொள்ளவேண்டும் என்பதிலும் காட்டினார். பிரபஞ்சனின் வீடு புதுச்சேரி ரயில் வேஸ்டேசன் பக்கம் இருக்கு என்று சொன்னபோது, 'அது ஸ்வெல் தாக்களோட ஏரியா' ன்னு சொல்றாங்களே? என்றார். சொல்லிவிட்டு. ' பிரபஞ்சனோட அப்பா காங்கிரஸ்காரர்; கள்ளுக் கடை ஒழிப்புப் போராட்டத்தில தன்னோட தென்னந்தோப்பெ அப்படியே வெட்டிச்சாய்ச்ச தீவிரவாதியின்னு கேள்விப்பட்டிருக்கேன்; அதனாலெ அவரு ஸ்வொல்தாவா இருக்க வாய்ப்பில்லை. ஆனா அவங்கெ சொந்தக்காரங்க யாராவது இருப்பாங்க .. ' என்றார் கி.ரா.

பாண்டிச்சேரியின் பழைய நகர எல்லைக்குள் மூன்று வகையான வீடுகள் உண்டு. கடற்கரைச் சாலை தென் வடல்சாலை. ஒரு கிலோமீட்டர் நீளத்திற்குத் தென் வடலாகப் போகும் அந்தப் பெரிய சாலைக்கிணையாக நான்கு சாலைகள் தென்வடலாகவே போகும். பெரும்பாலும் பிரெஞ்சுப் பெயர்களைக் கொண்டஅந்தச் சாலைகளில் இருக்கும் கட்டடங்கள் பிரெஞ்சுப் பாணிக் கட்டடங்கள். உயரம் கூடிய விதானங்களும் சாளரங்களும் மென்மஞ்சளும் வெண்மையுமான வண்ணங்களும் அதன் அடையாளங்கள். பிரான்சில் இருக்கும் உணர்வைத் தரக்கூடிய கட்டடங்களோடு சாலைகளும் மனிதர்களும்...அந்தப் பகுதிக்குள் கூடுதல் சத்தமும் இரைச்சலும் இருக்கும் ஒரே பகுதி பாரதியார் பூங்காவும் அதனைச் சுற்றி இருக்கும் சட்டசபை, கவர்னர் மாளிகை, வணிக அவை, காந்திதிடல் பகுதிகள்தான். மற்றபகுதிகளில் பிரெஞ்சு கல்வி நிலையங்கள், தூதரக அலுவலகங்கள். பிரெஞ்சுக்காரர்கள் இப்போதும் வந்து தங்கிச் செல்லும் வில்லாக்கள் என அமைதி தவழும் இடங்கள். வெள்ளை நகரம் என அழைக்கப்படும் அந்தப் பகுதியைப் பிரிப்பதுபோல ஒரு கால்வாய் ஒன்று தென்வடலாக ஓடும்.

கால்வாய்க்கு மேற்கே இருக்கும் சாலைகள் பூர்வீகப் பாண்டிச்சேரிக்காரர்கள் வாழும் தெருக்களைக் கொண்டது. எல்லாச் சாலைகளும் கடற்கரையை நோக்கிச் செல்லும் விதமாக கிழக்கு மேற்காக நீளும் தன்மை கொண்டவை. ஒவ்வொரு சாலையும் ஒரு வழிப்பாதையாக அமைக்கப்பட்ட நகரம். நகரத்திற்குள் பேருந்து, லாரி போன்ற கனரக வாகனங்கள் நுழைந்துவிடமுடியாது. சந்தைக்கும் கடைகளுக்கும் தேவையான காய்கறிகள், மீன்கள், சரக்குகளை இறக்கும் கனரக வாகனங்கள் இரவு நேரத்தில் வந்து இறக்கி விட்டுச் செல்லும் விதமாகப் போக்குவரத்துக் கட்டுப்பாடுகள் உண்டு. கீழ் மேலாக இருக்கும் சாலைகளுக்கு இணையாக ரயிலடியில் தொடங்கி ஒரு சதுரத்தில் சின்னச் சின்னத் தெருக்களில் இரட்டைக்குடியுரிமை கொண்ட ஸ்வொல்தாக்களின் வீடுகள் உண்டு.



அந்தப் பகுதியில் இருப்பவர்கள் இன்னும் பிரெஞ்சுக் குடியுரிமை பெற்றவர்கள். அவர்களின் முன்னோர் பிரெஞ்சு ராணுவத்தில் பணியாற்றி அங்கேயே தங்கியிருப்பார்கள். அவர்களின் வாரிசுகள் தங்களைப் பிரெஞ்சுக் குடிகளாகக் கருதிக் கொள்வதில் பெருமை கொள்பவர்கள். அந்த குடும்பத்தில் பெண்ணெடுத்துத் திருமணம் செய்து கொள்ளும் ஒருவர் இப்போதும் பிரெஞ்சுக் குடியுரிமை பெற்று பிரான்ஸுக்குப் போய்விடலாம். அந்த வசதியைப் பெற்றவர்களே யேஸ் வொல்தாக்ள் என்று அழைப்பார்கள். கி.ரா.வருவதற்கு முன்பே நான் புதுச்சேரிக்குப் போயிருந்தாலும் இந்த விவரங்களையெல்லாம் அவர் வாயிலாகவே நான் அறிந்தேன். அவரைச் சந்திக்க வருபவர்களிடம் கேட்டுக்கொண்ட தகவல்களைப் பார்த்துத் தெரிந்து கொண்ட ஆர்வத்தில் அதையெல்லாம் பார்க்கவேண்டும் என்ற நினைப்பில் என்னை அழைத்துக்கொண்டு அவ்வப்போது போவார். தொடக்கத்தில் நானும் கி.ரா.வும் தங்கியிருந்த முத்தியால் பேட்டை கடலோரம் இருக்கும் பகுதி. நேராகக் கடல்நோக்கி நடந்தால் வைத்திக் குப்பம் என்ற மீனவர் குடியிருப்புகள் வழியாகக் கடலுக்குப் போகலாம். ஆனால் அங்கே நடக்கமுடியாது. நல்ல காற்றும் கிடைக்காது. கடல்கரையைத் திறந்தவெளிக் கழிப்பறையாகப் பயன்படுத்துவார்கள் மீனவர்கள் .அத்தோடு புதுச்சேரி டிஸ்ட்லரிஸின் சாராயக்கழிவும் கடலில் கலந்து நாற்றம் மூக்கைத் துளைக்கும். அதனைத் தாண்டி மக்கள் நடப்பதற்காகப் பெரும் பெரும் கற்களைக் கொட்டித் தடுப்புகளை உண்டாக்கிக் கடலைத் தடுத்திருப்பார்கள். புதுவைத் தலைமைச் செயலகம் தொடங்கி பிரெஞ்சுக்கு வர்னாட்யூப்ளேசிலை இருக்கும் சிறிய பூங்காவரை ஒரு கிலோமீட்டர் நீளத்திற்குத் தளக்கற்கள் பதித்திருக்கும். இடையில் ஆஜானுபாகுவாக மகாத்மா சிலையாக நிற்பார். முத்தியால் பேட்டையிலிருந்து கடற்கரைக்கு நடந்தே போய்விடுவோம். நான் தினசரி காலை வேகநடைக்காகப் போவேன். சில நாட்கள் கி.ரா.வும் வருவார்.அவர் வந்தால் வேகநடை கிடையாது. மென்னடைதான். நடைபாதை தொடங்கும் தலைமைச் செயலகப்பகுதியில் இருக்கும் பூங்காவில் உட்கார்ந்து வேடிக்கை பார்த்துக்கொண்டிருப்பார். புதுச்சேரிக்கு வரும் ஐரோப்பியர்கள் கடற்கரைக்கு வருவதும் காலையில்தான். அலை வந்துமோதும் பாறைகளின் மீது அமர்ந்து யோகா செய்யும் ஐரோப்பிய ஆண்களும் பெண்களும் காலையைத்தான் தேர்ந்தெடுப்பார்கள். யோக நிலையிலிருப்பவர்களில் பெரும்பாலானோர் தவம் செய்ய வந்த சந்நியாசிகள் போலத்தான் இருப்பார்கள். கடலுக்குள்ளிருந்து சூரியன் செக்கச் சிவந்த பந்தாய் மிதந்து வருவதற்கு முன்பே வந்து அமர்ந்துவிடுவார்கள்.

கடற்கரைச்சாலையிலிருந்து மேற்கு நோக்கிப் போகும் ஒரு சாலையில் மூன்று நிமிடம் நடந்தால் அரவிந்தர் ஆசிரமம் போய்விடலாம். அதற்கு நேரே இருக்கும் வீதியில் தான் மணக்குள விநாயகர் ஆலயம் இருக்கிறது. இந்தப் பகுதியில்தானே பாரதியும் வ.வே.சு. அய்யரும் சுற்றித்திரிந்திருப்பார்கள் என்று ஆரம்பித்துக் கடந்த காலத்திற்குள் அழைத்துப் போய்த் திரும்பக் கொண்டு வருவார் கி.ரா.

(நினைவுகளும் குறிப்புகளும் தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாத்தி யோசி!



பொம்மைகளைக் கொண்டு புத்தளத்தில் இடம்பெற்ற ஆர்ப்பாட்டம்



ஐடா சுகன்யா

சமீபத்தில் புத்தளம் மாவட்டத்தின் ஒரு பகுதியில் நடைபெற்ற வித்தியாசமான ஆர்ப்பாட்டம் இது. மனிதர்களுக்கு பதிலாக புடைவைக் கடைகளில் காட்சிக்கு வைக்கப்படும் பொம்மைகளைப் பயன்படுத்தி இந்த நூதனப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது. மனிதர்கள் ஒன்று கூடினால் தானே கொரோனாக் கொத்தணிகள் உருவாகும். மாறாக பொம்மைகள் போராடினால் கொரோனா என்ன செய்துவிடமுடியும்?

இப்படியான புத்தாக்கச் சிந்தனைகள் தான் தற்காலத்தின் தேவை.

இதேபோன்றதொரு புதுமையான திருமண வைபவம் பற்றியும் தெரிய வந்தது. "சூம்" செயலி மூலம் திருமண அழைப்பிதழ் கொடுக்கப்பட்டு, திருமணத்தின் நேரடி நிகழ்வும் அதன் மூலம் ஒளிபரப்பு செய்யப்பட்டு, பின்னர் வாழ்த்துக்களும் பெறப்பட்டன.



"சூம்" அழைப்பில் கலந்தவர்கள் எல்லாருக்கும் 'ஒன்லைன்' ஊடாக அவர்கள் வீடுகளுக்கே பிரியாணியும் அனுப்பப் பட்டது. பின்னர், இந்தத்திருமண விருந்தில் கலந்து கொண்ட பலரும், தமது பங்களிப்பான திருமண பரிசில்களை அமேசான், இக்மன், டராஸ் போன்ற ஒன்லைன் சேவைகள் ஊடாக தம்பதியினரின் வீட்டுக்கே பரிசில்களையும், பரிசுக்கான வவுச்சர்களையும் அனுப்பி வைத்தமை தான் இங்கே சிறப்பம்சம். இப்போது நல்லூர் ஆலயத் திருவிழாக்களையும் நேரலையாக வீட்டில் இருந்தே தரிசிக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இதுபோன்ற ஆலய நிகழ்வுகள், திருப்பலி, விசேட வைபவங்கள், அலுவலக வேலை, பாடசாலை கல்வி மற்றும் பலவித மருத்துவ ஆலோசனைகள் கூட ஒன்லைன் ஊடாக நடைபெறும் இந்தக் காலத்தில் ஏன் இன்னமும் பழைய பஞ்சாங்கமாக கொரோனாவை கூவி அழைக்கின்றோம்?

**கொஞ்சம் மாத்தி யோசிப்போமா?**

---

## இலங்கையின் தேசிய சின்னங்கள்

1. இலங்கையின் தேசிய மரம் – நாகமரம்
2. இலங்கையின் தேசியப் பறவை – காட்டுக்கோழி
3. இலங்கையின் தேசிய மிருகம் – யானை
4. இலங்கையின் தேசிய மலர் – நீலஅல்லி





## இலங்கையிலுள்ள 9 மாகாணங்கள்

வடக்கு மாகாணம்
கிழக்கு மாகாணம்
வடமத்திய மாகாணம்
வடமேல் மாகாணம்
மத்திய மாகாணம்
சப்ரகமுவ மாகாணம்
ஊவா மாகாணம்
தென் மாகாணம்
மேல் மாகாணம்



## வழிகாட்டுவோம்







## எது மகிழ்ச்சி?

கண் பார்வை இல்லாத சிறுவன் ஒருவன் வீதியில் உள்ள படிக்கட்டு ஒன்றில் அமர்ந்து யாசகம் பெற்றுக் கொண்டிருந்தான். அவன் அருகே "நான் குருடன், எனக்கு உதவுங்கள்" என்ற வாசகம் எழுதப்பட்ட பலகை ஒன்றும் காசு போடுவதற்கான பாத்திரம் ஒன்றும் பக்கத்தில் வைக்கப்பட்டிருந்தது.

அவ்வழியே செல்வோர் எவரும் அவனுக்கு பெரிதாக உதவியதாக தெரியவில்லை. பாத்திரத்தில் சில்லறைகள் குறைவாகவே விழுந்த வண்ணம் இருந்தன. அந்த வழியை கடந்த பெரியவர் ஒருவர் சிறுவனுக்கு உதவி செய்ய முடிவு செய்தார்.

தனது பையிலிருந்த இருந்து சில சில்லறைக் காசுகளை எடுத்து அந்தப் பாத்திரத்தில் இட்டார்.

பின், அருகில் இருந்த பலகையைப் பார்த்தார். இரண்டு நிமிடங்கள் சிந்தித்து விட்டு, பலகையிலுள்ள வாசகத்தை மாற்றி வேறொரு வாசகத்தை எழுதிவிட்டு சென்றுவிட்டார்.

அவர் சென்ற சிறிது நேரத்திலேயே பாத்திரம் சில்லறைகளால் நிரம்பத் தொடங்கியது. சிறுவனுக்கோ ஆச்சரியம் தாங்க முடியவில்லை.

வாசகத்தை மாற்றி அமைத்த அந்த பெரியவர், ஏதேனும் மாற்றம் உண்டா? என்று பார்க்க மீண்டும் அவ்விடத்துக்கு வந்தார். அவர் எதிர்பார்த்தது போலவே பாத்திரம் சில்லறைகளால் நிரம்பி இருந்தது. சிறுவன் அவரின் கால் தடத்தின் ஓசையை வைத்து அவரைக் கண்டுகொண்டான். "நீங்கள் தானே முன்பு வந்து இந்த பலகையிலுள்ள வாசகத்தை மாற்றி எழுதினீர்கள். அதில் என்ன எழுதி விட்டு சென்றீர்கள்? இப்போது நிறைய பேர் உதவுகின்றார்களே காரணம் என்ன?" என்றான்.

அவர் அதற்கு "இன்று மிகவும் அழகான நாள், அதை என்னால் பார்க்க முடியல்லை" என்று எழுதினேன் எனக் கூறினார்.

இரண்டு வாசகங்களுமே சிறுவன் குருடன் என்பதைத் தான் குறிப்பிடுகின்றன. ஆனால், முதல் வாசகம் சிறுவன் பார்வை இல்லாதவன் என்று மட்டுமே சொல்கிறது. இரண்டாம் வாசகம் நாம் அனைவருக்கும் பார்வை இருப்பதை நினைவுபடுத்துகிறது. அவனிடம் இல்லாத ஒன்று எம்மிடம் இருப்பதை கண்டதும் மகிழ்ச்சியில் நிறைய உள்ளங்கள் அவனுக்கு உதவின.

## பிஞ்சு தூரிகைகள்





கேதீசன் அக்ஷிதா,
தரம் –03
சுண்டுக்குழி மகளிர் கல்லூரி.





ஜெ.அனுசாந்,
தரம் –05
யாழ் இந்து ஆரம்பப் பாடசாலை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜே.ஆர்.ஜெயவர்த்தனவும் தமிழர்களுக்கு எதிரான ஜூலை 1983 வன்முறையும்



ஆங்கிலத்தில்: டி.பி.எஸ்.ஜெயராஜ்
தமிழில் : பாலன்

**ஜூலை 24, 1983**

தமிழர்களுக்கு எதிரான நாசகாரத்தனமான வன்செயல்கள் யாழ்ப்பாணத்தில் அதிகாலை வேளையில் தொடங்கிய தினம். அன்றைய தினமே மாலையில் அந்த வன்செயல்கள் தலைநகர் கொழும்புக்கு பரவத்தொடங்கின. அடுத்துவந்த நாள்களில் நாட்டின் ஏனைய பகுதிகளுக்கும் அது பரவியது. ' கறுப்பு ஜூலை' என்று வரலாற்றில் பொறிக்கப்பட்டுவிட்ட அந்த நாள்களின் 38 ஆவது வருட நிறைவு 1983 ஜூலையில் இலங்கையில் வாழ்ந்த தமிழர்கள் மத்தியில் மோசமான நினைவுகளை மீட்கிறது.

ஒருவார காலமாக தமிழர்களுக்கு எதிராக கட்டவிழ்த்துவிடப்பட்ட வன்செயல்களில் 4000 க்கும் அதிகமான தமிழர்களும் தமிழர்கள் என்று தவறாக கருதப்பட்ட முஸ்லிம்களும் கொல்லப்பட்டனர். ஆயிரக்கணக்கானவர்கள் காயமடைந்தனர். அவர்களில் சிலர் வைத்தியசாலைகளில் வைத்து கொல்லப்பட்டனர். அந்த வன்செயல்களின் விளைவாக 3 இலட்சம் வரையானவர்கள் தங்கள் வீடு.வாசல்களை இழந்து இடம்பெயர்ந்தார்கள். இவர்களில் சுமார் ஒரு இலட்சத்து 30 ஆயிரம் பேர் தற்காலிக அகதி முகாம்களில் தங்க வைக்கப்பட்டனர். தொழிற்சாலைகள் தொடங்கி சிறிய கடைகள் வரை 2500 க்கும் அதிகமான வர்த்தக நிறுவனங்கள் சேதமாக்கப்பட்டன அல்லது நிர்மூலஞ்செய்யப்பட்டன. சேதமாக்கப்பட்ட அல்லது நிர்மூலஞ்செய்யப்பட்ட வீடுகள், குடியிருப்புகள் மற்றும் வாகனங்களின் எண்ணிக்கை இன்னும் சரியாக மதிப்பிடப்படவில்லை.

தமிழர்களுக்கு எதிரான 1983 ஜூலை வன்செயல்கள் தமிழர்களுக்கு எதிரான சிங்கள மக்களின் ஒரு கிளர்ச்சி அல்ல. அந்த வன்செயல்கள் வெடிப்பதற்கு முன்னதாக தமிழர்கள் மீதும் அவர்களின் சொத்துக்கள் மீதும் பரந்தளவில் வன்செயல்களைக் கட்டவிழ்த்துவிடுவதற்கு சதித்திட்டமொன்று தீட்டப்பட்டிருந்தது. அத்தகைய வன்செயல்களைக் கட்டவிழ்த்துவிடுவதற்கு சாட்டாக ஒரு வலுவான சம்பவம் மாத்திரமே தேவைப்பட்டது. ஜூலை 23 சனிக்கிழமை வடக்கில் இராணுவ ரோந்து வாகனங்கள் மீது விடுதலை புலிகள் மறைந்திருந்து நடத்திய தாக்குதலில் 13 படையினர் கொல்லப்பட்ட சம்பவம் ஜூலை 24 தொடங்கி நாடுபூராவும் வன்செயல்கள் கட்டவிழ்த்துவிடப்படுவதற்கு சாட்டாகியது.

நடந்தது இதுதான். 1983 ஜூலை 23 சனிக்கிழமை இரவு மாதகல் இராணுவத்தளத்தில் இருந்து வழமையான ரோந்து வாகனங்கள் புறப்பட்டன. ஒரு ஜீப்பிலும் சிறிய ட்ரக்கிலும் 15 படையினர் இருந்தனர். அவர்கள் அனைவரும் ஸ்ரீலங்கா லைற் இன்ஃபான்றி படைப்பிரிவைச் சேர்ந்தவர்கள். அவர்களுக்கு தலைமைதாங்கியவர் கொழும்பு ஆனந்தா கல்லூரி பழைய மாணவரான 2வது லெப்ரினண்ட் வாஸ் குணவர்தன. அதேவேளை, விடுதலைப் புலிகள் இராணுவம் மீதான தாக்குதலை யாழ்ப்பாண நகரத்தில் இருந்து சுமார் 2 மைல்கள் தொலைவில் உள்ள திருநெல்வேலியில் நடத்துவதற்கு திட்டமிட்டிருந்தனர். புலிகளின் புதிய இராணுவ தளபதியாக நியமிக்கப்பட்டிருந்த கல்வியங்காட்டைச் சேர்ந்த சதாசிவம் செல்வநாயகம் என்ற செல்லக்கிளி தாக்குதலை பிரபாகரனின் ஆதரவுடன் திட்டமிட்டு மேற்பார்வை செய்தார். யாழ்.= பலாலி வீதியில் தபால்கட்டைச் சந்தியில் இருந்து தெற்கே 150 மீற்றர் தொலைவில் உள்ள இடமே தாக்குதலுக்கென்று தெரிவுசெய்யப்பட்டது. வீதி ஏற்கெனவே தொலைத்தொடர்பு கேபிளை புதைப்பதற்கென்று தோண்டப்பட்டிருந்தது. புலிகள் கண்ணிவெடிகளை புதைப்பதற்கு இது வசதியாக இருந்தது.

நான்கு கண்ணிவெடிகள் புதைக்கப்பட்டு அவை வீதியை எதிர்நோக்கியிருந்த தேநீர்க்கடை ஒன்றின் கூரைக்கு கீழ் மறைத்துவைக்கப்பட்டிருந்த வெடிக்கவைக்கும் கருவியுடன் இணைக்கப்பட்டன. சரியான நேரத்தில் கண்ணிவெடிகளை வெடிக்கவைப்பதற்காக செல்லக்கிளி கூரையில் மறைந்திருந்தார். ஏனைய புலிகள் வீதியின் இரு மருங்கிலும் இருந்த மதில்களுக்கு பின்னால் ஒளிந்திருந்தனர்.

விடுதலை புலிகளிடம் அந்த நேரத்தில் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் உட்பட 30 முழுநேர உறுப்பினர்களே இருந்தனர். இவர்களில் 19 பேர் திருநெல்வேலி தாக்குதலில் சம்பந்தப்பட்டிருந்தனர். பிரபாகரன், செல்லக்கிளி, புலேந்திரன், பொன்னம்மான், றெஜி, ரஞ்சன் லாலா, கிட்டு, சந்தோசம், விக்டர், அப்பையா, கணேஷ், லிங்கம், அல்பேர்ட், பஷீர், ராஜேஷ், சுப்பண்ணா, ராமு, ஞானம் மற்றும் ரகு (குண்டப்பா) ஆகியோரே அவர்கள். இரு வாகனங்கள் அண்மித்தபோது கண்ணிவெடிகள் வெடிக்கவைக்கப்பட்டன. அவை ஜீப்பின் வலது பக்கத்திலும் ஜீப்புக்கும் ட்ரக்குக்கும் இடையிலும் வெடித்தன. அதையடுத்து புலிகள் துப்பாக்கிப் பிரயோகம் செய்ய ஆரம்பித்ததுடன் கிரனேட்டுக்களையும் வீசினர். படையினரும் பதிலுக்கு தாக்குதல் நடத்தினர். இறுதியில் வாஸ் குணவர்த்தன உட்பட 13 படையினர் கொல்லப்பட்னர். கோப்ரல் பெரேரா, லான்ஸ் கோப்ரல் சுமதிபால என்ற இரு படையினரே உயிர்தப்பியவர்கள். புலிகள் தரப்பில் செல்லக்கிளி மாத்திரமே காயமடைந்தார்.

## படையினர் வெறியாட்டம்

புலிகளின் தாக்குதல் பற்றிய செய்தி தெரியவந்ததும் ஸ்ரீலங்கா லைற் இன்ஃபான்றி படைப்பிரிவைச்சேர்ந்த படையினர் வெறியாட்டத்தில் இறங்கினர். அவர்களின் கட்டளை அதிகாரி லெப்.கேணல் உபாலி தர்மரத்ன படையினரை கட்டுப்படுத்த விரும்பாமல் அல்லது இயலாமல் இருந்தார். யாழ்ப்பாணம் முழுவதற்குமான தளபதி பிரிகேடியர் லைல் பல்தசாரும் கூட தனது அதிகாரத்தை செலுத்த இயலாதவராகவோ அல்லது தனது துருப்புகள் மத்தியில் ஒழுங்கு கட்டுப்பாட்டை நிலைநிறுத்த முடியாதவராகவோ இருந்தார்.

சீற்றங்கொண்ட படையினர் கட்டவிழ்த்துவிட்ட வன்செயல்களில் திருநெல்வேலியிலும் சூழவுள்ள பகுதிகளிலும் 51 குடிமக்கள் கொல்லப்பட்னர். அவர்களில் நான் நன்கறிந்த பல்கலைக்கழக விரிவுரையாளர் கலா பரமேஸ்வரனும் ஒருவர். ஏழு பயணிகளுடன் வந்த மினிவான் ஒன்று இடைமறிக்கப்பட்டு சாரதி உட்பட எட்டுப்பேரும் நிரையாக நிற்கவைக்கப்பட்டு சுட்டுக்கொல்லப்பட்டனர். எனது நண்பரும் 'மனிதன்' என்ற சஞ்சிகையின் ஆசிரியரும் மனித உரிமைகள் செயற்பாட்டாளருமான விமலதாசனும் ஒருவர். இந்த சம்பவங்கள் எல்லாவற்றையும் அடுத்து இராணுவ தளபதி ஜெனரல் திஸ்ஸ 'புள்' வீரதுங்க லைற் இன்ஃபான்றி படைப்பிரிவை யாழ்ப்பாணத்தில் இருந்து இடமாற்றினார். லெப்.கேணல் தர்மரத்னவுக்கு பதிலாக லெப்.கேணல் ஏ.எம்.யூ.செனவிரத்ன நியமிக்கப்பட்டார்.

ஜே.ஆர்.ஜெயவர்தன தலைமையிலான ஐக்கிய தேசிய கட்சி அரசாங்கம் புலிகளினால் கொல்லப்பட்ட 13 படையினருக்கும் ஒரே நேரத்தில் இறுதிச்சடங்கை கனத்தையில் நடத்தியது. ஜூலை 24 ஞாயிற்றுக்கிழமை கனத்தையில் பெருமளவில் மக்கள் கூடினர். பலர் அரசாங்க வாகனங்களில் அங்கு கொண்டுவரப்பட்னர். மாலையானதும் நிலைவரம் வன்முறையாக மாறத் தொங்கியது. கனத்தையில் இருந்து கும்பல்கள் பொரளை மற்றும் திம்பிரிகஸ்யாய பக்கமாக நகர்ந்தது. தமிழர்களின் வீடுகளும் வர்த்தக நிறுவனங்களும் தாக்கப்பட்டு தீவைக்கப்பட்டன. எசல போயா முழுமதி வானத்தில் பிரகாசமாக தோன்றிக்கொண்டிருக்க தமிழர்களின் நிறுவனங்களில் இருந்து புகைமண்டலம் வான் நோக்கி கிளம்பிக்கொண்டிருந்தது.

### "சண்டே சில் மண்டே கில்"

மறுநாள் ஜூலை 25 தமிழர்களுக்கு எதிரான வன்செயல்கள் காட்டுத் தீ போன்று பரவின. இந்த வன்செயல்களை மலையக தோட்டத்தொழிலாளர்களின் தலைவர் சௌமியமூர்த்தி தொண்டமான் " சண்டே சில், மண்டே கில்" என்று பின்னர் வர்ணித்தார். ஞாயிற்றுக்கிழமை போயாதினத்தன்று தொடங்கிய வன்செயல்கள் மறுநாள் திங்கட்கிழமை நாடெங்கும் பரவிய காரணத்தாலேயே அவர் அவ்வாறு கூறினார்.

ஊரடங்கு உத்தரவை பிறப்பிக்குமாறு அன்றைய பொலிஸ்மா அதிபர் ருத்ரா ராஜசிங்கம் திரும்பத்திரும்பக் கேட்டபோதிலும், ஜனாதிபதி ஜெயவர்த்தன திங்கட்கிழமை [illegible] அத்தகைய உத்தரவை பிறப்பிப்பதை தாமதித்தார். [illegible] இருந்ததாக கூறப்பட்ட போதிலும், மூன்று நாட்களுக்கு வன்செயல்கள் தொடர்ந்தன. அவை ஜூலை 27 ஒரு உச்சத்துக்கு வந்தன. இந்தியப் பிரதமர் இந்திரா காந்தி தனது வெளியுறவு அமைச்சர் பி.வி.நரசிம்மராவை கொழும்புக்கு விசேட தூதராக அனுப்பிய ஜூலை 28 வியாழக்கிழமை வன்செயல்கள் சற்று தணியத்தொடங்கின. ஜூலை 29 வெள்ளிக்கிழமை கொழும்புக்கு புலிகள் வந்துவிட்டார்கள் என்று பரவிய வதந்தியால் கொழும்பிலும் புறநகர்ப்பகுதிகளிலும் மக்கள் பீதியடைந்தார்கள். அந்த விதிவசமான " கொட்டி தவச" (புலி தினம்) அன்று பிற்பகல் தமிழர்களை மீண்டும் குண்டர்கள் கொலைசெய்தார்கள். புலிகள் கொழும்புக்கு வரவில்லை என்று உறுதியானதன் பின்னரும் கூட படுகொலைகள் தொடர்ந்தன. இறுதியாக, ஜூலை 30, 31 திகதிகளில் வன்செயல்கள் படிப்படியாக தணிந்தன. நிலைவரத்தை வழமைக்கு கொண்டுவருமாறு ஜெயவர்த்தன அரசாங்கத்தை சர்வதேச அபிப்பிராயங்களும் நெருக்குதல்களும் நிர்ப்பந்திக்க ஆரம்பித்த நிலையில் , ஒகஸ்ட் அளவில் வன்செயல்கள் முடிவுக்கு வந்தன.

### இந்திரா காந்தி நரசிம்மராவ்

பொதுவில் இந்தியாவும் குறிப்பாக பிரதமர் இந்திராவும் வகித்த பங்கு அந்த நேரத்தில் இலங்கையில் தமிழர்களுக்கு எதிரான வன்செயல்களை



கட்டுப்படுத்துவதில் முக்கியத்துவம் வாய்ந்தவையாக விளங்கின. தமிழ்நாட்டுக்கு வருவதற்கு ஏற்கெனவே திட்டமிட்டிருந்த இந்திரா அந்த விஜயத்தை ரத்து செய்தார். பதிலாக, ஜூலை 28 வியாழக்கிழமை காலை அவர் ஜனாதிபதி ஜெயவர்த்தனவுடன் தொலைபேசியில் தொடர்பு கொண்டதுடன் தனது வெளியுறவு அமைச்சர் நரசிம்மராவை மாலையில் தனது விசேட தூதுவராக கொழும்புக்கு அனுப்பிவைத்தார்.

நரசிம்மராவ் ஜனாதிபதி ஜெயவர்த்தன, பிரதமர் பிரேமதாச மற்றும் வெளியுறவு அமைச்சர் ஏ.சி.எஸ்.ஹமீது ஆகியோரைச் சந்தித்தார். எதிர்க்கட்சி தலைவர் அப்பாப்பிள்ளை அமிர்தலிங்கத்துடன் நரசிம்மராவ் தொலைபேசியில் தொடர்புகொண்டு பேசினார். அமைச்சர் தொண்டமானுடனும் அவர் "உத்தியோகபூர்வமற்ற" சந்திப்பொன்றை நடத்தினார். புதுடில்லிக்கு திரும்புவதற்கு முன்னதாக அவர் தமிழர்களுக்கு எதிரான வன்செயல்களை முடிவுக்கு கொண்டுவருவதற்கு இலங்கை பொலிசாரினாலும் பாதுகாப்பு படையினராலும் இயலாவிட்டால் இலங்கையில் சட்டம் ஒழுங்கை நிலைநிறுத்துவதற்கு இந்தி பாதுகாப்பு படையினரின் உதவி கொழும்புக்கு தேவையா என்று ஹமீதிடம் வினவினார். ராவ் புறப்பட்டுச் சென்றபிறகு நிலைவரத்தில் குறிப்பிடத்தக்க மாற்றத்தை காணக்கூடியதாகஇருந்தது. தமிழர்களுக்கு எதிரான

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திட்டமிட்ட வன்செயல்கள் தணியத்தொடங்கிய அதேவேளை, சட்டம், ஒழுங்கை நடைமுறைப்படுத்தும் இயந்திரம் அதிச யிக்கத்தக்க வகையில் மீண்டும் சுறுசுறுப்பாக இயங்கச்செய் யப்பட்டது. கறுப்பு ஜூலை வன்செயல்கள் யாழ்ப்பாணத்தில் இராணுவத்தினர் மீது புலிகள் நடத்திய தாக்குதலுக்கு சிங் கள மக்களின் தன்னியல்பான எதிர்வினை என்று விளக்க மளிக்க ஜனாதிபதி ஜூனியஸ் ரிச்சர்ட் ஜெயவர்தனவும் ஆளும் ஐக்கிய தேசிய கட்சியின் ஏனைய உறுப்பினர்களும் முயன்றார்கள்.' வன்செயலுக்காக சிங்கள மக்கள் ஜனாதிபதி யினாலும் அவரது அரசாங்கத்தினாலும் கூட்டாக குற்றஞ்சாட்டப் பட்டார்கள். அரசாங்கம் செய்த தவறுகளில் இருந்து கவனத்தை திசைதிருப்புவதற்காகவே அவ்வாறு செய்யப்பட்டது".

## சிங்கள மக்களை குற்றஞ்சாட்டுதல்

ஆனால், 83 கறுப்பு ஜூலையின் இருண்ட நிகழ்வுகளுக்காக சிங்கள மக்களை ஒட்டுமொத்தமாக சிங்கள மக்களை குற் றஞ்சாட்டுவதில் பெரியதொரு தவறு இருக்கிறது. வன்செயல் களில் ஈடுபட்வர்கள் சிங்களவர்கள் என்பதும் பாதிக்கப்பட்ட வர்கள் தமிழர்கள் என்பதும் சரியானதே. ஆனால், இது எந்த வகையிலும் தமிழர்களுக்கு எதிரான முழு சிங்கள இனத்தி னதும் கிளர்ச்சி என்றாகிவிடாது. அவ்வாறு நடந்திருந்தால், சொற்ப எண்ணிக்கையான தமிழர்களே விட்டுவைக்கப்பட்டி ருப்பர்.

நடந்தேறிய சம்பவங்களைக் கண்டு பல சிங்கள மக்கள் கிலி கொண்டார்கள். அவர்கள் எதையும் செய்யமுடியாத வெறும் பார்வையாளர்களாக இருந்த அதேவேளை, அவர்களது இனத்தைச் சேர்ந்த சிறுபான்மையானவர்கள் சிங்கள இனத் தின் பேரில் அனர்த்தங்களை விளைவித்தார்கள். வன்செ யல்களில் பங்கேற்காத மக்களில் ஒரு பிரிவினர் மௌனம் சாதித்ததன் மூலமாக தமிழர்களுக்கு எதிரான வன்செயல் களை ஆதரித்திருக்கக்கூடும். ஆனால், சிங்கள மக்களில் பெரும்பான்மையானவர்கள் நடந்தவற்றுக்கு எதிரானவர்க ளாகவே இருந்தனர். தங்களுக்கு வரக்கூடிய ஆபத்தையும் பொருட்படுத்தாமல் பெரும் எண்ணிக்கையான சிங்களவர்கள் தமிழர்களைப் பாதுகாத்தார்கள் என்பதை மறக்கமுடியாது. அந்த இருண்ட நாள்களில் பல முஸ்லிம்களும் கூட, தமிழ் அயலவர்களுக்கு புகலிடம் அளித்தார்கள். எனது சொந்த குடும்ப உறுப்பினர்களுக்கும் பல உறவினர்கள் மற்றும் நண்பர்களுக்கும் பண்பான சிங்கள, முஸ்லிம் மக்கள் அந்த குழப்பகரமான நாள்களில் உதவினார்கள். 1983 ஜூலை தமிழர்களுக்கு எதிரான வன் செயல்களின்போது ஜனாதிபதி ஜெயவர்த்தனவின் நடத்தை யும் அவர் வகித்த பங்கும் பரவலாக விமர் சனத்துக்குள்ளானது. உண்மையில், நிலைவரம் பாரதூரமானதாகப் போவ தற்கு ஜெயவர்த்தனவே பொறுப்பு என்று பலரும் கண்டித்தார்கள். கொழும்பில் கனத்தையில் 13 படையினருக்கும் ஒன் றாக இறுதிக்கிரியைகளை நடத்துவதற்கு எடுத்த தீர்மானமும் ஊரடங்கை பிறப்பிப் பதில் காட்டிய நீண்ட தாமதமும் நிலைவ ரத்தை மோசமாக்கின. 1983 ஜூலையில் ஜெயவர்த்தன செய்தவற்றையும் செய்யத் தவறியவற்றையும் பற்றிய நுண்ணோக்கு ஒன்றை தருவதற்காக முன்னாள் பிரதி பொலிஸ்மா அதிபர் இராமச்சந்திரா சுந்தரலிங்கம் எனக்கு அனுப்பிய மின்னஞ்சல் ஒன்றை தருகிறேன்.





## பிரதி பொலிஸ்மா அதிபர் சுந்தரலிங்கம்

சுந்தா என்று அறியப்பட்ட சுந்தரலிங்கம் இலங்கையில் எனது தலைமுறை பத்திரிகையாளர்களின் மிகவும் நல்ல நண்பர். சட்டம், ஒழுங்கு பற்றிய நல்ல செய்தி ஒன்று எமக்கு வேண்டுமென்றால், சுந்தரலிங்கத்துடன் தொடர்புகொண் டால் போதும். 83 ஜூலை தமிழர்களுக்கு எதிரான வன்செ யல்களின்போது பல பிராந்தியங்களுக்கான சிரேஷ்ட பிரதி பொலிஸ்மா அதிபராக அவர் பணியாற்றினார். பிறகு சுந்தா பரிஸில் இன்டர்போலில் பதவியொன்றைப் பெற்று அங்கு பணியாற்றுவதற்கு போனார். போதைப்பொருள் வர்த்த கத்தை முறியடிப்பதில் பெரும் நிபுணராக அவர் விளங்கி னார். ஓய்வு பெற்ற பிறகு தமிழ்நாட்டின் சென்னையில் அவர் வசித்தார். 2018 டிசம்பரில் மரணமடையும் வரை அவருக்கும் எனக்கும் இடையே கிரமமான ஈ மெயில் தொடர்பு இருந்து வந்தது. இந்த கட்டுரைக்காக நான் ஆய்வு செய்துகொண் டிருந்தபோது சுந்தா எனக்கு 2017 டிசம்பரில் அனுப்பிய ஈ மெயில் ஒன்று அகப்பட்டது. 1983 ஜூலை வன்செயல்கள் பற்றி என்னுடன் பேசுவதற்கு விரும்பிய அவர் வீட்டு தொலை பேசியில் என்னுடன் தொடர்புகொண்டார். நான் வீட்டில் அந்த நேரத்தில் இருக்கவில்லை என்பதால் உடனடியாக பதிலளிக் கமுடியவில்லை. அமைதியிழந்த சுந்தா தான் சொல்லவிரும் பியவற்றை சுருக்கமாக ஈ மெயிலில் அனுப்பினார். ஆனால், பிறகு நாம் தொலைபேசியில் உரையாடினோம். ஈ மெயிலில் தெரிவிக்கப்பட்டிருந்தவற்றை பற்றி விரிவாக பேசினோம். அதனால், அந்த ஈ மெயிலை இங்கே தருவது அப்போது நடந்தவை பற்றி கூடுதல் தெளிவைக் கொடுக்கும் என்று நம்புகிறேன்.

## சுந்தாவின் ஈ மெயில்
## அன்புடன் டி.பி.எஸ்ஸுக்கு,

தொலைபேசியில் தொடர்புகொள்ள தவறும் பட்சத்தில், இலங் கையின் வரலாற்றில் 1983 ஜூலையில் நடந்தவை பற்றி சுருக்கமாக உண்மைகளை கூற விரும்புகிறேன்.

(1) 1983 ஜூலை 23 திருநெல்வேலியில் புலிகள் மறைந் திருந்து நடத்திய தாக்குதலில் 13 படையினர் கொல்லப் பட்டனர். இராணுவ தலைமையகத்துக்கு அறிவிக்கப் பட்டது. ஜனாதிபதி ஜே.ஆர். ஜெனரல் ஆட்டிக்கல ஊடாக இராணுவ தளபதி வீரதுங்கவை உனடியாக யாழ்ப்பாணத்துக்கு செல்லுமாறு உத்தரவிட்டார்.

(2) வடமாகாணத்துக்கு பொறுப்பாக இருந்த பிரதி பொலிஸ்மா அதிபர் ராஜகுரு பொலிஸ்மா அதிபர் ருத்ரா இராஜசிங்கத்துடனும் என்னுடனும் தொலைபே சியில் தொடர்புகொண்டு இராணுவம் வெறியாட்டத்தில் இறங்கியிருப்பதாகவும் பொலிசாரால் ஒன்றும் செய்ய முடியவில்லை என்று கூறினார்.

(3) யாழ்ப்பாணத்திலும் மற்றைய பகுதிகளிலும் நடப்ப வற்றை கண்காணிக்க அங்கு சென்ற இராணுவ தள பதியை தவிர, படைகளின் பிரதானிகள், கடற்படை, விமானப்படை தளபதிகள் எல்லோரும் பாதுகாப்புச் சபை கூட்டத்தில் கலந்துகொண்டனர். வடமாகாண பிரதி பொலிஸ் மா அதிபர் ராஜகுருவை மேற்பார்வை செய்யும் சிரேஷ்ட பிரதி பொலிஸ் மா அதிபர் என்பதால் நானும் அந்த கூட்டத்தில் பங்கேற்கவேண்டுமென்று பொலிஸ் மா அதிபர இராஜசிங்கம் விரும்பினார்.

(4) ஜெனரல் ஆட்டிக்கல இராணுவ தளபதி வீரதுங்கவுடன் பல மணி நேர (பிற்பகல் 3/மாலை 7) கலந்தாலோச னையில் ஈடுபட்டார். யாழ்ப்பாணத்தில் இராணுவம் கிளர்ந்தெழுந்து பலரைக் காயப்படுத்தியும் சொத்துக்களை சேதப் படுத்திக்கொண்டும் இருந்த நிலையில் யாழ். நிலைவரம் மோசமாகிக்கொண் டிருந்தது. தளபதி வீரதுங்கவினால் நிலைவரத்தை கட்டுப்படுத்த எதையும் செய்யமுடியவில்லை. கள நிலை வரத்தை ஆட்டிக்கல ஜே.ஆருக்கு அறி வித்தார். வழமையாக போர்ச் சூழ்நிலை களில் நடப்பதைப் போன்று படையின ரின் சடலங்களை யாழ்ப்பாணத்தி லேயே புதைக்குமாறு ஆட்டிக்கலவிடம் ஜே.ஆர். கூறினார். இந்தச் செய்தி வீர துங்கவிடம் கூறப்பட்டபோது " சேர் நானும் அங்கேயே புதைக்கப்படுவேன். சடலங்களை படையினரின் சொந்த ஊர்களுக்கு அனுப்புவதற்கு ஒழுங்கு களைச் செய்யுங்கள் " என்று அவர் உடனடியாக பதிலளித்தார்.

(5) சடலங்களை கட்டுநாயக்க விமா னப்படை தளத்துக்கு விமானத்தில் கொண்டுவந்து பதப்படுத்தியபின்னர் 13 சடலங்களையும் 13 ஊர்களுக்கு அனுப்புவதென்று பாதுகாப்பு சபை முடிவெடுக்கிறது. 13 குளிரூட்டப்பட்ட அம்புலன்ஸ் வண்டிகளை தயார் செய்யு மாறு பொலிசாருக்கு பணிப்புரை விடுக்கப்பட்டது. ஆட்டிக்கலவுடன் கலந்துபேசி ஜே.ஆர். இந்த ஏற்பாடு களை அங்கீகரித்தார். இவை எல்லாவற்றுக்கும் நான் கண்கண்ட சாட்சி.

(6) அம்புலன்ஸ் ஏற்பாட்டை ரத்துச் செய்யுமாறும் சடலங் களை கனத்தையில் புதைப்பதற்காக இரத்மலா னைக்கு விமானத்தில் கொண்டுவருமாறும் பொலிஸ் தலைமையகத்துக்கு பணிப்புரை கிடைக்கிறது. அதே வேளை, கொழும்பில் பதற்றம் அதிகரிக்கிறது. கனத்தை நோக்கி மக்கள் கூட்டம் கூட்ட மாக செல்லத்தொடங்கினார்கள்.

(7) ருத்ரா இராஜசிங்கமும் பிரதி பொலிஸ் மா அதிபர் ஏரனெஸ்ட் பெரேராவும் கனத்தைக்கு விஜயம் செய்தார் கள். எங்கு பார்த்தாலும் பதற்றமா கவே இருந்தது. நிலைவரம் பாரது ரமானது [illegible] உணர்ந்துகொள்ளக்கூடியதாக இருந் தது. ஜனாதிபதியை உடனடியாக சந்தித்து இரவு 9 மணியளவில் ஊரடங்கை பிறப்பிப்பதற்கு ஏற்பாடு செய்யுமாறும் அல்லாவிட்டால் நிலைவரம் கட்டுமீறிப் போய்விடும் என்றும் பிரதி பொலிஸ்மா அதிபர் பெரே ராவும் நானும் இராஜசிங்கத்துக்கு கடுமையாக ஆலோ சனை கூறினோம். பொலிஸ்மா அதிபர் கனத்தையில் இருந்து வார்ட் பிளேஸுக்கு ஜே.ஆரைச் சந்திக்க புறப்பட்டார். மறுநாள் மாலை வரை ஊரடங்கு பிறப் பிக்கப்படவில்லை. ஆனால் அந்த நேரமளவில் தமி ழர்களுக்கும் அவர்களது சொத்துக்களுக்கும் பாரதூ ரமான அழிவு ஏற்படுத்தப்பட்டுவிட்டது. இந்த நாட்டின் வரலாற்றில் இது மிகவும் மோசமானதாக இருந்தது. இந்த நிலைவரத்தை ஜே.ஆரினால் தவிர்த்திருக்கமு டியும். ஆனால், ஊரடங்கை பிறப்பிக்க அவர் தவறி னார். கனத்தையில் சடலங்களை ஒன்றாக புதைப்பதற் கான தீர்மானத்தை எடுத்தவர் யார்? இது மிகப்பெரியதொரு கேள்வி. கனத்தையில் இறுதிச்சடங் குகளை நடத்தவேண்டுமென்று சிறில் மத்தியூவே வலியுறுத்தியதாக அமைச்சர் தொண்டமான் என்னிடம் கூறினார். இதெல்லாம் இப்போது வரலாறாகிவிட்டது".



1983 ஜூலை வன்செயல்கள் அடிப்படையில் திட்டமிடப்பட் டவை என்பது முக்கியமாக கவனிக்கப்படவேண்டியதாகும். பலர் தாங்களாகவே வன்செயல்களில் ஈடுபட்டிருக்கக்கூடும். ஆனால், வெவ்வேறு இடங்களில் மையக்குழுக்கள் வன்செ யல்களை திட்டமிட்டு செய்தன. இந்த குழுக்களுடன் மற்றை யவர்கள் இணைந்துகொள்வதே கும்பல் வன்முறைகளின் பொதுவான அம்சமாகும். குழுக்கள் சட்டத்துக்கு பயப்படாமல் செயற்பட்டன. அப்போது அதிகாரத்தில் இருந்த ஐ.தே.க. அர சாங்கத்தின் முக்கியமான உறுப்பினர்களின் பாதுகாப்பு இக்குழுக்களுக்கு இருந்தது.

வன்செயல் கும்பல்களிடம் தமிழர்களுக்கு சொந்தமான வீடு கள் மற்றும் வர்த்தக நிறுவனங்களின் பட்டியல்கள் இருந் தன. வீடுகளும் வியாபார நிறுவனங்களின் கட்டடங்களும் சிங்களவர்களுக்கு சொந்தமானவையாக இருந்தால், அவற் றில் வாடகைக்கு இருந்த தமிழர்களின் தளபாடங்களும் பொருட்களும் மாத்திரம் சேதப்படுத்தப்பட்டு தீவைக்கப்பட்டன. கட்டிங்கள் சேதப்படுத்தப்படவோ தீவைக்கப்படவோ இல்லை. பல கும்பல்களுக்கு ஐ.தே.க. வின் தொழிற்சங்கமான ஜாதிக சேவக சங்கமயவின் முக்கியஸ்தர்கள் தலைமைதாங்கினார் கள். ஐ.தே.க. வின் மாநகரசபைகளினதும் நகரசபைகளின தும் உறுப்பினர்களும் அவர்களின் குடும்ப உறுப்பினர்க ளும் வன்செயல்களில் ஈடுபட்டார்கள். ஐ.தே.க. வின் முக்கிய மான ஆதரவாளர்களும் அமைச்சர்களின் அடியாட்களும் சம்பந்தப்பட்டிருந்தார்கள். பல சந்தர்ப்பங்களில் வன்செயல் களில் ஈடுபட்டவர்களை கைது செய்யவேண்டாமென்று ஐ. தே.க. அரசியல்வாதிகள் பொலிசாருக்கு உத்தரவிட்டனர்.

பல சந்தர்ப்பங்களில் பெரும் எண்ணிக்கையான காடையர் களும் கும்பல்களும் அரசுக்கு சொந்தமான போக்குவரத்து சபை வாகனங்களிலும் கூட்டுத்தாபனங்களின் வாகனங்க ளிலும் கொண்டுவந்து இறக்கப்பட்டனர். வன்செயல்களில் ஈடுபட்டவர்களுக்கு உணவுப்பொதிகளும் மதுபானமும் திட்ட மிட்ட முறையில் விநியோகிக்கப்பட்டன.

ஷெல்டன் ரணராஜா மற்றும் ரேணுகா ஹேரத் ரணசிங்க போன்ற கண்ணியமான சில ஐ.தே.க. தலைவர்களின் வற் புறுத்தலில் கண்டியிலும் நுவரேலியாவிலும் காடையர்களை பொலிசார் கைதுசெய்து தடுத்துவைத்தபோது அவர்களை அமைச்சர்கள் சிறில் மத்தியூவும் காமினி திசாநாயக்கவும் விடுவித்தார்கள். வன்செயல்களில் சிறில் மத்தியூவினதும் அவரின் கையாட்களினதும் பங்கு நன்கு தெரிந்ததே. அவர் களில் சிலர் இன்னமும் அரசியலில் இருப்பதுடன் உயர் பதவி களையும் வகிக்கிறார்கள்.

(14ஆம் பக்கம் பார்க்க)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வைரஸ்+ விலையேற்றம்+ ஜெனிவா!

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பதை ஊடகவியலாளர்கள் சுட்டிக்காட்டியிருந்தார்கள். அதேபோல ருவிட்டரில் ஒரு சிங்கள ஊடகவியலாளர் மாத்தளை மாவட்டத்தைச் சேர்ந்த கைகாவல என்ற இடத்தில் சில கிலோமீற்றர் தொலைவுக்கு மக்கள் நீண்டவரிசையில் தடுப்பூசி பெறக் காத்திருக்கும் காணொலி ஒன்றைப் பதிவிட்டிருந்தார்.

அரசாங்கம் தடுப்பூசியை விரிவாக ஏற்றி முடிப்பதன் மூலம் நிலைமையை கட்டுக்குள் கொண்டு வரலாம் என்று நம்புகிறது. ஆனால் ராணன் எலிய போன்றவர்கள் கூறுகிறார்கள், " எவ்வளவு வேகமாக முயற்சித்தாலும் எவ்வளவு ராணுவத்தனமாக முன்னெடுத்தாலும் நாடு முழுவதும் தடுப்பூசி ஏற்றி முடிப்பதற்கு 2022 ஆம் ஆண்டின் முற்பகுதி வரை செல்லலாம்" என்று. இந்த இடைப்பட்ட காலகட்டத்துக்குள் வைரஸ் தொற்றும் சாவு வீதமும் அதிகரிக்கலாம் என்றும் அவர்கள் சுட்டிக்காட்டுகிறார்கள்.

ஒருபுறம் வைரஸ். இன்னொருபுறம் விலையேற்றம். நாட்டில் இப்போது டெல்டா திரிபு வைரசால் இறப்பவர் தொகை மட்டும் உயரவில்லை. விலைவாசியும் வைரஸ் தொற்றுக்கு நேர்விகிதமாக ஏறிக்கொண்டே போகிறது. சில மாதங்களுக்கு முன்பு இருந்த நிலைமைகளோடு ஒப்பிடுகையில் கிட்டத்தட்ட இரண்டரை மடங்கு விலை உயர்வு ஏற்பட்டிருப்பதாக பொதுவாக அவதானிக்கப்பட்டுள்ளது. பால்மாவுக்கும் சமையல் எரிவாயுவுக்காகவும் சனங்கள் அலைகிறார்கள். சீனி, மைசூர் பருப்பு போன்றவற்றின் மொத்த விற்பனை விலை கடந்தவாரம் பத்து ரூபாவால் அதிகரித்திருக்கிறது. மாத்தறை, களுத்துறை, ஹொரணை ஆகிய பகுதிகளில் எரிவாயுவைப் பெறுவதற்காக சனங்கள் நீண்ட வரிசையில் காத்திருந்தனர். ஒருபுறம் எரிவாயுவுக்காக நீண்டவரிசை. இன்னொருபுறம் தடுப்பூசி பெறுவதற்காக மிக நீண்டவரிசை.

அரசாங்கத்தால் டெல்டா திரிபையும் கட்டுப்படுத்த முடியவில்லை, விலையேற்றத்தையும் கட்டுப்படுத்த முடியவில்லை. பொருள்கள் பதுக்கப்படுவதையும் கட்டுப்படுத்தமுடியவில்லை. இவ்வாறானதொரு பின்னணியில் அடுத்தமாதம் தொடங்கவிருக்கும் ஐ.நா. கூட்டத் தொடரில் இலங்கைக்கு எதிரான ஒரு செயலகம் உருவாக்கப்படவிருக்கிறது. கடந்த ஐ.நா. தீர்மானத்தின் பிரகாரம் உருவாக்கப்படவிருக்கும் இந்தக்கட்டமைப்பானது சாட்சிகளையும் சான்றுகளையும் திரட்டுவதற்கான செயலகம் என்று அழைக்கப்படும். அவ்வாறு ஒரு செயலகம் அமைக்கப்படுமாக இருந்தால் அது தென்னிலங்கையில் கொந்தளிப்பான ஒரு சூழ்நிலையை ஏற்படுத்தும். இலங்கை அரச படைகளுக்கு எதிராக எதிர்காலத்தில் வழக்குத் தொடர தேவையான சான்றுகளையும் சாட்சியங்களையும் சேகரிக்கும் ஒரு செயலகமாகவே அது பார்க்கப்படும். எனவே இப்போதுள்ள நிலைமைகளின் படி வைரஸ் , விலையேற்றம் என்பவற்றோடு ஐ.நா.வில் அடுத்த மாதம் உருவாக்கப்பட்டிருக்கும் செயலகத்தையும் அரசாங்கம் எதிர்கொள்ளவேண்டியுள்ளது.இதில் எது உடனடி ஆபத்து?

வைரஸ்தான். உடனடியாகக் காப்பாற்றப்பட வேண்டியது உயிர்களே. "பொருளாதாரம் சரிந்து விழுந்தால் அதைப் பிறகொருகாலம் கட்டியெழுப்பலாம். ஆனால் பெறுமதியான உயிர்களை இழந்தால் திரும்பப் பெறமுடியாது" என்று ரணில் விக்கிரமசிங்க கூறியிருக்கிறார். யுத்த வெற்றிகளுக்காக உயிர்கள் பறிக்கப்படுவதைக் குறித்துக் கவலைப்படாத ஒரு பாரம்பரியத்தைக் கொண்ட ஒரு நாடு இது. ஆனால் வைரஸும் யுத்தமும் ஒன்றல்ல என்பதை கடந்த சுமார் இருபது மாதங்கள் நிரூபித்திருக்கின்றன.

> ஆஸ்பத்திரிகள் கட்டப்பட்டிருப்பது வீதி விபத்துக்களை தடுப்பதற்காகவல்ல. மாறாக கவனமாக வாகனம் செலுத்துவதன் மூலம்தான் வீதி விபத்தை தடுக்கலாம். மக்களுடைய நடத்தைதான் பெருந்தொற்று நோயின் போக்கை தீர்மானிக்கிறது.



டெல்லியைச் சேர்ந்த மருத்துவர் உமா வைத்தியநாதன் கூறுவது போல "இந்த உலகில் எந்தஒரு நாடும் படுக்கைகளை, ஒட்சிசன் வென்டிலேட்டர்களை ,தீவிர சிகிச்சை விடுதிகளை அதிகரிப்பதன் மூலம் கொவிட்-19 ஐக் கட்டுப்படுத்தக்கூடியதாக இருக்கும் என்றில்லை.இது தற்காலிகமான சாத்தியமற்ற அதிகம் செலவு கூடிய ஒருதீர்வு. சுகாதாரப் பராமரிப்பு, உட்கட்டமைப்புத்தான் அதற்குரிய பதில் என்றால் வளர்ச்சியடைந்த மேற்கத்திய நாடுகளில் சாவுக்கேதான அதிகரித்த வைரஸ் தொற்று ஏற்பட்டிருக்க முடியாது. விரைவான; செலவு குறைந்த; நீண்டு நிலைத்திருக்கக்கூடிய தீர்வு எதுவென்றால் அது சமூக இடைவெளியை பேணுவதும், மாஸ்க் அணிவதும், நோய்த் தொற்றை தடுக்கும் மிகவும் உயர்தரத்திலான சுகாதார நடைமுறைகளை கடைப்பிடிப்பது தான்.......ஞாபகம் வைத்துக் கொள்ளுங்கள் ஆஸ்பத்திரிகள் கட்டப்பட்டிருப்பது வீதி விபத்துக்களை தடுப்பதற்காகவல்ல. மாறாக கவனமாக வாகனம் செலுத்துவதன் மூலம்தான் வீதி விபத்தை தடுக்கலாம். மக்களுடைய நடத்தைதான் பெருந்தொற்று நோயின் போக்கை தீர்மானிக்கிறது." ■





# ஜனாதிபதி கோத்தாபயவுக்கு...

**ஐபோவன் , வணக்கம்.**

ஊர் உலகத்தைப் பாத்த வெப்பியாரத்திலை இந்தக் கடுதாசியை எழுதுறபடியாலை, ஏதேன் காரசாரமா இருந்தால் மன்னிச்சுக் கொள்ளுங்கோ.

இப்ப கொரோனாவால சாகிற ஆக்களின்ர தொகை நூறு, நூற்றியம்பது எண்டு கூடிக்கொண்டே போகுது. அந்தச் சாவுச் செய்தியளைக் கேக்கேக்க பேதி இல்லாமலே வயிற்றோட்டமாக் கிடக்கு. இதுக்கை மருத்துவத்துறையிலை ஒரு விண்ணன் எண்டு சொல்லக் கூடிய பேராசிரியர் சுனேத் அகம்பொடி "நாட்டிலை உடனடியாக ஊரடங்கைப் போடுங்கோ" எண்டு அழாத குறையாக் கத்துறார்.நிலைமை இப்பிடி மிக மிக மோசமாப் போய்க்கொண்டிருக்கிது. ஆனால் அரசாங்கம் ஒண்டுக்கும் அசையிறதா இல்லை எண்டு எல்லாரும் கதைக்கினம்.

இதெல்லாம் உங்களுக்குக் கட்டாயம் தெரிஞ்சிருக்கும். ஏனெண்டால் வட மாகாணத்திலை உக்கிப் போன குண்டைக் கண்டாலே உடனடியா உங்களுக்கு அறிவிக்கிற புலனாய்வுப் படையைப் பக்கத்திலை வச்சிருக்கிறியள். அவை இதையும் அப்பப்ப வடிவா ஒண்டும் விடாமல் அறிவிப்பினம். ஆனபடியாலை நீங்கள் இத்தனை அழிவுகளையும் பாத்துக் கொண்டு ஏன் ஒண்டுக்கும் மசியாமல் இருக்கிறியள்? எனக்கு அதுதான் விளங்கேல்லை. அதால ஒரு பேராசிரியரிட்டை என்ரை சந்தேகத்தைக் கேட்டன். அவர்தான் எனக்குச் சரியான தகவல்களைச் சொன்னார்.

"நாட்டிலை பொருளாதார நெருக்கடி இருக்கு. அதாலை அரசாங்கத்துக்கு தலையிடி கனக்க. அதாலை கொரோனா பற்றி ஒரு முடிவை எடுக்க அவை சிரமப்படிகினம். முன்னம் பல தலையிடியளைத் தீர்க்க துறைமுகப் பக்கத்தை வித்த மாதிரி இப்ப முழு இலங்கையையும் வித்தால்தான் அவை இப்ப எதிர்கொள்ளுற நெருக்கடியளிலை இருந்து வெளியாலை வரலாம். அதுக்கு எதிர்க் கட்சியள் விடுமோ. இப்பவே ஐயோ பைய்யோ எண்டு கத்திக் குளறி ராஜபக்ச ஆட்சிக்கு ஆப்பு வைக்க வெளிக்கிடுறாங்கள் அதை விடுவங்களோ?" - எண்டு எனக்கு ஒரு சரியான விளக்கத்தைத் தந்தார்.

இப்பிடியான தருணத்திலை பொருளாதார நெருக்கடி வாறதைத் தடுக்கேலாது. ஆனால் நாட்டிலை சனமெல்லாம் செத்து ஓய்ஞ்ச பிறகு பொருளாதாரம் ஆருக்கு? மருத்துவத்துறையிலை இருக்கிறவை சரியாக குழம்பிக்கொண்டு இருக்கினம்.அதுவும் தாதிமார் "இந்தா போராட்டத்திலை குதிக்கப்போறம்" எண்டு விடாடிப்பிடியா நிக்கிறதாக் கேள்வி.அவையளிலை இதுவரை ஆயிரம் பேருக்குக் கொரோனா தொத்திவிட்டுதாம். அதாலை என்ரை அயலிலை இருக்கிற ஒரு நேர்ஸ் பெடிச்சியை வேலையை விடு எண்டு அவவின்ர புருசன் விடாப்பிடியா நிக்கிறான். பி.எச்.ஐமாரும் இதே கொண்டிசன்தான். நோய் வந்தவையின்ரை வீட்டு வாசல் கேற்றுகளிலை தனிமைப்படுத்தல் நோட்டீஸை ஒட்டியே தங்கடை கை புண்ணாப் போச்சுதெண்டு அவை புலம்புகினம். அதுகும் நோய் தொற்றினவையை இரவு, பகல் எண்டு பாராமல் ஏத்தி இறக்கிறதாலை தங்களுக்கு ஓய்வு ஒழிச்சல் இல்லை எண்டு அம்புலன்ஸ் காரரும் ஒப்பாரி வைக்கினம். இப்படிக் கேவலப்படுகிறதைவிட வேலையை விட்டாலும் பரவாயில்லை எண்டது அவையின்ரை கருத்து.



**அவசரமா ஒரு கடுதாசி**

அதுக்கிடையிலை வீடுகளிலை தனிமைப்படுத்தலாம் எண்டு கொழும்பிலை இருந்து நீங்கள் சொல்லிப்போட்டு அதுக்குரிய அறிவுறுத்தல்களை 'எம்.ஓ.எச்'சுக்கு அனுப்பேல்லை. இது சனத்துக்குத் தெரியாது. சனம் பேப்பர் செய்தியைப் பாத்திட்டு தனிமைப்படுத்தல் சென்ரருக்கு ஏத்தப் போற சுகாதார அதிகாரியளோடை கொழுத்தாடு பிடிக்கிதுகள். தாங்கள் வீட்டை இருக்கப் போறம் எண்டு அடம் பிடிக்கினம்.

இதைப் போலை துறைசார்ந்த எல்லாரும் விட்டிட்டுப்போவம் எண்டு சிந்திக்கத் துவங்கிவிட்டால் நிலைமை என்னவாகும்? நான் எழுதின இந்த வரியை நீங்கள் வாசிச்சிட்டுக் கொடுப்புக்கை சிரிப்பியள். ஏனெண்டால் "போறவை போகட்டும் என்னட்டை ஆமி, நேவி , எயார்போர்ஸ் இருக்குதுதானே" எண்டு நினைப்பியள். ஆனால் ரெம்பிறரியள் எப்பவும் ரெம்பிறரியள்தான். அது ஒரு தற்காலிகத் தீர்வாகலாமே ஒழிய நிரந்தரமா அதைச் செய்யேலாது எண்டது பலரின்ரை அபிப்பிராயம்.

துறை சார்ந்த ஆக்களின்ரை அர்ப்பணிப்பையும் சேவைகளையும் உதாசீனப்படுத்திக் கொண்டு நாட்டை ஒரு சுபீட்சமான பாதைக்குள்ளை கொண்டு போகலாம் எண்டு நினைச்சால் அதைவிட ஒரு பிழையான எண்ணம் வேறை ஒண்டும் இருக்காது. அதுவும் இப்பிடி ஒரு இக்கட்டான நிலைமையளிலை மக்கள் கருத்தைக் கேட்டு மக்கள் பங்களிப்போடை நிலைமைகளைச் சமாளிச்சுக் கொண்டு போறதுதான் சிறப்பு மட்டுமில்லை அதுதான் சாதகமான வழிக்கும் நாட்டைக் கொண்டு போகும். இது அதை விட்டிட்டு துறைசார்ந்த ஆக்கள் கத்திறதை நாயள் கத்துதுகள்? எண்ட மாதிரி உதாசீனம் செய்து கொண்டு இருக்கிறது அபாயம் எண்டு நான் நினைக்கிறன்.

நாட்டிலை கொரோனா முன்னைக் காட்டிலும் மிக மோசமா அதுகும் மூண்டு மடங்காப் போய்கொண்டிருக்கேக்கை அரசைக் காப்பாத்துறதை மட்டும் குறியா வைச்சுக் கொண்டு செயற்படுகிறது அவ்வளவு உசிதம் இல்லை கண்டியளோ. அரசாட்சியும் வேணும். அதைச் சரியாத் தக்க வைச்சுக் கொள்ள மக்களும் வேணும். இதுக்கு நல்ல உதாரணம் முன்னம் நடந்த யுத்தம். அதிலை நீங்கள் யுத்தத்தை முடிக்க வேணும். பெரும்பான்மை மக்களிட்டை நல்ல ஆட்சி எண்டு பேரெடுக்க வேணும் எண்டு வெளிக்கிட்டு என்ன நடந்துபோச்சு எண்டு பாக்கிறியள்தானே? யுத்தத்திலை மக்களைப் பாராமல் நீங்கள் செய்த வேலையளாலை அதைச் சாட்டி உங்களை இந்தா கவுக்கிறன் எண்டு அமெரிக்கா நிக்கிறான். மழை ஓய்ஞ்சும் துவானம் விடேல்லை எண்டமாதிரி அது தொடர்பா நீங்கள் அனுபவிக்கிற கஷ்டம் என்ன எண்டு தெரியுமே? அதைப் போலை இது வேறை விறுத்தத்திலை வரும் எண்டு நினைச்சுக் கொண்டு காரியத்தைப் பாருங்கோ.அதைவிட்டிட்டு என்னைப் பிடிக்க வெள்ளை வானை அனுப்ப நினைக்காதையுங்கோ.

இப்படிக்கு
அப்பாவி அன்னமுத்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வல்லரசுகளே...

○ ம.பா. மகாலிங்கசிவம்

உலகம் இயற்கை அனர்த்தங்களாலோ கொவிட் 19 முதலிய நோய்க் கிருமிகளாலோ அழிந்து போகாமல் இன்றுவரை நிலைத்தி ருப்பதற்கான காரணங்களைச் சங்கப் புலவர்கள் தொடக்கம் இன்றைய புல வர்கள் வரை நன்கு ஆராய்ந்து பார்த்துள்ளனர்.

திருவள்ளுவர்
**பண்புடையார் பட்டு உண்டு உலகம் அஃது இன்றேல்
மண்புக்கு மாய்வது மன்** என்னும் குறளில் நற்பண்புகள் உடையவர்கள் இன்னமும் வாழ்வதாலேதான் உலகம் நிலைத்திருக்கிறது என்கிறார்.

ஆனால் சங்கப் புலவரான கடலுண் மாய்ந்த பெருவழுதி என்பவர் உலகம் நிலைத்திருப்பதற்கான பல காரணங்களை ஒன்றன்பின் ஒன்றாக அடுக்குகிறார். அவரது கருத்துக்களைக் கூறுவது புறநானூற்றின் 182ஆவது பாடல் "உண்டால் அம்ம இவ் உலகம்" எனத் தொடங்கும் இப்பாடலில் உலகம் உயிர்வாழ்வதற்குக் காரணமான பல பண்புகளை அடுக்கும் புலவர் இறுதியில்
'தமக்கென முயலா நோன்தாள்
பிறர்க்கென முயலுநர் உண்மையானே" எனக் கூறிப் பாடலை நிறைவு செய்கின்றார். பாடலில் உலகம் உயிர் வாழ்வதற்கான பல பண்புகள் ஆரம்பத்திற் கூறப்படுகின்றன. தமக்கெனச் சுயநலத்துடன் வாழாமல் விடா முயற்சியோடு பிறர்க்கென உழைப்பவர்கள் வாழ்வதுதான் உலகம் நிலைத்திருப்பதற்கான மிக முக்கியமாக காரணமாக இங்கு கூறப்படுகிறது. ஆனால் இன்றைய உலகமோ சுயநலத்தை மட்டுமே நோக்கமாகக் கொண்டுள்ளது. எமது விற்பனைப் பொருள்க ளால் எவர் மரணித்தாலும் பரவாயில்லை. விற்பனையும் இலாபமும் அதிகரித்தால் போதும் என்று நிறுவனங்கள் எண்ணுகின்றன. எத்தகைய ஆட்சியாளர் நாட்டு மக்கள் எக்கேடு கெட்டாலும் பரவாயில்லை ஆட்சி செய்து நாடு எத்தகைய ஆட்சியாளர் ஆட்சி செய்து நாடு எக்கேடு கெட்டாலும் பரவாயில்லை நாம் கேட்கும் வளங்களைத் தங்குடையின்றி தாரை வார்த்தால் போதுமென்று வல்லரசு நாடுகள் செயற்படு கின்றன. வல்லரசு நாடுகளின் சுயநலச் செயற்பாடுகள் பற்றிக் கவிஞர் கஸ்தூரி எழுதிய கவிதை இன்றைய தேன்கூட்டில் இடம்பெறுகிறது.

வல்லரசுகளே
நீங்கள் வாழ்வதற்காக
வாழ்பவர்களை வதைப்பவர்கள்
உங்கள் வல்லமை
ஆய்வு செய்யப்படுகையில்
வளர்முக நாடுகளே
வாழா வெட்டியாகின்றன
நீங்கள்
நிலவில் வரலாறு படைக்க
மண்ணை மானபங்கம் செய்பவர்கள்

வறுமையும் பிணியும்
உங்கள் வருகையால்
வளர்க்கப்படுபவை

உங்கள் தேசத்து
செஞ்சிலுவைச் சங்கங்களும்
சேதங்களைச் சேகரிப்பதில்லை
இருப்புக்களையே எண்ணிப் பார்க்கின்றன

உங்கள் நாட்டு கணக்காய்வாளர்கள்
இறப்புக் கணக்குகளை
இருப்புப் பக்கத்தில்
பதிந்து காட்டும் பட்டதாரிகள் உங்களோடு
சம்பந்தம் செய்து கொண்ட
சமாதான நாடுகள்
இங்கு பிரசவித்துக் கொண்டது
பிரச்சினைகளைத் தான்
உங்கள் விமான நிலையங்கள்
விஸ்தரிக்கப்படுகையில்
எங்கள் குடிசைகள் அல்லவா
கொளுத்தப்படுகின்றன

சமாதான நாடுகளில்
சாமர்த்தியமாய் நுழைந்து
ஆணிவேரை அறுத்துவிட்டு
வாடாது நிற்க
நீர் ஊற்றுபவர்கள் நீங்கள்
உங்கள் தலையீடுகளால்
தரைமட்டமாகிப் போன தேசங்களே அதிகம்
நீங்கள் பரவிய எய்ட்ஸ் இங்கே
இயற்கையானதல்ல என்றபின்
காற்றும் மழையும் கூட
சந்தேகப்படுகின்றன

நாளைய செயற்கைப் புயலுக்கு
சொந்தம் கொண்டாடப் போகும்
சர்வதேசப் பயங்கரவாதிகள் நீங்கள்..

கவிஞராக, சிறுகதை எழுத்தாளராக நாடக நெறியாளராக மட்டுமன்றி தமிழர் போராட்டம் அமைப்பு ஒன்றின் உறுப்பினராகவும் அறியப்பட்டவர் கஸ்தூரி. இவரது கவிதைகள் கஸ்தூரி கவிதைகள் என்னும் நூலாகவும் வெளிவந்துள்ளன. பெயரிடப்படாத நட்சத்திரங்கள் என்ற நூலில் இடம் பெற்ற வல்லரசுகள் என்ற கவிதையே மேலே தரப்பட்டுள்ளது.

**"வல்லரசுகளே
நீங்கள் வாழ்வதற்காக
வாழ்பவர்களை வதைப்பவர்கள்"** எனக் கவிதை தொடங்குகிறது. தமது சுகபோக வாழ்க்கைக்காக வளர்முக நாடுகளை வதைப்பவைகளாக வல்லரசு நாடுகள் இங்கே காட்சிப்ப டுத்தப்படுகின்றன.

**"உங்கள் வல்லமை
ஆய்வு செய்யப்படுகையில்
வளர்முக நாடுகளே
வாழா வெட்டியாகின்றன"** என்றும் பகுதி மிகக் குரூரமான யதார்த்தங்கள் பலவற்றைக் கொண்டுள்ளது. ஈராக், சிரியா, ஆப்கான் முதலிய நாடுகளில் இடம்பெற்ற போர்கள் எல்லாவற்றிலும் வல்லரசு நாடுகளின் புதிய கண்டுபிடிப்பான ஆயுதங்கள் இலாவகமாகப் பரிசோதிக்கப்பட்டு சீர்தி ருத்தப்பட்டன. புதிய மருந்தைச் செலுத்திப் பார்க்க உயிர் கொடுக்கும் பரிசோதனைச் சாலை எலிகளைப் போல வளர்முக நாட்டு வீரர்களும் மக்களும் தம்மை அறியாமலே பலி யாக இவர்களுக்குப் புதிய ஆயுதங்களை வழங்கினர்.

தமது நாட்டினதும் வளர்முக நாடுகளினதும் வளங்களை எல்லாம் வாரிச் சுருட்டியதால் வந்த பொருளாதார வளத்தை கொண்டே இவர்கள் விண்வெளிப் பயணங்களில் ஈடுபட்டவர். இதனைக் கவிஞர் கஸ்தூரி

**"நீங்கள்
நிலவில் வரலாறு படைக்க
மண்ணை மானபங்கம் செய்பவர்கள்"** என அழகாகச் சுட்டுகிறார். வளமாக இருந்த நாடுகளின் உள்ளூர்ப் பொருளாதாரத்தைச் சீர்குலைத்து தம்மை நம்பி இருக்கச் செய்து வறுமையையும் பிணியையும் ஏற்படுத்தியவர்களும் இவர்களே எனக் கவிஞர் குற்றஞ்சாட்டுகிறார்.

உதவிக்கென விரைந்தோடி வரும் அரச சார்பற்ற நிறுவனங்களும் சர்வதேச நாடுகளுக்கும் சார்வானவையாகவே உள்ளன என்பது கவிஞரது கருத்தாகும்.

**"உங்கள் தேசத்துச்
செஞ்சிலுவைச் சங்கங்களும்
சேதங்களை சேகரிப்பதில்லை
இருப்புகளையே எண்ணிப் பார்க்கின்றன"** என இந்நிலை கூறப்படுகிறது. வல்லரசுகளை எதிர்த்தவர்கள் மட்டுமன்றி ஆதரித்தவர்களும் நன்றாக வாழ்ந்ததாகச் சரித்திரம் இல்லை. ஈரானுக்கு எதிராக ஈராக்குக்கு ஆயுதங்கள் வழங்கி வளர்த்தெடுத்த அமெரிக்காவே பின்னர் அதன்மீது போர் தொடுத்தது. ரஷ்யாவுக்கு எதிராக ஆப்கானிஸ்தான் தீவிர வாதிகளுக்கு ஆயுதம் வழங்கி அவர்களை வளர்த்தெடுத்த அதே அமெரிக்காவே பின்னர் அவர்களுக்கெதிராகப் படையெடுத்துப் பின்லேடனை அழித்தது.

அமெரிக்கப் பேரரசின் உருவாக்கமே செவ்விந்தியர்கள் என்ற பழங்குடி இனத்தவரின் படுகொலைகள் மூலம் தான் என்பதையும் நினைவிற் கொள்ள வேண்டும்.

**"உங்கள் விமான நிலையங்கள்
விஸ்தரிக்கப் படுகையில்
எங்கள் குடிசைகள் அல்லவா
கொளுத்தப்படுகின்றன"**
என்ற கவிதை வரிகள் இத்தகைய சம்பவங்களை நினைவூட்டுகின்றன.

**"நீங்கள் பரவிய எய்ட்ஸ் இங்கே
இயற்கையானதல்ல என்றபின்
காற்றும் மழையும் கூட
சந்தேகப்படுகின்றன"**
என எய்ட்ஸ் நோய்க் கிருமிகள் வல்லரசுகளால் செயற்கையாகவே உருவாக்கப்பட்டு மனித குலத்தின் மீது ஏவப்பட்டன என்கிறார் கவிஞர் கஸ்தூரி. அவர் இன்று இருந்திருந்தால் கொவிட் 19 நோய்க் கிருமியைச் செயற்கையாக உருவாக்கிப் பரப்பியது என்று சந்தேகிக்கப்படும் சீனாவையும் இந்தப் பட்டியலிற் சேர்த்திருப்பார்.

**"நாளைய செயற்கைப் புயலுக்குச்
சொந்தங் கொண்டாடப்போகும்
சர்வதேச பயங்கரவாதிகள் நீங்கள்"** என்ற கவிதையின் இறுதிப் பகுதி கஸ்தூரியின் தீர்க்க தரிசனத்தை வெளிப்படுத்துகிறது. ரஷ்யா அண்மையில் பரிசோதித்த super weapon அல்லது Nu clear tsunami எனப்படும் ஆயுதம் செயற்கைச் சுனாமியை உருவாக்கி எதிரி நாடுகளை அழிக்கும் வல்லமை கொண்டது என்பது குறிப்பிடத்தக்க தாகும். தீர்க்க தரிசனத்துடன் கூடிய யதார்த்தமான கவிதை


நீங்களும் எழுதலாம்

உங்கள் படைப்புக்களும் சஞ்சீவியில் பிரசுரமாக வேண்டுமா?

- சிறுகதை
- பத்தி எழுத்து
- கட்டுரை
- கவிதை
- ஓவியம்

எதுவானாலும் அனுப்பி வையுங்கள்.
தரமானவற்றை பிரசுரிக்க காத்திருக்கிறோம்.
உங்கள் படைப்புக்களை அனுப்ப வேண்டிய முகவரி

சஞ்சீவி
உதயன் சஞ்சீவி
இல. 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
0773165555



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

○ ஆர்.லயனல்

# கோலிக்கு என்னாச்சு?



சதங்களைத் தொடர்ச்சியாகக் குவித்துவந்த கோலி, தற்போது களத்தில் நிலைத்து நிற்பதே பெரிய விடயம் என்று ஆகிவிட்ட நிலையில், நாளுக்குநாள் அவர் மீதான விமர்சனங்கள் அதிகரித்து வருகின்றன. நடைபெற்றுவரும் இங்கிலாந்து இந்தியா அணிகளுக்கு இடையிலான டெஸ்ட் தொடர் இந்த விமர்சனங்களை இரட்டிப்பாக்கியுள்ளது.

இந்தத் தொடரில் ஐந்து ஆட்டங்கள். இதனால் கோலி மீது பெரும் எதிர்பார்ப்பு இருந்தது. கோலியா? அண்டர்சனா? என்ற பனிப்போர்கூட ரசிகர்களால் ஏற்படுத்தப்பட்டிருந்தது. அண்டர்சனை எவ்வாறு எதிர்கொள்ளப் போகின்றீர்கள்? என்ற ஊடகவியலாளரின் கேள்விக்கு 'துடுப்பு மட்டையால்தான்' என்று பதில் வழங்கிய கோலியின் 'கிரந்தம்' இந்த பனிப்போரை இரட்டிப்பாக்கியும் இருந்தது. ஆனால், பற்றியெரியும் நெருப்பொன்றை தண்ணீர் ஊற்றி அணைத்துவிடுவதுபோல்தான் கோலியின் பெறுபேறுகள் அமைந்துள்ளன.

முதலாவது ஆட்டத்தில் தான் எதிர்கொண்ட முதல் பந்திலேயே , அதுவும் அண்டர்சனின் பந்துவீச்சில் கோலி ஆட்டமிழந்தார். 'கோல்டன் டக்' முறையிலான இந்த வெளியேற்றம் ஏமாற்றங்களைக் கொடுத்திருந்த நிலையில் இரண்டாவது டெஸ்ட் ஆட்டத்தின் முதலாவது இன்னிங்ஸிலும் கோலி பழைய நிலையில் இல்லை என்பது புலப்பட்டது.

42 ஓட்டங்களை அவர் பெற்றாராயினும் அவரால் முன்னைய வினைத்திறனுடன் விளையாட முடியவில்லை. ஏகப்பட்ட தடுமாற்றங்கள் அவரின் ஆட்டத்தில் தொனித்தன. குறிப்பாக 'அவுட் சைட் ஒப் த ஸ்ரம்ப்' என்று சொல்லப் படக்கூடிய பந்துவீச்சுக்கள் கோலியின் பெரும் பலவீனம் என்பதைக் கட்டியம் காட்டுகின்றன.

கோலி, சிமித், ரூட், வில்லியம்சன் என்ற இந்த நான்கு நிகழ்கால ரன் மெசின்களில் கோலி தற்போது தன்னிலை தளர்ந்து வருகின்றார். கடந்த ஒன்றரை ஆண்டுகளாக கோலி ஒரு சதத்தையேனும் பதிவுசெய்யவில்லை. ஆனால் அதற்குள் வில்லியம்சன், சிமித் இருவரும் தலா 4 சதங்களையும் ரூட் 5 சதங்களையும் பதிவுசெய்துள்ளனர் என்பது இங்கே கவனிக்க வேண்டிய விடயம்.

இதுவரை 70 சதங்களைக் குவித்து ஆஸ்திரேலியாவின் முன்னாள் ஜாம்பவான் பொண்டிங்கின் சதங்களைச் சமன்செய்து வைத்துள்ள கோலி அவரை எப்போதுதான் கடந்து செல்லப்போகின்றார்? கடந்து செல்வாரா? என்பதுதான் தற்போதுள்ள கேள்விகளும், எதிர்பார்ப்புகளும்.

விளையாட்டு

# செல்சி பலம்!

பரிஸ் செயின்ட் ஜேர்மனில் மெஸ்ஸி ஒப்பந்தமாகிவிட்டார். மெஸ்ஸி ஒப்பந்தம் செய்யப்பட்ட பின்னர் மில்லியன் கணக்கான ஜெர்சிகள் விற்றுத் தீர்ந்துள்ளன என்றெல்லாம் ஒருமுனையில் கொண்டாட்டங்கள் குதூகலிப்புக்கள் நிகழ்ந்து கொண்டிருக்கையில் மறுமுனையில் சத்தமில்லாமல் சம்பவம் செய்துள்ளது செல்சி அணி.



சர்வதேச கால்பந்தாட்ட சம்மேளனத்தின் தரப்படுத்தலில் முதலிடத்தில் பெல்ஜியம் உள்ளமைக்கு முக்கிய காரணம் ரோமலு லூகாகு. நட்சத்திர வீரரான அவர் அதிகம் கொண்டாடப்படாத ஒரு சம்பியன் வீரர். அவரை ஒப்பந்தம் செய்துள்ளது செல்சி. இங்லிஸ் பிறீமியர் லீக், ஐரோப்பிய சம்பியன்ஸ் லீக் என்பவற்றில் செல்சியும் தற்போது பலமான அணிதான். கவனிக்கப்பட வேண்டிய அணியும்கூட. இப்போது அந்த அணியோடு லூகாகு இணைந்திருப்பது செல்சியின் பலத்தை இரட்டிப்பாக்கியுள்ளது எனலாம்.

○ ஆர்.பிரகாஷ்

# அமல்

## அகதிகளின் அடையாளம்!



மத்திய கிழக்கிலும் ஆபிரிக்க நாடுகளிலும் இடம்பெறும் உள்நாட்டுப் போர், பயங்கரவாத அழிப்பு நடவடிக்கைகள் காரணமாகவும் வறுமையாலும் பல்லாயிரம் மக்கள் ஐரோப்பிய நாடுகளை நோக்கியும் அமெரிக்கா, ஆஸ்திரேலியாவை நோக்கியும் அகதிகளாகப் பயணப்பட்டுக் கொண்டிருக்கின்றனர். தம் பாரம்பரியமான வாழ்விடத்தைக் கைவிட்டு பயணப்படும் அவர்களின் பயணப்பாதை ஒன்றும் பஞ்சுமெத்தை அல்ல. அது கரடுமுரடானது. இன்னும் சொல்லப்போனால் உயிரைப் பணயம் வைத்தே ஒவ்வொருவரும் புலம்பெயர்ந்து கொண்டிருக்கின்றார்கள். அதிலும் குழந்தைகள் மற்றும் சிறுவர்களின் துன்பங்கள் சொல்லிமாளாதவை.

2015ஆம் ஆண்டு அய்லான் என்ற சிரியச் சிறுவன் கடற்கரையில் முகம் புதைத்தபடி விழுந்துகிடக்கும் ஒளிப்படங்கள் வெளியாகி உலகை கலக்கமடைய வைத்தன. இது இடம்பெற்ற வெகுசில நாள்களில் மியன்மாரின் ரக்கினே மாகாணத்தில் இருந்து பங்களாதேஷ் நோக்கி அகதியாகச் சென்ற ரொஹிங்யத் தம்பதிகளின் பச்சிளம் குழந்தையொன்று கடலுக்குள் தவறி வீழ்ந்து சடலமாக மீட்கப்பட்டது. இந்த இரு சம்பவங்களும் உலகத்துக்கு ஓர் செய்தியை உரத்துச் சொல்லின. 'அகதிகளின் பயணம் மிகப்பெரும் பாதிப்புக்களைக் கொண்டது' என்பதாக அமைந்த [illegible]. இதையடுத்து தன்னார்வ அமைப்புக்கள் பலவும் இந்த விடயத்தில் முழுமூச்சாக இறங்கின. மத்திய கிழக்கில் இடம்பெறும் போர் உடனடியாக முடிவுக்குக் கொண்டுவரப்பட வேண்டும், ஆபிரிக்காவில் உள்ள கிளர்ச்சிக் குழுக்கள் அமைக்கப்பட வேண்டும், அகதிகளுக்காக கடற்கண்காணிப்புக்கள் மேற்கொள்ளப்பட வேண்டும் உள்ளிட்ட கோரிக்கைகள் ஐக்கிய நாடுகள் சபையிடம் முன்வைக் கப்பட்டு போராட்டங்களும் நடத்தப்பட்டன.

ஆனால், காலப்போக்கில் இந்தக் குரல்கள் மௌனித்தே விட்டன. அகதிக் குழந்தைகளின் வாழ்வில் தற்போதும் இருண்மையே எஞ்சியுள்ளது. இந்த நிலையில்தான் ஒரு திருப்பத்தை எப்படியேனும் ஏற்படுத்திவிட வேண்டும் என்ற நோக்கத்தில் தன் நடை பயணத்தை ஆரம்பித்துள்ளாள் அமல்.

உலக உலா



### யார் இந்த அமல்?

அமல் என்பது ஒரு 'பெண் பொம்மை'. பிரபல தொண்டு நிறுவனமொன்று வடிவமைத்துள்ள இந்தப் பொம்மை சுமார் மூன்று மீற்றர் உயரம் கொண்டது. இரவும், பகலும் தங்களது பெற்றோருடன் உலகின் ஏதாவது ஒரு முனையில் அகதியாக செல்லும் இளம் குழந்தைகளின் அடையாளமாக மாறியுள்ள அமல் சிரியாவில் இருந்து இங்கிலாந்தின் மன்செஸ்டர் நகர் வரை சுமார் 8 ஆயிரம் கிலோமீற்றர் நடந்தே பயணப்பட்டு வருகின்றாள். கடந்த ஜூலையில் ஆரம்பித்த இந்தப் பயணம் நவம்பரில் முடிகின்றது. இதற்கிடையே 8 நாடுகளின் கலாசார விழாக்களிலும் அமல் கலந்துகொள்கின்றாள்.

காலத்துக்குக் காலம் மறக்கப்பட்டுவரும் மத்திய கிழக்கினதும் ஆபிரிக்காவினதும் பெருந்துயரின் சாட்சியாகவுள்ள அமல், பத்துடன் பதினொன்றாக இருந்துவிடாது தான் சொல்லவந்த செய்தியை அழுத்திச் சொல்லவேண்டும் என்பதுதான் எண்ணற்ற இதயங்களின் எதிர்பார்ப்பும்கூட.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

○ மயூ

# அட, இப்படியும் கோயில்களா?



ஒவ்வொரு ஊரிலும் தனித்துவமான, விசித்திரமான பழக்க வழக்கங்கள் ,நம்பிக்கைகள் என் பன இருக்கும். அவற்றில் சில ஏற்றுக்கொள்ளக் கூடியனவாக இருக்கும். சிலவோ" என்ன கொடுமை சரவணா" என்று நினைக்கத் தோன்றும். அவ்வாறு இந்தியாவின் சில பகுதிகளில் உள்ள விசித்திரமான சில விடயங்களைப் பார்ப்போம்.

### 1. காமக்யா கோயில், அசாம்.

அசாமில் உள்ள குவாக்டி என்ற ஊரில்தான் இந் தக் கோயில் இருக்கின்றது. இது மாறுபட்ட, ஏன் வித்தியாசமான கோயில் என்று கூடச் சொல்லலாம். இந்தக் கோயிலில் எந்தவொரு கடவுளையோ சிலைக ளையோ பார்க்க முடியாது.

இந்தக் கோயில் பெண்களைத்தான் வழிபடுகிறார்கள். இந் தக் கோயிலில் உள்ள மிகப் பெரிய ஆச்சரியம் என்னவென் றால், இந்தக் கோயில் குளத்தில் உள்ள தண்ணீர் ஒரு மாதத்தில் மூன்றுநாள் சிவப்பு நிறமாக மாறுமாம். உண் மையில் இது ஆச்சரியமான விடயம்தான்.

இந்தக் கோயிலைப் பற்றி பல கதைகள் கூறப்ப டுகின்றன. ஆனால் அவை எதுவும் ஆதா ரமற்ற கதைகள்தான்.



### எலிக்கோயில் கோயில், ராஜஸ்தான்

ராஜஸ்தானில் உள்ள இந்தக் கோயிலை எலிக் கோயில் என்று அழைக்கிறார்கள். உலகத்திலேயே அதிக எலிகள் ஒரே இடத்தில் இருப்பது இந்தக் கோயிலில்தான். 25 ஆயிரத்துக்கும் மேற்பட்ட எலிகள் இந்தக் கோயிலில் இருக்கின்றன என்று சொல்கிறார் கள்.

1917ஆம் ஆண்டு கங்காசிங் ராஜாதான் இந்தக் கோயிலைக் கட்டியிருக்கி றார். கார்னிமாதா என்கின்ற பெண் தெய்வத்துக்காகவே இந்தக் கோயில் கட்டப்பட்டிருக்கிறது. ஆனால் நாளடைவில் இந்தக் கோயில் எலிகளின் சாம்ராஜியமாக மாறிவிட்டது. இப்போது இங்கு காணிக்கை செலுத்துபவர் கள் கூட தங்கத்தில் செய்யப்பட்ட எலி உருவங்களைத்தான் கொடுக்கி றார்கள். இப்போது கிட்டத்தட்ட கார்னிமாதாவை மறந்து எலிக் கோயி லாகவே அனைவரும் கும்பிட ஆரம்பித்து விட்டனர்.

இங்கு எலிகள் குடித்துவிட்டு வைத்த எஞ்சிய பாலைத்தான் தீர்த்தமாக மக்கள் குடிக்கின்றனர். இப்போது இந்தக் கோயில்உலகம்முழுவதும்பிரபல்யமாகியிருக்கிறது. பெருமளவிலான சுற்றுலாவிகள் இந்தக் கோயிலுக்கு வருகின்றனர்.



### 3. மோட்டார் சைக்கிள் கோயில், ராஜஸ்தான்

இந்துக் கடவுள், கிறிஸ்தவக் கடவுள் என்று மதங்களுக்கான கடவுளர் களை அறிந்திருப்பீர்கள். அந்தக் கட வுள்களுக்கு கோயில்களும் கட்டியிருப் பார்கள். ஆனால் ராஜஸ்தானில் உள்ள சோட்டிலா என்ற ஊரில் புல்லட் மோட்டார் சைக்கிளை வணங்குகின்றனர்.

அந்த ஊரில் சில ஆண்டுகளுக்கு முன்னர் ஓம் சிங் ராட்டோ என்ற ஒருவர் இருந்திருக்கிறார். அவர் ஒரு புல்லட் மோட்டார் சைக்கிளை வைத்திருந்தார். அவர் ஒருநாள் கட்டுப் பாட்டை இழந்து விபத்துக்குள்ளாகி இறந்து விட்டார்.

ஆனால் அந்த மோட்டார் சைக்கிளுக்கு மட்டும் ஒன்றும் நடக்க வில்லை. விபத்து நடந்த பின்னர் அவரை மருத்துவமனைக்கும், மோட்டார் சைக்கிளை பொலிஸ் நிலையத்துக்கும் கொண்டு சென் றிருக்கிறனர்.

பொலிஸ் நிலையத்துக்குக் கொண்டு செல்லப்பட்ட மறுநாள் காலை புல்லட் மோட்டார் சைக்கிள் விபத்து நடந்த இடத்தில் இருந்ததாம். அதை யார் கொண்டு சென்றார்கள் என்பது தெரிய வில்லை. மீண்டும் பொலிஸ் நிலையத்துக்கு மோட்டார் சைக்கி ளைக் கொண்டு சென்றபோதும், மறுநாள் அது விபத்து நடந்த இடத்தில் இருந்ததாம்.

இதனால் குழம்பிப் போன கிராமத்தவர்கள் விபத்து நடந்த இடத் தில் புல்லட் மோட்டார் சைக்கிளை நிறுத்தி கோயில் எழுப்பி வழிப டுகின்றனர். ஓம் சிங் ராட்டோவின் ஆவிதான் இந்த வேலையைச் செய்கின்றது என்று முடிவு கட்டிய கிராமத்தவர்கள் மோட்டார் சைக்கிளை வணங்கினால் அவரது ஆவி, அந்த வழியால் செல் வோரைக் காப்பாற்றும் என்று நம்புகின்றனர்.





### விமானக் கோயில், ஜலண்டர்

பஞ்சாப்பில் உள்ள ஜலண்டர் என்னும் ஊரில் 200 விமானப் பொம்மைகளை வழிபடுகிறார்கள். என்ன கண் ணைக் கட்டுகிறதா?. சரி தொடர்ந்து படியுங்கள்.

ஏன் இப்படிச் செய்கிறார்கள்? சில வருடங்களுக்கு முன் னர் இந்த ஊரில் இருந்தவர்கள் பிழைப்புக்காக வெளி நாடு செல்லத் திட்டமிட்டிருக்கிறார்கள். சொந்த ஊரில் வறுமை, பிழைப்புக்கு வழியில்லை என்பதால் இந்த முடிவை எடுத்திருக்கிறார்கள். ஆனால் வெளிநாடு செல்ல இவர்கள் விசாவுக்கு விண்ணப்பித்தபோது, அவை அனைத்தும் நிராகரிக்கப்பட்டு விட்டது. அந்தக் கிராமத்திலும் நாலு விதமாகப் பேசும் நாலு பேர் இருக்கத் தானே செய்வார்கள். இதெல்லாம் தெய்வக்குற்றம், இதைச் சரி செய்வதற்கு உள்ள ஒரே வழி விமானத்தை வழிபட வேண்டும் என்று அந்த நாலு பேர் கொடுத்த ஐடி யாதான் இப்போது இந்தளவுக்கு வந்து நிற்கின்றது. அன்றிலிருந்து இப்போதுவரை அந்தக் கிராமத்தவர்கள் 200 விமானப் பொம்மைகளை வைத்து வழிபடத் தொடங்கியிருக்கிறார்கள். அவ்வாறு வழிபட்டால் வெளிநாட் டுக்கு விசா கிடைக்கும் என்பது அவர்களின் நம்பிக்கை.

(கொரோனாக் காலப் பதிவுகள்)

## விரைந்து பெறுவீர் தடுப்பு மருந்து....

○ வேலணையூர் சுரேஷ்

தீண்டத் தகாத நோயது தீண்ட்
தொற்றைத் தேடி வலிந்து வாங்க
தாண்டவ மாடுது கொரோனா முற்றி
தாண்டி வாழ்வது அவரவர் புத்தி
ஆண்டவ னாலும் முடியாது காக்க
அவரவர் தம்மைக் காப்பதைத் தவிர
பூண்டோடு அழியப் போகிறோம் உணர்க!
புரையோடி விட்டது கொரோனா அறிக

விளையாட் டாக எண்ணி விடாமல்
வினையைத் தேடி நொந்து கெடாமல்
தலைகாட் டாமல் முடிந்த வரையில்
தக்க இடத்தில் இருத்தல் தகுமாம்
நிலைப்பாடு உணர்ந்து தத்தம் பாட்டில்
நினைத்து ஒதுங்கி இருந்தால் வீட்டில்
தலைக்கேற முன்னம் அகற்றலாம் விரட்டி
தவறினால் கொரோனா போடும் புரட்டி!

ஒருநாள் குழந்தை உடலிலும் தொற்று
ஒருவாறு தப்பலாம் என்பது தப்பு
கரிநாள் ஆச்சுது வாழ்நாள் முழுதும்
கலங்குது நெஞ்சம் நாளும் பொழுதும்
அருவருப்பான சாவினை விடுத்து
அனைவரும் வாழலாம்; நோயைத் தடுத்து
பெருவிருப் பான அருமந்த வாழ்வைப்
புதுப்பிக்க இணைவோம்: சபத மெடுத்து

நோயின் குரூரம் விளங்குது மில்லை
நோய்கண்டு கண்கள் கலங்குது மில்லை
நோயெனில் பிடிக்க உயிர்வாயு இல்லை
நோயாளர் படுக்க இடம்கூட இல்லை
வாய்க்கு வந்ததைக் கதைக்கிறார்; கொரோனா
வந்தால் வரட்டுமாம் ஒருகை பார்ப்பதாம்
பேய்க்கு மருத்துவம் பார்க்கலாம் மனிதப்
பிறவிக்குப் பார்ப்பது கடினம்! கடினம்!

சளி தும்மல் காய்ச்சல் கணகணப்பு
சரியாகும் என நம்பி அயர்ந் திராமல்
வழி செப்பும் முறைகளைக் காதி லேற்று
மருத்துவரை நாடுவதே உகந்த காப்பு
வெளியினிற் சொல்லாமல் உம்முள் அடக்கி
வில்லங்க நோயை ஊரிற் பரப்பி
அழிவுக்கு உடந்தை ஆகாமல் விரைந்து
இன்றே பெறுவீர் தடுப்பு மருந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'ரீலோட் பொறியில்' இருந்து வாடிக்கையாளரை விடுவிக்கும்

# 'எயார் டெல்'

airtel 4G

INTRODUCING FREEDOM PACKS

## தொலைத்தொடர்புதுறையில் Freedom Packs களுடன் மறுவரையறை செய்கிறது




எயார்டெல் உலகத்தரம் வாய்ந்த, இடையூறுகள்அற்ற 4G வலைப்பின்னலில் 'Freedom Packs'களை அறிமுகம் செய்வதன் மூலம் தொலைத்தொடர்பு நிலப்பரப்பை மாற்றியமைத்துள்ளது. ஒரேயொரு Reload மூலம், எயார்டெல்' Freedom Packs' முழுமாதத்துக்கும் போதுமான மற்றும் சகல தரவு மற்றும் உரையாடல் நன்மைகளை வழங்குகின்றது. இதில் எந்த நிபந்தனைகளும் உட்படுத்தப்படவில்லை. இவை அனைத்தும் எயார்டெல்லின் உலகளாவிய தரம் வாய்ந்த, இடையூறு இல்லாத (Bufferfree) 4G வலைப்பின்னலில் சிறந்த அனுபவத்துடன் வருகின்றது.

இந்த 'Freedom Packs' மூலம், வாடிக்கையாளர்கள் ஒரு மாதத்திற்கு பலமுறை அதிக வெளிப்படைத்தன்மை, நிபந்தனையற்ற மற்றும் அதிக அழைப்பு நன்மைகளுடன் மீண்டும் Reload செய்யவேண்டிய அவசியத்தை எயார்டெல் நீக்கியுள்ளது. கொவிட்19 தொற்று நோய் காரணமாக இணைய பயன்பாடும் கணிசமாக அதிகரித்துள்ளது. புதிய Packs வாடிக்கையாளர் புரிதலை அடிப்படையாகக் கொண்டது மற்றும் புத்தாக்கமான வாடிக்கையாளர் சேவையைப் பற்றிய எயார்டெல்லின் உட்பார்வையை எடுத்துக்காட்டுகிறது.

வெவ்வேறு பயன்பாட்டுத் தேவைகளுக்கு ஏற்றவாறு நான்கு வெவ்வேறு விதங்களில் இந்த Packsகள் வெளிவந்துள்ளன. மேலும் ஒப்பிட முடியாத வாடிக்கையாளர் அனுபவத்துடன் 5 மடங்கு அதிக மதிப்பை வழங்குகிறது. இந்த packsகளில் ஒவ்வொன்றும் சமூக ஊடகங்கள், WFH>SFH உள்ளிட்ட எந்தவொரு இணையத் தேவைக்கும் பயன்படுத்தக்கூடிய தாராள அதிவேக தினசரி Dataவை உள்ளடக்கியது. உரையாடல் பயன்பாட்டுக்காக, அனைத்து Packsகளும் எல்லையற்ற எயார்டெல் அழைப்பு மற்றும் எந்தவொரு வலைப்பின்னல் அழைப்புக்கும்போதுமான நிமிடங்கள் மற்றும் SMS ஆகியவற்றை வழங்குகின்றன. அத்துடன் நிர்ணயிக்கப்பட்ட நிமிடங்களுக்கு அப்பால் எந்தவொரு தொலைத்தொடர்புக்கும் அழைப்பை ஏற்படுத்தினால் அதற்கான ஏனைய வலைப்பின்னல் அழைப்பு கட்டணத்தை 66%எயார்டெல் குறைத்துள்ளது. இது 'Freedom Pack' இன் மற்றொரு தனித்துவமான அம்சமாகும்.

எயார்டெல் தங்களது 'Freedom Pack'பயன்பாட்டிற்கு அப்பால் கூடுதலான Data வைத் தேடும் வாடிக்கையாளர்களுக்காக சிறந்த விலையுடன் கூடிய Data Top upஅட்டைகளையும் அறிமுகப்படுத்தியுள்ளது. இது அனைத்து Data பயனர்களையும் மகிழ்விக்கும் ஒரு அம்சமாகும். 'இந்த பிரம்மாண்டமான அறிமுகத்தின் மூலம், எயார்டெல் லங்கா தொலைத்தொடர்பு வாடிக்கையாளர்களுக்கு மிகவும் தேவையான எளிமையையும் சிறந்த மதிப்பையும் கொடுக்கிறது. பாவனையாளர்கள் இப்போது உலகத் தரம் வாய்ந்த 4G வலைப்பின்னலில், எந்தவொரு கட்டுப்பாடுகளையும் பற்றி கவலைப்படாமல், எங்களது 'Freedom Packs' களை பயன்படுத்தி அதிக பயன் அடையலாம். இப்போது எயார்டெல்லுக்கு மாற வேண்டிய நேரம் வந்துவிட்டது' என எயார்டெல் ஸ்ரீலங்காவின் முகாமைத்துவப் பணிப்பாளரும் பிரதம நிறைவேற்று அதிகாரியுமான அஷீஷ் சந்திரா கூறினார்.

இலங்கையில் ஒரு நாளில் சுமார் 3 மில்லியன் ரீசார்ஜ்கள் மொத்தமாக பயன்படுத்தப்படுகின்றன. இது 14 மில்லியனுக்கும் அதிகமான வயது வந்தோருடன் ஒப்பிடும்போது ஒரு அதிர்ச்சியூட்டும் புள்ளி விவரமாகும். சந்தையில் கார்ட்களின் பெருக்கத்தால் இந்த போக்கு தீவிரமடைகிறது. இது பொதுவாக உரையாடல் மற்றும் Data களுக்கான சிறப்புப் Packsகள், பயன்பாட்டின் நேர நிபந்தனைகள், தரம் குறித்த நிபந்தனைகள் மற்றும் சமூக ஊடகங்களில் கவனம் செலுத்தும் தனித்தனி Packs கள் மற்றும் வீட்டிலிருந்து வேலை செய்வது போன்ற அனைத்தையும் விரிவுபடுத்துகிறது. இதன் விளைவாக, பாவனையாளர்கள் அவர்கள் எதை செலவிடுகிறார்கள் என்பதையும், அவர்கள் அதற்கு ஈடாக வாங்குவதையும் கண்காணிக்க முனைகிறார்கள் எப்போதும் மீண்டும் ரீலோட் பொறிமுறைக்கு செல்கிறார்கள்.

எயார்டெல் மூலம்'Freedom Packs'பாவனையாளர்கள் இப்போது இந்த சுழற்சியை தவிர்க்கமுடியும், மாதத்திற்கு ஒரு முறை மட்டுமே Reload செய்யவேண்டும். பயன்பாட்டு கட்டுப்பாடுகள் இல்லாததால் ஒரு பாவனையாளர் தங்கள் மொபைல் தேவைகளை வழக்கமாக எடுத்துக்கொள்வதற்கு ஒரு தடவை Reload செய்வது போதுமானது. Packs களின் வடிவமைக்கப்பட்ட விலைப் புள்ளிகள் சராசரி Prepaid பயனர்களின் மாதாந்திர செலவீனத்தின் மதிப்பைவிட 5 மடங்கு வரை வழங்குகிறது. 2011 ஆம் ஆண்டு முதல் நாடு முழுவதிலும் இலங்கையில் தொலைத்தொடர்பின் மிகப் பெரிய முதலீட்டாக 'Freedom Packs' கருதப்படுகின்றது. எயார்டெல்லின் நோக்காத்துக்காக கட்டப்பட்ட 4G வலைப்பின்னல் 99%இடையூறு இல்லாத Streaming, குறிப்பிடத்தக்க வகையில் விரைவாக பதிவேற்றல் (Loading) நேரங்கள் மற்றும் 4G சமிக்ஞைகளைக் கொண்ட மேம்பட்ட உட்புற கவரேஜ் உள்ளிட்ட சிறந்த பாவனையாளர் அனுபவத்திற்கும் உறுதியளிக்கிறது.

**பாரதி எயார் டெல் லங்கா நிறுவனம் தொடர்பாக:**
2009 ஜனவரி 12ஆம் திகதி இலங்கையில் தமது நடவடிக்கைகளை ஆரம்பித்த பாரதி எயார்டெல் (எயார்டெல் லங்கா) நிறுவனம் தற்போது ஒரு மில்லியன் வாடிக்கையாளர் மட்டத்தை நெருங்கிய இலங்கையின் வேகமான தகவல் தொலைத் தொடர்பு வலயமாகும். தமது வணிக செயற்பாடுகளை ஆரம்பித்த 2009ஆம் ஆண்டிலிருந்து 3 வருட குறுகிய காலப்பகுதிக்குள் எயார்டெல் நாட்டில் எல்லா பகுதிகளிலும் பரந்து விரிந்த சேவையை வழங்கியதோடு இன்று நாடு முழுவதிலும் தமது சேவையை வழங்கி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. இலங்கை முதலீட்டுச் சபையின் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ள எயார் டெல் லங்கா தொலைத்தொடர்பு வலையமைப்பு சேவைகள் மற்றும் நிறுவன ரீதியான தீர்வுகள் உட்பட டிஜிட்டல் தொலைத்தொடர்பு சேவைகள் பலவற்றையும் வழங்குகின்றது. மேலதிக தகவல்களுக்கு www.airtel.lk என்ற இணையத்தளத்தை பார்வையிடவும்.

---

# ஜே.ஆர்.ஜெயவர்த்தனவும்...

(08-09ஆம் பக்கத் தொடர்ச்சி)



### அமைச்சர்களின் பிரதிபலிப்பு

ஜனாதிபதி ஜெயவர்த்தனவும் மூத்த அமைச்சர்களும் தொலைக்காட்சியில் தோன்றி வெளியிட்ட கருத்துகள் 1983 ஜூலை இனச்சங்காரத்தின் கவலைக்குரிய அம்சங்களில் ஒன்றாகும். வன்செயல்களில் பாதிக்கப்பட்ட தமிழர்களை நோக்கி அனுதாபமாக ஒரு வார்த்தை கூட சொல்லப்படவில்லை. ஜே.ஆர். வன்செயலில் ஈடுபட்ட சிங்களவர்களை மறைமுகமாகக் குற்றஞ்சாட்டினார். ஆனால், வன்செயல்களை சிங்கள மக்களின் தன்னியல்பான எதிர்வினை என்று கூறி நியாயப்படுத்தினார். பாதிக்கப்பட்ட தமிழர்களுக்கு நேசக்கரம் நீட்டுவதற்கு பதிலாக, ஜனாதிபதி பிரிவினைவாதத்தை தடைசெய்ய சட்ட மூலம் கொண்டுவரப்படும் என்று அறிவித்தார்.

இராஜாங்க அமைச்சராக இருந்த ஆனந்த திஸ்ஸ டி அல்விஸ் வன்செயல்களுக்கு வெளிநாட்டுச் சக்திகளும் மறைமுக கரங்களும் பொறுப்பு என்று பேசினார். தமிழர்களுக்கும் சிங்களவர்களுக்கும் இடையிலும் சிங்களவர்களுக்கும் முஸ்லிம்களுக்கு இடையிலும் கிறிஸ்தவர்களுக்கும் பௌத்தர்களுக்கு இடையிலும் மோதல்களை தூண்டிவிடுவதற்கு சதித்திட்டமொன்று இருப்பதாகவும் அவர் பேசினார். தமிழர்களைக் காப்பாற்ற இந்தியப் படைகள் இலங்கைக்கு வருவதற்கு 14 மணித்தியாலங்கள் எடுக்கும்.

ஆனால் சிங்களவர்கள் விரும்பினால், 14 நிமிடங்களுக்குள் தமிழர்களை ஒழித்துக்கட்டிவிட முடியும் என்று அமைச்சர் காமினி திசாநாயக்க எச்சரிக்கை செய்தார். வன்செயல்களின் விளைவாக மக்கள் அத்தியாவசியப் பொருட்களை வாங்குவதற்கு வரிசையில் நிற்கவேண்டியேற்பட்டுவிட்டது என்று வர்த்தக, கப்பல் போக்குவரத்து அமைச்சர் லலித் அத்துலத் முதலி கவலைப்பட்டார். நிதியமைச்சர் சேனா மற்றும் குட்டிகா பற்றி வரலாற்று விரிவுரை நிகழ்த்தினார்.

கைத்தொழில் மற்றும் விஞ்ஞான விவகார அமைச்சர் சிறில் மத்தியூ இந்திய பூச்சாண்டியை காட்டியதுடன் 83 ஜூலை வன்செயல்களுக்கு வழிவகுத்த சதித்திட்டத்தின் பின்னணியில் அந்நிய சக்திகள் இருந்ததாக கூறினார். அதை மறுதலித்த அமைச்சர் தொண்டமான் அரசாங்கத்துக்குள் இருந்த அல்லது அரசாங்கத்துக்கு நெருக்கமான சக்திகளே வன்செயல்களுக்கு பொறுப்பு என்று கூறினார்.

### போல் சீகார்ட்

83 ஜூலை வன்செயல்களுக்கு சிங்கள மக்களே கூட்டாக பொறுப்பு என்று அவதூறு கற்பிக்க ஜனாதிபதி ஜெயவர்த்தன முயற்சித்த போதிலும், சர்வதேச ஜூரர்கள் ஆணைக்குழுவைச் சேர்ந்த போல் சீகார்ட் போன்ற மதிப்புக்குரிய அவதானிகள் உண்மை நிலையை அம்பலப்படுத்தினார்கள்.

சீகார்ட் 'SriLanka ; A Mounting Tragedy of Errors' என்ற தனது அறிக்கையில் பின்வருமாறு கூறியிருக்கிறார் ;

"1983 ஜூலை வன்செயல்கள் சிங்கள மக்கள் மத்தியில் உள்ள இனவெறுப்பின் விளைவான தன்னியல்பான கிளர்ச்சியோ அல்லது சில வட்டாரங்களில் கூறப்படுவதைப் போன்று புலிகளினால் 13 படையினர் கொல்லப்பட்டதற்கு எதிரான மக்கள் கிளர்ச்சியோ அல்ல. வன்செயல்கள் ஆரம்பிக்கப்படுவதற்கு முன்னதாக 13 படையினர் கொல்லப்பட்ட செய்தி பத்திரிகைகளில் வெளிவரவுமில்லை. அந்த வன்செயல்கள் முன்கூட்டியே விரிவான முறையில் நன்கு திட்டமிடப்பட்டு நடத்தப்பட்டவையாகும்."

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒற்றைப்பனை: உறவின் உருவகம்!




○ லம்போ கண்ணதாசன்
(கிளிநொச்சி)

மதியம் பனங்காட்டு வெயில் அடித்துக்கொண்டிருந்தது. முற்றத்தில் ஒற்றை பனைக்கு கீழே விழுந்து கிடந்த காவோலைக்கு அருகில் நின்றுகொண்டு தபால்காரர் கோர்ன் அடிக்கிறார். வாங்கிப் பார்த்தால் பொதிக்குள் தனித்துவிடப்பட்டு நீண்ட தூரம் கடந்து வந்த சோகத்தில் ஒற்றைப்பனை.

ஈழத்தில் வளர்ந்து வரும் இளம் பன்முக கலைப்படைப்பாளியான பாலசுப்பிரமணியம் சிவாந்தினியால் 2021 ஆம் ஆண்டு எழுதப்பட்ட 80 பக்கங்களை கொண்ட இந்த நூல் ஜீவநதி வெளியீடாக மலர்ந்துள்ளது.

50 கவிதைகளை தன்னுள் பொதித்த ஒற்றைப்பனை எனும் இந்தக் கவிதை தொகுப்பு நூல் அதன் வரையறையை தாண்டி ,கடந்தகால வன்னி மக்களின் அன்றாட வாழ்வியலை, அழகிய வரிகள் மூலம் கதை சொல்லும் பாங்கில் வெளிப்படுத்தி நிற்கின்றது. குறிப்பாக 1990 களில் வாழ்ந்த மக்கள் எவற்றை எல்லாம் தம் வாழ்வின் அழகியல் அம்சங்கள், மறக்க முடியாத தருணங்கள் என்று நினைத்தார்களோ அவற்றை எல்லாம் இந்தநூலில் உள்ள 50 தலைப்புக்களில் தன் வரிகளால் நெய்திருக்கிறார் இந்நூலாசிரியர். ஒற்றைப்பனை,கவளச்சோறு,லாம்பு,பாடசாலைக்காதல், மழையின் தோரணங்கள், இரவல் தொலைக்காட்சி போன்ற கவிதைகளில் மேற்படி அம்சங்களைக் காணலாம்.

வட பகுதியில் வாழும் மக்களின் தொழில் மற்றும் பழக்கவழக்கங்கள் பண்பாடு என்பவற்றை மாத்திரமல்லாது, எம்மவர்கள் மத்தியில் இருக்கின்ற முக்கியமான பிரச்சினைகளான சீதனம் , பணம் மீதான மோகம்,தமிழ் இனம் மீதான வன்முறைகள் பெண்கள் மீதான வன்முறைகள் என்பவற்றை கவிதைகளூடே மிகவும் நாசூக்காக கூறியுள்ளார்.

**“திருமணம் எனும் மணச்சந்தையில்
சீதனம் எனும் விலை பேசி
விலையின் ஏற்ற இறக்கம் கூடிக்குறைய
விரைந்தோடியது அவள் வயதுமிங்கே.... ”**

என்று 'முதிர்கன்னி' என்ற கவிதையின் வரிகள் நீள்கின்றன. திருமணத்திலே மணப்பெண்ணின் சதைக்கு விலை பேசி சிதைக்கு காரியம் செய்யும் வரையான கொடுமைகளை இந்தக் கவிதை பேசி நிற்கின்றது.

“இந்நூலாசிரியரின் அண்ணன் காணாமல் ஆக்கப்பட்டார்,தாய் பூவுலகில் இருந்து விடை பெற்று விண்ணுலகம் சென்றுவிட்டார் ” இதனால் தான் போலும் அண்ணன் மீதும், தாய் மீதும் அவர் கொண்டுள்ள பாசத்தையும் பல கவிதைகள் சுமந்து நிற்கின்றன.

**“இத்தனையும் அள்ளித்தந்த மொத்த பனை மரமும்
பகலவனை பார்த்து
பல்லுக் காட்டிக் கொண்டிருக்க இளைய அண்ணான்ர இந்த
ஒற்றைப்பனை மட்டும் தன்
உசிரைத் தேடி வாடுது”**

தன் அண்ணன் எங்கோ இருந்து தங்களைத் தேடி வாடுவதாக படைப்பாளி அந்த ஒற்றைப்பனையை உருவகிக்கிறார். தனித்தலையும் ஒற்றைப்பனையில் தன் அண்ணனைக் காண்கிறார். இவ்வாறு தன்னுடையதும் தன் மக்களதும் வாழ்வியல் வாசனையை ஒவ்வொரு பக்கங்களிலும் வரிகளாகவும் வலிகளாகவும் தனித்தன்மையோடு பதித்திருக்கிறார் சிவாந்தினி.



# வெள்ளம் வரும் முன்னே...

○ ம.மயூரபாலன்

மலைப்பிரதேசமொன்றில் நடந்து சென்று கொண்டிருந்த மனிதன் ஒருவன் கால் தவறி விழுந்து விட்டான். விழுகின்ற பொழுதில் அதிர்ஷ்டவசமாக அவன் அந்த மலைச்சரிவிலிருந்த ஒரு மரத்தின் விழுதைப் பற்றிக் கொண்டான். இப்பொழுது அவன் அந்த விழுதிலே தொங்கிக் கொண்டிருக்கிறான். அந்த மரத்தின் உச்சியில் இருந்த தேன் கூட்டில் இருந்து சொட்டு சொட்டாக தேன் வடிந்து கொண்டிருந்தது. அவனும் அந்த தேனை குடிப்பதற்காக அங்கும் இங்கும் அசைந்து கொண்டிருந்தான். சிறிது நேரத்திலே அவன் கீழே பார்த்தால் அது அதல பாதாளமாக இருந்தது. மேலே பார்த்தால் அங்கு ஒரு கறுப்பு எலியும் வெள்ளை எலியும் அவன் பிடித்திருந்த விழுதை அரித்துக் கொண்டிருந்தன. அப்பொழுது அவன் "கடவுளே என்னை காப்பாற்றுங்கள் என கதறி அழுதான். அப்பொழுது "நான் தான் கடவுள் நீ கையை விடு நான் காப்பாற்றுகிறேன் என ஒரு அசரீரி வார்த்தை கேட்டது. அவன் மீண்டும் "கடவுளே என்னை காப்பாற்றுங்கள் என கூச்சலிட்டான். அப்பொழுதும் "நீ கையை விடு நான் காப்பாற்றுகிறேன் எனும் அசரீரி கேட்டது. அவன் சில வினாடிகள் யோசித்துவிட்டு "மேலே வேறு யாராவது இருக்கிறீர்களா? என கத்திக் கேட்டான். ஏனெனில் அவனது நம்பிக்கை அந்த அளவுக்குத் தான் இருந்தது. அவன் என்றோ ஒரு நாள் அந்த பள்ளத்தின் உள்ளே விழத்தான் போகின்றான். ஆயினும் அவனால் அந்த கைகளின் பிடியை விட்டு விட முடியவில்லை.

இதுதான் நமது தற்போதைய நிலைவரமும் . நாம் உயிர் எனும் இந்த விழுதிலே தொங்கிக் கொண்டு இருக்கின்றோம். இரவு, பகல் எனும் இரண்டு எலிகள் இந்த விழுதை அரிப்பதில் மிகவும் மும்முரமாக இருக்கின்றன. எப்பொழுது அவற்றின் வேலை முடிவடை கின்றதோ அப்பொழுது நமது கதையும் முடிவடைந்து விடும். வாழ்வின் முடிவிலே என்ன உள்ளது என்பது நமக்கு புரியாத ஒரு புதிராக உள்ளது. இவற்றின் இடையிலே அங்கும் இங்கும் கிடைக்கும் சிறு சிறு மகிழ்ச்சிகளுக்காக அலைந்து கொண்டு இருக்கின்றோம்.

கையை விடுவது என்றால் என்ன? நாம் நமது தலையினுள் எவ்வளவோ எண்ணக் கருத்துக்களை நிரப்பி வைத்திருக்கிறோம். அவற்றை விட்டுவிட நாங்கள் தயாராக இல்லை. இந்த எண்ணக் கருத்துக்கள் எல்லாம் நமக்கு சிறு வயதிலிருந்து மற்றவர்களால் புகட்டப்பட்ட விஷயங்களே அன்றி நமது சொந்த அனுபவம் அல்ல. யாரோ ஒருவர் மேலே சொர்க்கம் உள்ளது என்றார். நாமும் அதனை நம்பினோம். இன்னொருவர் உனது அவஸ்தைகளுக்கும் கஷ்டங்களுக்கும் காரணம் நீ உனது போன பிறப்பில் செய்தவற்றின் கர்ம பலன் என்றார். நமக்கு போன பிறப்பிலே நடைபெற்ற ஒன்றுமே நமது நினைவில் இல்லை. இருப்பினும் உங்களுக்கு அது எவ்வாறு தெரியும்? என நாம் ஒரு பொழுதும் கேட்கவில்லை. காலம் காலமாக சொல்லப்பட்டதை செய்துகொண்டு வருகின்றோம். அவற்றை ஏன் செய்கிறோம் என்ற கேள்வியே எழுவதில்லை. உண்மைப் பொருளை விட்டு மற்றைய எல்லாவற்றையும் பற்றிக் கொண்டோம்.

முனிவர் ஒருவர் இருந்தார். அவர் ஒரு பூனை வளர்த்தார். அவர் தியானம் செய்யும் போது அந்த பூனை அவருக்கு தொல்லை கொடுத்தது. எனவே தியானம் செய்வதற்கு முதலில் அந்தப் பூனையை அவர் வெளியே உள்ள ஒரு மரத்திலே கட்டி வைப்பது வழக்கமாக இருந்தது. அங்கிருந்த மக்களுக்கு அவர் தனது அறையை மூடி உள்ளே இருந்தார் என்பது மட்டுமே தெரிந்திருந்தது. உள்ளே அவர் உட்கார்ந்து எவ்வாறு தியானம் செய்கிறார் என்பது பற்றிய விவரங்கள் ஒன்றும் அவர்களுக்கு தெரிந்திருக்கவில்லை. ஆனால் மக்கள் அவர் மேல் மிகுந்த மரியாதையும் மதிப்பும் வைத்திருந்தார்கள். ஒரு நாள் அந்த முனிவர் சமாதி அடைந்து விட்டார். அதன் பின்னர் அந்த ஊர் மக்கள் அந்த முனிவருக்கு ஒரு திருவிழா நடத்தினார்கள். அந்த திருவிழாவின் முக்கிய அம்சமாக பூனை கட்டும் நிகழ்ச்சி நடைபெற்றது. ஊர் மக்கள் எல்லோரும் கூடி ஒரு பூனையை தேரில் ஏற்றி ஊரெல்லாம் சுற்றி வந்து பின்னர் ஒரு மரத்திலே கட்டுவார்கள். பின்னர் குறிப்பிட்ட நேரத்தின் பின்னர் அந்த பூனையை மீண்டும் தேரில் ஏற்றி செல்வார்கள். ஆனால் யாரும் ஏன் இவ்வாறு செய்கின்றோம் அதனால் நமக்கு என்ன பயன் என்ற கேள்வியை கேட்க துணியவில்லை. எல்லோரும் செய்தார்கள் என்ற காரணத்தினாலே அதனைச் செய்தார்கள். ஆனால் அந்த முனிவர் தினமும் செய்த முக்கியமான அம்சமான தியானப் பயிற்சியையும் அதன் காரணமாக அவருக்கு கிடைத்த அமைதி ,திருப்தி என்பன பற்றியும் யாரும் அக்கறைப்படவில்லை. செய்கின்ற விடயங்களை தொடர்ந்து செய்து கொண்டிருந்தால் எல்லாம் தானாகவே சரியாகிவிடும் என நம்பினார்கள். நமது வாழ்வில் நாம் மாற்றங்களை பெரிதாக விரும்புவதில்லை. தினமும் காலையில் எழுந்து காலைக் கடன்களை முடித்துவிட்டு வேலைக்கு செல்வோம். மாலையில் வீடு திரும்பியதும் சிறிதளவு வீட்டு வேலைகளில் தொலைக்காட்சி பார்ப்பதில் நேரத்தை செலவு செய்துவிட்டு பின்னர் நித்திரைக்கு போய்விடுவோம். மறுநாளும் ஏறத்தாழ அதே போன்றுதான் இருக்கும். அவ்வாறே போய்க் கொண்டிருக்கும் பொழுது வார இறுதிநாட்கள் வரும். அந்த நாள்களில் பிறந்தநாள் விழாக்கள், திருமண வைபவங்கள் என கொண்டாட்டங்கள், களியாட்டங்கள் நடைபெறும். வார இறுதி நாள்கள் முடிவடைந்த பின்னர் மீண்டும் அதே வட்டம் ஆரம்பமாகும். இப்பொழுது இந்த வட்டத்தில் எந்த ஒரு மாற்றமும் ஏற்படாது என்பது நமது நம்பிக்கை. எத்தனையோ மக்களது தினசரி வாழ்க்கை ஒரு கணப் பொழுதிலே தலைகீழாக மாறியிருக்கின்றதென்பதைப் பார்ப்பீர்கள். ஆனால் விபத்துக்க ளும் விபரீதங்களும் நமக்கு பாடங்களைக் கற்றுக் கொடுப்பதற்கு முன்னர் நாம் அவற்றை புரிந்து செயற்பட்டால் அதுதான் விவேகமாகும். வாழ்க்கை உள்ள போதே நிறைவை அனுபவியுங்கள்.

மௌன மொழி
51



கவிதைக்கு பரிசு 1000/=

இந்த ஒளிப்படத்தைப் பார்த்ததும் உங்கள் சிந்தனையில் உதிக்கும் கவிதைகளை 8 வரிகளுக்கு மேற்படாமல் உடனே எழுதி தெளிவாக முகவரியை குறிப்பிட்டு அனுப்புங்கள். மிகச் சிறப்பான ஒரு கவிதைக்கு ரூபா. 1000/ பரிசாகக் காத்திருக்கிறது. பாராட்டுப் பெறும் ஏனையவை மௌனமொழி பகுதியில் பிரசுரமாகும்.

உங்கள் கவிதைகள் எங்கள் கதவைத் தட்ட வேண்டிய கடைசி நாள்:
25.08.2021

அனுப்ப வேண்டிய முகவரி:
உதயன் சஞ்சீவி
இல.361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
மின்னஞ்சல் முகவரி: sanjeevi@uthayan.com
0773165555

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிணங்களின் ரயில் 2

விறுவிறுப்பான திகில் சித்திரக் கதை




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org